தமிழ் நாடு

ஆயுர்வேத மஹாமண்டலம்,

வெளியீடு 2.

# சித்தர் முறை.

MAHARAJAH SERFOGI'S SARASWATI
TANJORE



பிரசுரிப்பவர்,

வைத்திய சந்திரிகை கார்யாலயம்,

ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலை,

1953.

வடிவேல் பிரஸ்,

21306
General

उ

श्री सिद्धेश्वराय नम:

# சித்தர் முறை.

(…துரை பண்டிட், S. நாராயணய்யங்கார் அவர்கள் எழுதியது.)

தேவ சிகித்சை, மனித சிகித்சை என்ற இருமுறைகளிலும்
…ணப்படும் ரஸாயனங்களில் (காயகல்பங்களில்) ரஸமுறையே
…ற்றப்படுகின்றது.

काष्ठौषध्यो नागे नागं वङ्गेऽथ वङ्गमपि शुल्बे।
शुल्बं तारे तारं कनके कनकं च विलीयते सूते॥
एकोऽसौ रसराजः शरीरमजरामरं कुरुते।

இதன் பொருள் :— சரீரத்தில் ஜரையும் மரணமும் அணுகா
…ணம் செய்துகொள்ள வேண்டியது ஒவ்வொரு மனிதனின்
…மையாகும். அவ்விதம் செய்துகொள்ளுவதால் இகலோக
… அல்லது பரலோக சுகம் அனுபவிக்க இயலுகின்றது
…கு உபாயங்களை யோசிக்குங்கால் நூல்கள் பல மூலிகைகளைக்
…கின்றன ஆனல் அம்மூலிகைகளால் நாம் நினைக்கும்
…ணம் பல சித்தியடைய வழியில்லை ஏனெனில் ரஸாயன
…கைகள் அனைத்தும் நீண்டகாலம் ஸ்திரமாக நிற்கும் தன்மை
…ருந்தியவைகளாகக் காணப்படவில்லை. அவ்விதமே உலோகங்
…ம் இருக்கின்றன. கருவங்கத்தை ஓர் சட்டியில் உருக்கி
…ல் அந்த ரஸாயன மூலிகைகளுள் எதைப் பொடிசெய்து
…ட்டாலும் அப்பொடி கருவங்கத்தில் மடிந்துபோவதைக்
…ண்டாகக் காண்கிறோம். கருவங்கத்தை வெள்வங்கத்தில்
…போல கொடுத்தால் கருவங்கம் மடிந்துவிடுகிறது. வெள்
…ம் அவ்விதமே தாமிரத்திலும் தாமிரம் வெள்ளியிலும்
…ளி தங்கத்திலும் தங்கம் ரஸத்திலும் மடிந்துவிடுகின்றது.
…வ உலகத்தில் ரஸாயனப் பொருள்களாகக் கருதப்படும்
…த மூலிகைகளும் உலோகங்களும் மற்றொன்றில் மடிந்து
…ரும் தன்மை பொருந்தியவையாக காணப்படுகின்றன.
… இவைகளை உபயோகித்து சரீரத்தில் ஜரையும் மரணமும்
…ா வண்ணம் செய்துகொள்வதென்பது பகற்கனவே. இவை
…பயோகித்தால் ஏதோ சில காலம் அரோக வாழ்க்கை
பெறலாகுமேயின்றி நீடூழிகாலம் வாழ்வதென்ற பலன் கிட்டாது
நீடூழிகாலம் வாழ விருப்பமுள்ளவர்களுக்கு ரஸமுறை ஒன்று
தான் ஏற்ற சாதனமாகின்றது இந்த ரஸம் நெருப்பில் வே…
மலும் தண்ணீரில் நனையாமலும் காற்றில் உலரா…
சுபாவமுள்ளது பற்றி இதே ரஸாயனங்களுள் மு…

தெனப் போற்றப்படுகின்றது. இவ்விதம் ரஸமுறையை அனுபவித்துக் காயசித்தி பெற்றவர்களே சித்தர்களாவர். இவர்கள் எழுதியுள்ள நூல்களே சித்தர் நூல்கள்.

தமிழ் சித்தர்கள் 18 பேர்களெனக் கூறப்படுகின்றது. அவர்களாவன— திருமூலர், இராமதேவர், அகஸ்தியர், இடைக்காட்டார், தன்வந்த்ரி, வால்மீகர், கமலமுனி, போகர், மச்சமுனி, கொங்கணர், பதஞ்ஜலி, நந்திதேவர், சட்டமுனி, சுந்தரானந்தர், பாம்பாட்டியீசர், குதம்பைசித்தர், கருவூரார், கோரக்கர், ஆகிய இவர்களே. இவர்கள் கடைசியாக சமாதி யடைந்த ஸ்தலங்களும் ஒருவாறு ஊகிக்கப்படுகின்றன. அதாவது—சிதம்பரம், அழகர் மலை, (இது மதுரைக்குச் சுமார் 10 மைல் தூரத்திலுள்ளது) அனந்தசயனம், திருவண்ணாமலை, வைத்தீசுவரன்கோவில், எட்டுக்குடி, திருவாரூர், பழனி, திருப்புரங்குன்றம், திருப்பதி, ராமேசுவரம், காசி, சீர்காழி, மதுரை, ததிராஜபுரம், மாயவரம், கரூர், பொய்யூர், ஆகிய இவை வரிசையாக முன் சொன்னவர்களுடைய சமாதி ஸ்தலங்களாகும். இவர்கள் நீங்கலாக இன்னும் சில சித்தர்களும் பெரியோர்களும் காணப்படுகின்றனர். உதாஹரணமான — அழுகண்ணிச்சித்தர், அகப்பேய்சித்தர், பிண்ணாக்கீசர், சொரூபானந்தர், புலத்தியர், மவுனசித்தர் முதலியவர்களும் தேரையர், புலிப்பாணி, போன்றவர்களும் நூல்கள் செய்திருந்தபோதிலும் அவர்கள் முன் சொல்லிய 18 சித்தர்களுடன் சேர்க்கப்படவில்லை. இந்த சித்தர்கள் பெரும்பாலும் தமிழ் ஜில்லாக்களில் இருந்தவர்களெனக் கூறலாகும். கன்னடம், மலையாளம், தெலுங்கு முதலிய பாஷைகளில் பல வைத்திய நூல்கள் காணப்படுகின்றன ஆனால் அவை சித்தர் நூல்களாகக் கருதப்படவில்லை இவர்கள் அனைவரும் முன்சொன்னபடி ஐந்து கண்டங்களடங்கிய சித்தர் சாஸ்திரத்தை உலகிற்கு வெளியிட்டுள்ளார்கள் இவர்கள் செய்துள்ள நூல்களில் இவ்வைந்து கண்டங்களும் கலந்து காணப்படுகின்றன வடமொழி நூல்களில் போல ஒவ்வொரு கண்டமும் தனித்து விளக்கமாகக் கூறப்படவில்லை. வடமொழியில் சார்ங்கதரம் போன்ற நூல்களில் மானுட சிகித்சையும் தேவ சிகித்ஸையும் கலந்து சொல்லப்பட்டிருப்பதுபோல தமிழ் நூல்களில் பெரும்பாலும் இவ்விரண்டு சிகித்சை முறையும் கலந்தே காணப்படுகின்றன. இச்சிகித்சை முறைகளுக்கு நடுவில் வாதமும் மந்திரமும் கலந்தும் இருக்கின்றன.

வடமொழி தென்மொழி வைத்திய நூல்களுக்குள் ஒன்றுக்கொன்று சம்பந்தமே கிடையாதென்றும் இரண்டும் வெவ்வேறானவையென்றும் சிலரால் விவாதிக்கப்படுகின்றது. இந்த விவாதத்[illegible]றும் நியாயமில்லை யென்பதும் இவ்விவாதங்கள் [illegible]மாத்ஸர்யத்தால் பிறந்தவையென்றும் ஆலோசித்துப்

பார்த்தால் விளங்கும். சித்தர்களுள் அகஸ்தியர் என்பவர் முதன்மை பெற்றவர் என்பது மறுக்க முடியாத விஷயம். அன்னார் நூல்களில் பல இடங்களில் இரு மொழி வைத்தியங்களுக்கும் இருக்கும் இந்தத் தொடர்பு வெளியாகின்றது. இதற்குப் பல உதாஹரணங்களை காட்டக்கூடுமாயினும் விரிவு பற்றிச் சில உதாஹரணங்களை மாத்திரம் காட்டுகின்றோம்.

அகஸ்தியர் அருளிச்செய்த ஆயுர்வேதம் 1200-ல் பாட்டு 9

வேதநான் முகத்தானுள் வேதத்தில் விரித்துச்சொன்ன
கோதிலா விளைவினாலே குருமுனி யருளிச்செய்த
ஆதலாற் றமிழினாலே யதனையே யுணர்ந்துரைத்த
மூதுரை வாகடத்தின் முறைமையை மொழியலுற்றேன்.

வேதத்தை யறிந்த நான்முகக் கடவுள் விஸ்தாரமான ஆயுள் வேதத்தில் விவரித்துச் சொல்லிப் பிறகு குருசிஷ்ய பரம்பரையாக தோஷமற்றுப் பல வழிகளால் பெருகி முனிவர்கள் அருளிச்செய்த வாகட முறைகளைப் பூர்ணமாக அறிந்து அவைகளைத் தமிழ் பாஷையால் வெளியிடுகிறேன் என்பது இக்கவியின் பொருள்.

அகஸ்தியர் ஆயுள்வேதம் 1200-ல் பாட்டு 22—

திரைகட லுலகிலுள்ள சனங்களுக் கிடரில்லாமல்
உரைமறை புகலுமீச னுமைதனக் குபதேசித்து
விரைதமிழ் வடநூலுள்ள விருத்தியும் பலவும்தேர்ந்து
வரகவி யதனுற்செய்த வாகட மருளுவோமே.

அகஸ்தியர் ஆயுள்வேதம் 1200-ல் பாட்டு 25—

பாகிமா துமையாளுக்குப் பகர்ந்தது சொல்லக்கேளாய்
தீதிலா வடநூல் தன்னைச் செந்தமிழாகச் செய்த
நீதியா யெனக்கிந்நூலை நிறையவே யோதுவாய் நீ
ஆதியாம் பரமசற்குரு வாயுரு வேதம்தானே.

ஷை பாட்டு 49—

வடநூலதனை மிகவாய்ந்து மகிழ்ந்தே முனிவரிருடிகளும்
திடமாயிதனைக் கலைபகிர்ந்து செய்யும் புவிக்குளுலகோர்க்கு
அடவாய் வந்தபிணி முறையுமங்கக் குறிப்புசாஸ்திரமும் [ம்
அடவாய் விரித்தவிந் நூலையன்பாய் வகுத்தவா றிதுவே.

ஷை பாட்டு 1232—

வறைந்தார் கும்பமாமுனியும் வகுத்தவாயுள் வேதமிது
துறந்தார் சகல பிணிகளுக்கும் தோன்றும்சிங்க மின்னூலா
கறந்தார்உண்மை பொய்யகற்றி கருதும் வடநூலிதுவாகும் [ம்
அறைந்தாரா யிரத்திருநூறும் அன்பாலிதுவும் முற்றுமே.

இக்கவியில் வாகடம் என்ற சொல் வாக்படம் என்ற வட சொல்லின் திரிபாகும். அகஸ்தியர் அருளிச்செய்த இந்நூல் முற்றிலும் வடமொழியை யொட்டியதெனத் தெளிவாக இக்கவிகளில் கூறப்பட்டிருக்கின்றது.

இரு மொழி நூல்களையும் நன்கு பரிசீலனை செய்பவர்களுக்குப் பல விதங்களில் இவ்விரு முறைகளுக்குமுள்ள ஒற்றுமை நன்கு புலப்படும். திரிதோஷங்களை அஸ்திவாரமாகக் கொண்டே இவ்விரு நூல்களும் எழுதப்பட்டிருக்கின்றன. சில மூலிகைகள் சில தாதுக்கள் நீங்கலாக மற்றவையனைத்தும் இவ்விருமுறைகளுக்கும் பொதுவாகவிருக்கின்றன தசமூலம், திரிகடு, திரிபலை, பஞ்சகோலம், முதலிய வடமொழி வைத்திய பரிபாஷை சொற்கள் தமிழ் நூல்களில் விஸ்தாரமாகக் காணப்படுகின்றன அபினி, கசகசா, கோஷ்டம் இவைபோன்ற சரக்குகள் தென் நாட்டில் துர்லபமென்றும் இவை வடதேசத்து சரக்குகள் என்றும் யாவருமறிந்தவை. இச்சரக்குகளும் தமிழ் நூல்களில் விஸ்தாரமாகக் காணப்படுகின்றது கிராணீ, அதிசாரம், பிரமேகம், புவுந்தரம் முதலிய சொற்கள் வடமொழிகளே இவை தமிழ் நூல்களில் ஏராளமாகக் கையாளப்பட்டுள்ளன. நாடி, தாது, போன்ற சொற்களும் அவ்விதமே மருந்துகளின் செய்முறைகளும் ஒற்றுமையுள்ளவையாகவிருப்பதையும் பார்க்கலாம்

அகஸ்தியர் வைத்திய காவ்வியம் 1500-ல் பாட்டு 118—

பாரப்பா லோகமாரணங்கள் சொல்வோம் பரப்பிலே விடுகாதே யடக்கியாடு, ஆரப்பா வகையாகச் சொன்னேரேது அடைவாகச் சொல்லுகிறேன் அடக்கம்விட்டு. நேரப்பா வெள்ளீயம் தாளகத்தால்மாளும் நிலையாத காரீயம் மனோசிலையால்மாளும், காரப்பா வுருக்கதுவும் லிங்கத்தால்மாளும் கெடியகந்தி தாமிரத்தை கவ்வும்தானே.

இதன் பொருள் — தாளகத்தால் வெள்ளீயமும் மனோசிலையால் காரீயமும் லிங்கத்தால் இரும்பும், கந்தகத்தால் தாமிரமும், புடமிட பஸ்மமாகும் என்பதே. இப்பாட்டு வடமொழி சுலோகத்தை அப்படியே மொழி பெயர்த்திருப்பதாகத் தோன்றுகிறது. வடமொழி சுலோகமாவது:—

தாளேன வங்கம் திரிவிதம் ச லோஹம் நாரீபயோ ஹந்தி ச ஹிங்குலேன। நாகை: ஸுவர்ணம் ரஜதம் ச தாப்யை: கந்தேன தாம்ரம் சிலயா ச நாகம்॥

இதன் பொருள்— தாளகத்தால் வங்கமும் (வெள்வங்கமும்) லிங்கத்தால் மூன்று வித இரும்பும் கருவங்கத்தால் ஸுவர்ணமும்

நிமிளையால் வெள்ளியும், கந்தகத்தால் தாமிரமும், மனோசிலையால் கருவங்கமும் புடமிட பஸ்மமாகும் என்பதே. இதுபோலவே ரஸம், தாளகம் முதலியவைகளின் பஸ்ம முறைகளிலும் மிகவும் ஒற்றுமை தென்படுகிறது

இதுமாத்திரமின்றி வேறு பல உதாஹரணங்களையும் நாம் காட்டக்கூடும், அகஸ்தியர் ஆயுள்வேதத்தில் கண்டாத்திரி லேகியமென ஓர் லேகியம் கூறப்பட்டுள்ளது தமிழ் வைத்தியர் அனைவரும் கண்டாத்திரி லேகியமெனவே இப்பொழும் அதை அழைக்கின்றனர் வடமொழியில் **கண்டார்த்ரகம்** என வழங்கும் லேகியமே தமிழில் சில மாறுபட்ட எழுத்துக்களுடன் கண்டாத்திரி என அழைக்கப்படுகிறது. கண்ட = துண்டம் ஆர்த்ரகம் = இஞ்சி, ஆகவே கண்டார்த்ரகம் = இஞ்சித் துண்டங்களடங்கிய லேகியம் எனப்பொருள். இவ்விதமே கோடாசூரிக் குளிகை என் அகஸ்தியரில் சொல்லப்படுகின்றது. இது ஹிந்துஸ்தானிப் பெயர். கோடா = குதிரை, ஜூரி = ரஷிக்கை என ஹிந்துஸ்தானியில் பொருள் சொல்லப்படுகின்றது இது அச்வகஞ்சுகி என வடமொழியில் ஓர் மருந்தாக ரஸப்பிரகாச ஸுதாகரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்விதமே பல மருந்துகள் இருமொழி வைத்திய நூல்களிலும் சற்றும் பேதமின்றி கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

வடமொழி வைத்திய நூல்களிலில்லாத அபூர்வ சரக்கு தென்மொழி வைத்திய நூல்களில் ஒன்று மாத்திரம் காணப்படுகின்றது அது வீரமென்றும் சவ்வீரமென்றும் அழைக்கப்படுகின்றது ஜன்னி சைத்தியம் முதலியவைகளில் வீரம் சேர்ந்த மருந்து மிகவும் உயர்ந்ததென்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த ஒரு சரக்குதான் பெரும்பாலும் நாட்டு வைத்தியர்களுக்குப் புகழைக்கொடுக்கவல்லது என்பது நமது அபிப்பிராயம் ஆங்கிலத்தில் Collapse condition என்று சொல்லப்படும் நிலைமையில் நாடியை துரிதப்படுத்தி சைத்தியத்தை மாற்றி நோயாளியை உயிர் மூட்டுவதில் இந்த ஒரு சரக்கே ஒப்புயர்வற்றது. இதுரஸம்சேர்ந்த ஓர் வைப்புச் சரக்கே. இவ்விஷயம் வடமொழி நூல்களில் காணப்படவில்லை இந்த ஒரு விஷயம் நீங்கலாக மற்ற விஷயங்களில் இருமொழி வைத்தியங்களும் ஒரே ரீதியைப் பின்பற்றியிருக்கின்றன. இவ்விதம் மறுக்கவொண்ணாத ஒற்றுமையிருந்தும் ஒரு சிலர் இவ்விரு முறைகளுக்கும் சற்றும் ஒற்றுமையில்லையெனச் சொல்லுவது கேவலம் விதண்டாவாதமாகும். மற்றொன்றைக் குறைத்துச் சொல்லுவதும் தூஷிப்பதும் மாத்ஸர்யம் பற்றியே யென்பதை அறிஞர்கள் அறிவார்கள். தென்னாட்டிற்குத் தென்மொழி வைத்தியமே இசையுமென்று சிலர் சொல்லுவதும் அறிவீனமாகும். எவ்வளவோ ஆயிரம் மைல்

களுக்கு அப்பாலுள்ள வைத்திய முறைகளால் இந்தியா முழுவதும் பயனடைவதையும் நமது தென்னாட்டு வைத்தியர்கள் வேறு சீமைக்குச் சென்று தமிழ் வைத்தியம் செய்து அவ்விடமுள்ள நோயாளிகளுக்கு குணம் செய்வதையும் கண்கூடாகக் காண்பவர்கள் இப்பிதற்றலை எவ்விதம் ஏற்கக்கூடியும். ஹிமயமலையில் உண்டாகும் கோஷ்டமும் அபினி முதலியவைகளும் தென்னாட்டில் மருந்துகளாக உபயோகித்து குணம் காணுகிறோம். இவ்விதமே தென்னாட்டில் விளையும் சந்தனக்கட்டை, ஏலம் முதலியவைகள் வடநாட்டில் மருந்துகளாக உபயோகிக்கப்படுகின்றன. ஆகவே இக்கூற்றுக்குச் சற்றும் ஆதாரம் காட்ட முடியாது.

முப்பூ வென்று ஓர் விஷயம் தமிழ் நூல்களில் காணப்படுகின்றது. வாதமுப்பூவென்றும், வைத்தியமுப்பூவென்றும் அது இருவிதமாக வகுக்கப்பட்டிருக்கின்றது. வாதமுப்பூ என்பது ரஸவாதத்திற்குத் தேவையானது. வைத்திய முப்பூ வென்பது மருந்துகளில் சேரக்கூடியது. முப்பூ என்பது மூன்று சரக்குகளால் ஆகியது அதன் விவரம் பல நூல்களில் பல விதமாகக் கூறப்பட்டிருக்கின்றது. ஆகவே அதன் முறையை அனுபவத்தில் அறிந்தவர் இல்லையென்றே கூறலாகும். உண்மையைக் கூறுமிடத்து முப்பூவின் உதவிபெற்று வைத்தியம் செய்யும் சுதேச வைத்தியர் ஒருவரும் தற்காலம் கிடையாது. வடமொழி வைத்திய நூல்களுக்கும் தென்மொழி வைத்திய நூல்களுக்கும் உள்ள வித்தியாசம் மூன்று முதலாவது—வடமொழி நூல்கள் பஸ்மசிந்தூரம் முதலிய மருந்துப் போக்குகளை ஒளிவு மறைவின்றி பட்டவர்த்தனமாக கூறும். படிப்பவர்களுக்குச் சந்தேகம் ஜனிக்காத விதமாக வியக்தமாக விஷயங்களைச் சொல்லுகின்றன. தென்மொழி நூல்களோ வெனில் கை மருந்துப் போக்குகளை மறைத்தும், ஒளித்தும், புரியாவண்ணமும் கூறும். இரண்டாவது — வடமொழி நூல்களில் கூறியுள்ள ஒவ்வொரு மருந்து சரக்குகளுக்கும் ஒவ்வொரு வியாதியிலும் உபயோகம் காணப்படுவதுடன் ஒவ்வொரு வியாதியையும் தனித்தனி அத்தியாயமாகப்பிரித்து அதற்கேற்ற மருந்துகளும் தனித்தனி அத்தியாயங்களில் காணப்படுகின்றன. தென்மொழி நூல்களில் இவ்விதமின்றி ஓரே குழப்பமாக காணப்படும். மூன்றுவது—வடமொழி நூல்களில் கூறப்படும் மருந்துகள் அனைவற்றும் குற்றமற்றவை. நிர்ப்பயமாக அவைகளை யாரும் உபயோகிக்கலாம். மருந்தால் கெடுதியென்பது காணுது. தென்மொழி நூல்களில் சில மருந்துகள் நிச்சயமாக நோயாளிக்கு தொந்திரவை உண்டுபண்ணும். ஆகவே நிர்ப்பயமாக அவைகளை உபயோகிப்பது கூடாத காரியம். இடிவல்லாதி, ரஸப்பதங்கம் முதலியன இதன் இனத்தைச் சார்ந்தவை.

தமிழ் ஆராய்ச்சியாளர் சித்தர் நூல்களைப் பற்றி வேறு விதமாக அபிப்பிராயப்படுகின்றனர். தமிழ் சித்தர் நூல்கள் அனைத்தும் சுமார் 200 அல்லது 300 வருஷங்களுக்குள் தொகுக்கப்பட்டவையென்பது அவர்களின் ஆராய்ச்சி நாம் சந்தித்த தமிழ் பண்டிதர்கள் அனைவரும் இவ்விதமே அபிப்பிராயப்படுகின்றனர். சில வருஷங்களுக்கு முந்தி சென்னை செனட் சபையில் தமிழைப் பற்றி தொடர்ச்சியாக செய்து வந்த உபன்யாசங்களில் சித்தர் நூல்களைப்பற்றிப் பேசும்பொழுது அவை சுமார் 300 வருஷங்களுக்குட்பட்ட காலத்தில் எழுதப்பட்டவையென உபன்யாசகர் பேசியது தினசரிகளில் வெளி வந்துள்ளது. அதோடு கவித்திறமையும் பண்டிதர்களால் ஒப்புக்கொள்ளப்படவில்லை. இவ்வபிப்பிராயம் சுதேச வைத்தியர்களுக்கு அருவருப்பையுண்டாக்குகின்றது. வெகு காலத்திற்கு முன்பே இந்நூல்கள் எழுதப்பட்டனவென்று அபிப்பிராயம் கொடுப்பது அவர்களுக்கு ஆனந்தத்தை விளைவிக்கும். இந்நூல்களின் பழைமையை ஒரு நிபுணரும் அங்கீகரிக்கவியலவில்லை ஓர் நிபுணர் அபிப்பிராயம் சொல்லும்பொழுது "சித்தர்களும் அவர்கள் முறைகளும் மிகப் பழமையானவைகளாக இருக்கலாம் ஆனால் அச்சிட்டு வெளி வந்துள்ள நூல்கள் மாத்திரம் சமீபத்தில் தொகுக்கப்பட்டவை" எனக் கூறினர். நூல்கள் புதியவையா அல்லது பழைமை பொருந்தியவையா என்பதில் கவனம் செலுத்துவதில் அதிக பலன் இல்லை. அதிலுள்ள முறைகள் அற்புதமானவையென்பதில் சற்றும் ஆக்ஷேபமிருப்பதற்கில்லை.

சித்தர் முறை என்பது சித்தர்கள் இயற்றியுள்ள முறை ரஸம், கந்தகம், பாஷாணம், முதலியவைகளால் எல்லா நோய்களுக்கும் செய்யப்படும் சிகிச்சைக்குப் பொதுவில் சித்தர் முறை எனப்பெயர் அதாவது உலகத்தில் உண்டாகும் நோய்களை விலக்க மூலிகைகளாலும் ரஸம், கந்தகம், முதலியவைகளாலும் சிகித்சை செய்யலாம். மூலிகைகளால் செய்யப்படும் சிகித்சையை மானிட சிகித்சை என்பவர். ரஸம், கந்தகம், முதலியவைகளால் செய்யப்படும் சிகித்சைக்கு தேவ சிகித்சை எனப் பெயர். வடமொழியில் மானிட சிகித்சையையும் தேவ சிகித்சையையும் தனித் தனியாகப்பிரித்து நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. சரகம், சுசுருதம், அஷ்டாங்க ஹிருதயம், அஷ்டாங்க சங்கிரஹம் போன்ற நூல்கள் மானிட சிகித்சையை விவரிக்கின்றன. ரஸரத்ன ஸமுச்சயம், ரஸரத்னாகரம், ரஸேந்திரசிந்தாமணி, ரஸேந்திர ஸாரஸங்கிரஹம், ரஸப்பிரகாசஸுதாகாரம், ரஸசூடாமணி, போன்ற நூல்கள் தேவ சிகித்சையை விவரிக்கின்றன. இந்த மூலக்கிரந்தங்களைப் பார்த்து பின் வந்த மேதாவிகள் இரு சிகித்சையையும் சேர்த்து ஒரே நூலாக எழுதத் தலைப்பட்டனர். சார்ங்கதரம், பாவப்ரகாசம், யோகரத்னாகரம், பைஷஜ்யரத்னவளி

வைத்தியசிந்தாமணி,ஸ்ஹஸ்ரயோகம்,முதலிய நூல்கள் இந்தஇரு முறைகளையும் போதிக்கின்றன. ஓர் வண்டிக்கு இரு சக்கரங்களும் தேவையாக விருப்பதுபோல் வைத்தியருக்கு இரு முறைகளும் அவசியமே. இவற்றுள் ஒவ்வொரு முறையை மாத்திரம் அப்ய சித்து மற்றொரு முறையின் சகாயமின்றியே கிசித்சை செய்து வருபவர்களும் பலர் இருக்கின்றனர் இரண்டு முறைகளும் சேர்ந்திருப்பது விசேஷமான பலனளிக்கு மென்பதை யாரும் மறுக்கமுடியாது. இந்த இரண்டு முறைகளிலும் மிகவும் தேர்ச்சி பெற்ற வாக்படாசார் சற்று உயர்வாகவே தேவ சிகித்சையை வர்ணித்துள்ளார். ரஸரத்ன ஸமுச்சயத்தில் (இதற்கு ரஸவாக் படம் என்று ஓர் பெயர் உண்டு) வாக்படர் கூறுவதாவது—

स्वल्पमात्रोपयोगित्वात् अरुचेरप्रसङ्गत:
क्षिप्रमारोग्यदायित्वात् ओषधीभ्योऽधिको रस:॥

இதன் பொருள்— ரஸம், கந்தகம், பாஷாணம் முதலிய பஸ்மசிந்தூரங்களால் செய்யப்படும் சிகித்சைக்கு ரஸ சிகித்சை எனப் பெயர் மூலிகைகளால் செய்யப்படும் சிகித்சையைக் காட்டிலும் ரஸசிகித்சை மிகவும் உயர்வானது அதற்குக் காரணங் கள் மூன்று. முதல்காரணமாவது — ரஸ சிகித்சையில் மருந் தின் அளவு சுவல்பமாக இருக்கின்றது. உதாஹரணமாக காய்ச் சலில் ரஸ சிகித்சை (இதுவே தேவ சிகித்சை) செய்வதாக வைத்துக்கொள்வோம் பாஷாண பஸ்மம், ஜ்வராங்குசம், அல் லது கஸ்தூரிபைரவம் முதலிய காச்சல் மருந்துகளில் எதைக் கொடுத்தாலும் ஒரு குன்றுமணி அளவு முதல் இரண்டு குன்றி யளவுவரை கொடுக்கக் கூடியதாக விருக்கின்றன இந்த அளவைத் தேனில் குழைத்துக் கொடுக்கின்றோம் இதே காச்சலுக்கு மூலிகை சிகித்சை செய்தால் காய்ச்சலில் சொல்லியுள்ள எந்தக் கஷாயமும் அதமபக்ஷமாக ஒரு அவுன்சு முதல் இரண்டு அவுன்சு வரை ஒரு வேளைக்குக் கொடுக்கவேண்டியதாகின்றது. இச்சிகித் சையால் ரோகிக்கு ஓர் அருவருப்பு உண்டாகின்றது முன் செல்லிய ரஸசிகித்சையில் மருந்தின் அளவு அல்பமாக இருப்பது பற்றி அருவருப்பு ஏற்படுவதில்லை இது இரண்டாவது காரணம் மூலிகை சிகித்சையைக் காட்டிலும் ரஸ சிகித்சையால் நோய் சீக்கிரம் விலகி சீக்கிரம் ஆரோக்யமுண்டாகின்றது இது மூன்று வது காரணம். ஆக இம் மூன்று காரணங்களால் ரஸ சிகித்சை உயர்ந்ததெனக் கூறப்படுகின்றது இவைகளைத் தவிர நான்கா வது காரணமும் ஒன்று சொல்லக்கூடும். அதாவது பொதுவாக எந்த நோய்க்குச் சிகித்சை செய்தபோதிலும் நோயாளியின் சரீரக்கூறை கவனிக்கவேண்டியது முக்கியம். அதோடு அந் நோய் திரிதோஷங்களில் எந்த தோஷம் அல்லது தோஷங்களின் பிரகோபத்தால் வந்திருக்கிறதென்பதையும் முக்கியமாக கவனிக்க வேண்டும் இதை நிச்சயம் செய்வதால் தான் சிகித்சை செய்ய

முடியும். ஏனெனில் வடமொழி வைத்ய நூல்களில் ஒவ்வொரு நோயிலும் திரிதோஷப்பிரகோபத்திற்கு ஏற்றவாறு மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. உதாஹரணமாக காச்சல் என்றால் அது திரிதோஷங்களில் எந்த தோஷத்தின் பிரகோபத்தால் ஏற்பட்டதென்பதை நிர்ணயித்தால்தான் அதற்குத் தகுந்த மருந்து கொடுக்கமுடியும். அவ்விதம் நிர்ணயிக்காவிட்டால் மருந்தே கொடுக்கமுடியாது. இவ்விதம் நிர்ணயிப்பது படித்த வைத்தியர்களுக்கே சாத்தியமாகும். சாதாரண வைத்தியர்களுக்கு நிர்ணயம் சுலபமல்ல. தேவ சிகித்சையிலோவெனில் இந்த சிரமம் கிடையாது. காய்ச்சல் என்று தெரிந்தால் போதும். அதன் வகுப்பு நன்றாகப் புலப்படாவிட்டாலும் சிகித்சை சுலபம். ஆகவே இதை நான்காவது காரணமாகவும் முக்கிய காரணமாகவும் கொள்ளலாம்.

சித்தர் முறை என்பது வடமொழி வைத்தியத்திற்கும் தென்மொழி வைத்தியத்திற்கும் பொதுவான பெயராக இருக்கின்றது. வடமொழியில் உள்ள தேவ சிகித்சைக்கு சித்தர் முறை என்று பெயர் இருப்பதுபோல் தமிழ் வைத்தியத்தில் அமையவில்லை. தமிழில் சித்தர்கள் மூலிகை சிகித்சையையும், ரஸ சிகித்சையையும் சேர்த்தே பெரும்பான்மையான நூல்களை எழுதியுள்ளார்கள். வடமொழியில் ஆயுர்வேதமென்றால் மூலிகை சிகித்சையையே அது குறிக்கும். தமிழிலோவெனில் ஆயுர்வேதமென்றால் இரு முறைகளையும் தனித்தனி வகுக்காமல் இரு முறைகளையும் ஒன்றுபடுத்தியே நூல்கள் எழுதியிருப்பதால் ஒரு பெயரால் இருமுறைகளும் அழைக்கப்படுகின்றன. வடமொழியில் பல சித்தர் நூல்கள் அச்சிடப்பட்டும், பல அச்சிடப்படாமலும் இருக்கின்றன. ரஸாங்குசம் பைரவதந்த்ரம், நந்திஸம்ஹிதை, ஸ்வச்சந்தபைரவம், மந்தான பைரவதந்த்ரம், காகதந்த்ரம், சண்டீச்வரர், வாஸுதேவ தந்த்ரம், ரிஷ்யசிருங்கர், க்ரியாதந்த்ர ஸமுச்சயம் ரஸேந்திர திலகம், பாலுகி தந்த்ரம், மர்யவதந்த்ரம், மகாதேவ தந்த்ரம், நரேந்த்ர தந்த்ரம், ரத்நாகரம், ஹரீச்வர தந்த்ரம் இவை முதலியவை ஆகிய நூல்களாக இருந்திருக்கின்றன. இவையனைத்தையுமுணர்ந்து அவைகளிலுள்ள சார பாகத்தைச் சுருக்கி வாக்படர் ரஸரத்நஸமுச்சயம் என்ற நூலை இயற்றியுள்ளார்.

வடமொழியில் சித்தர்கள் 27 இருந்ததாகத் தெரிகின்றது. அவர்களாவன :— ஆதிமர், சந்திரஸேனர், ராவணன், விசாரதர், கபாலீ, மத்தர், மாண்டவ்யர், பாஸ்கரர், சூரஸேநர், ரத்னகோசர், சம்பு, ஸாத்விகர், நரவாகனர், இந்திரதர், கோமுகர், கம்பலி, வ்யாடி, நாகார்ஜுநர், ஸுரானந்தர், நாகபோதி, யசோதனர், கண்டர், காபாலிகர், பாணன், கோவிந்தர், லம்பகர், பலி. இவர்களுள் ராவணன், பாணாசுரன், பலிச்சக்ரவர்த்தி இந்த மூவரும்

புராணப்பிரசித்தி பெற்றவர்கள். ஹிந்துக்களில் இவர்களை அறியாதார் இலர். கோவிந்தர் என்பவர் அத்வைதாசார்யர்களான ஸ்ரீ சங்கர பகவத் பாதாளுடைய குரு என்று தோன்றுகிறது. அவர்கள் ரஸஹிருதயம் என்ற நூலை இயற்றியுள்ளார். இப் புத்தகம் பல பிழைகளுடன் பம்பாயில் அச்சிடப்பட்டிருக்கின்றது சித்தர்களாவதற்கும், தங்கம் வகையறு செய்வதற்கும் வேண்டிய உபாயங்களை அந்நூல் போதிக்கின்றது. இந்த ஸித்தர்களும் முன் சொன்ன தமிழ் சித்தர்களும் வெவ்வேறாக இருப்பது புலப்படும். வடமொழியிலுள்ள சித்தர் நூல்கள் ஒவ்வொன்றும் ஐந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன: ரஸகண்டம், பிரயோககண்டம், ரஸாயனகண்டம், வாதகண்டம், மந்திரகண்டம் என்பவைகளே.

1. ரஸகண்டம் :- இப்பாகத்தில் ரஸம், கந்தகம் முதலியவை களின் சுத்தி, பஸ்மசிந்தூர முறைகள், யந்திரவிதி, புடவிதி, ரஸம் முதலியவைகளின் குணங்கள் ஆகிய இவைகள் தனியாக விளக்கி கூறப்பட்டுள்ளன

2. பிரயோககண்டம் :- இப்பாகத்தில் ஒவ்வொரு நோய்க் கும் பற்பல மருந்துமுறைகள் கூறப்படுகின்றன.

3. ரஸாயன கண்டம் :- இதில் பலவித காயகல்ப முறைகள் கூறப்படுகின்றன.

4. வாதகண்டம்:- இதில் கீழ்த்தரமான உலோஹங்களை அதாவது தாமிரம், ஈயம், முதலியவைகளை உயர்ந்த லோஹமாக அதாவது தங்கம், வெள்ளி இவைகளாக மாற்றும் முறைகள் கூறப்படுகின்றன. இதற்கு ரஸவாதம் எனவும் பெயர்.

5 மந்திரகண்டம்:- இப்பாகத்தில் மந்திரங்களால் கிடைக்க கூடிய பலன்களும் அதன் முறைகளும் கூறப்படுகின்றன.

இந்த ஐந்து கண்டங்கள் அல்லது பாகங்கள் தனித்தனி யாகவே தனி நூல்களாகவே வடமொழியில் அமைந்திருக்கின் றன ஆனால் தமிழில் இவ்வைந்தும் கலந்து ஒரே புத்தகமாக இருக்கின்றது. ஆகவே தமிழ் சித்தர் நூல்கள் படிப்பவர் களுக்கு கிலேசத்தை யுண்டுபண்ணுகிறன. வடமொழி சித்தர் நூல்களில் இவ்வைந்தும் தனித்தனியே அமைந்திருப்பதைக் காணலாம் தற்காலம் அச்சிடப்பட்ட வடமொழி சித்தர் நூல் களில் வாதகண்டம், மந்திரகண்டம், நீங்கலாக மற்ற மூன்று கண்டங்களும் காணப்படுகின்றன. வைத்தியருக்கு உபயோக முள்ள கண்டங்கள் மூன்றே. ஆகையால் அந்த மூன்று கண்டங் களே விவரமாக எழுதப்பட்டிருக்கின்றன.

சித்தர் என்றால் என்ன? சித்தர் என்பது வடமொழி. ஸித்தியைப் பெற்றவர் சித்தர். ஸித்தி என்பது ரஸஸித்தியைக் குறிக்கின்றது. சித்தர்களைச் சொல்லும்பொழுது ரஸ்வாக் படத்தில் "ஏதே சாந்தி ராஜேந்ரா: ரஸஸித்தா மஹாபலா:" எனக் கூறப்பட்டிருக்கின்றது. முன் சொன்ன 27 சித்தர்களும் அரசர்களாக விருந்ததாகவும் அவர்கள் ரஸஸித்தி பெற்றவர்களென்றும் அவ்வசனம் கூறுகின்றது. ரஸத்தைப் பதினெட்டு ஸம்ஸ்காரங்கள் செய்து அக்னிக்கு ஜயிக்கும்படி செய்து அதைக் கல்பமுறையாகச் சாப்பிட்டு சரீர ஸித்திபெற்று வெகுகாலம் ஜீவித்திருப்பார்கள் ஸித்தர்களெனப் பொருள் கிடைக்கின்றது மூலிகைகளால் ஆகிய கஷாயங்களை உபயோகித்து காயசித்தி பெறுபவர்கள் முனிகளெனக் கருதப்படுகின்றனர். ரஸத்தால் காய சித்தி பெறுபவர்கள் சித்தர்களாவர். மூலிகைகளால் கிடைக்கும் காய சித்தியைவிட ரஸப்பிரயோகத்தால் கிடைக்கும் காயசித்தி நூல்களில் மிகவும் புகழப்படுகின்றது மூலிகை சிகித்சையும் மூலிகை ரஸாயனமும் பிரம்மாவின் மூலமாக உலகத்திற்குப் பறவிற்று என்றும் தேவசிகித்சையும் இதையொட்டிய ரஸாயனமும் பரமசிவன் மூலமாக உலகிற்குப் பரவிற்று என்றும் நூல்கள் கூறுகின்றன.

ஐந்து கண்டங்களாக வகுக்கப்பட்ட சித்தர் நூல்களில் வாத கண்டம் மந்திரகண்டம் ஆகிய இவ்விரு கண்டங்கள் நீங்கலாக மற்ற மூன்று கண்டங்களும் வைத்தியர்களுக்கு மாத்திரம் உபயோகமுள்ளவைகளாக விருக்கின்றன இம்மூன்று கண்டங்களும் சேர்ந்து ஒரே புஸ்தகமாகக் காணப்படுகின்றது இப் புஸ்தகங்களுக்கு ரஸகிரந்தங்கள் எனப் பொதுவாக வடமொழி வைத்யர்கள் பெயரிட்டு அழைச்கின்றனர். தமிழ் வைத்தியர்கள் சித்தர் நூல் எனப் பொதுவில் கூறுகின்றனர். ரஸகிரந்தம் என்ற பதம் ரஸங்களைச் சொல்லும் நூல் என்ற பொருளைக் கொடுக்கும். ரஸம் (Mercury) என்ற சொல் தமிழில் பாதரஸத்தை குறிப்பதாகும். ஆனால் வடமொழியில் உலோஹங்கள் நீங்கலாக மற்ற வணைத்தையும் குறிக்கும் ஆகலால் ரஸகிரந்தமென்றால் ரஸம் முதலிய பல பொருள்களை விவரிக்கும் கிரந்தமெனப் பொருளாகும். வடமொழி ரஸகிரந்தங்களில் ரஸம், மஹாரஸம், உபரஸங்கள், சாதாரண ரஸங்கள், உலோஹங்கள், ரத்னங்கள் என வஸ்துக்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன சில நூல்களில் ரஸமென்றும் உபரஸங்களென்றும், உலோஹங்களென்றும் ரத்னங்களென்றும் நான்கு விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் ரஸமென்பது பாதரஸம் ஒன்றே. மஹாரஸங்கள் எட்டு அவையாவன:-- அப்பிரகம், வைக்ராந்தம், மாக்ஷிகம், விமலா, சிலாஜது துத்தம் சபலம் ரஸகம், ஆக எட்டு. உபரஸங்கள் எட்டு அவையாவன:-- கந்தகம், கைரிகம், அன்னபேதி,

படிகாரம் (இதை சீனிக்காரமென்பர்) தாளகம், மனோசிலை, அஞ்சனக்கல் கந்குஷ்டம், ஆக எட்டு. ஸாதாரண ரஸங்கள் ஒன்பது அவையாவன :— கம்பில்லம், பாஷாணம், நவாச்சாரம், சோகி, (இதுவே பலகரை) அக்கினிஜாரம், கிரிசிந்தூரம், லிங்கம், மிருதார் சிங்கி, ராஜாவர்த்தம் ஆக ஒன்பது. சில நூல்களில் வெங்காரம், ஸ்படிகம், சங்கு, பலப்பக்கல், மணல், போளம், கோபிச்சந்தனம், கடல்நுரை, சிறுசங்கு, முத்துச்சிப்பி, சிந்தூரம் (இது ஈயசிந்தூரம் என்ற கடைச்சரக்கு) ஆக இந்த 11 சரக்குகளையும் உபரஸங்களென சொல்லப்பட்டிருக்கின்றது சிலர் மஹாரஸம் 8, சாதாரண ரஸம் 8, உபரஸம் 8 வெங்காரம் முதலிய 11, இவையனைத்தையும் அதாவது 35 சரக்குகளையும் உபரஸங்களென அழைக்கின்றனர். (இதையொட்டியே ரஸகிரந்த மென்ற பெயர் இந்நூல்களுக்கு இடப்பட்டது.) உலோஹங்கள் ஒன்பது. அவையாவன: சுவர்ணம், வெள்ளி, தாமிரம், இரும்பு, (இவை நான்கும் சுத்த லோஹகங்களென அழைக்கப்படுகின்றன) வெள்வங்கம் கருவங்கம், (இவையிரண்டும் பூதிலோஹமென அழைக்கப்படுகின்றன.) பித்தளை, வெங்கலம், வர்தம் (இம்மூன்றும் மிச்ர லோஹமென அழைக்கப்படுகின்றன.) இரத்னங்கள், பத்து. அவையாவன:— ஸூர்யகாந்தக்கல், சந்திரகாந்தக்கல், வஜ்ரம், முத்து, புஷ்பராகம், நீலம், (இது இந்திர நீலம்) பத்மராகம், (இது மாணிக்கமெனப்படும்) பவழம், வைதூர்யம் பச்சை, (இதுவே மரகதப்பச்சை) ஆக பத்து. இவற்றுள் புஷ்பராகம், இந்திர நீலம், பத்மராகம், வஜ்ரம், மரகதம் ஆக இந்த ஐந்தும் மஹா ரத்னங்களெனப்படும்.

ரஸம்:- இதை ஆங்கிலத்தில் Mercury என அழைப்பர். இதைத் தமிழில் ரஸம் என்றும் பாதரஸம் என்றும் சாதாரணமாக வழங்குவார்கள். சுதேச நூல்களனைத்தும் இதைப் பெருமையாகக் கொண்டாடுகின்றன ஆங்கில வைத்தியத்திலும் இது புகழப்படுகின்றது. இதைப் பலவிதமாக ஆங்கில வைத்தியத்தில் உபயோகிக்கின்றனர். மகோதரம், வீக்கம் முதலிய ரோகங்களில் மூத்திரம் அதிகரிக்கும்படி மூத்திரக்குண்டிக் காய்களைத் தூண்டுவதில் நிகரற்றதென ஆங்கில வைத்தியத்தில் கொண்டாடப்படும் மருந்து இது ரஸத்தைக்கொண்டே தயாரிக்கப்படுகின்றது. இதை அக்னிக்கு ஜயிக்கும்படி செய்துவிட்டால் உயர்ந்த காய கல்பமாகவும் இது ஆகின்றது. இது கந்தகத்துடன் சேர்ந்து பல முறைகளில் காணப்படுகின்றது. இது தற்காலம் பிறதேசங்களிலிருந்து நமது நாட்டிற்குக்கொண்டு வரப்படுகிறது. ஆனால் முற்காலத்தில் கனிகளிலிருந்து நமது நாட்டிலேயே தயாரிக்கப்பட்டதாக நூல்களால் அறியலாகும். கடையில் கிடைக்கும் ரஸத்தில் பல தோஷங்களிருப்பதால் அவை நிவர்த்தியாவதற்கு அவசியம் சுத்தி செய்யவேண்டும். லிங்கத்திலிருந்து ரஸத்தை

எடுத்துக்கொள்ளுவதால் சுத்தி வேலை இலகுவாக ஆகலாம். ஆனால் ரஸசுத்தி என்பது ரஸத்தில் தோஷங்களை விலக்குவது மாத்திரமின்றி ரஸத்தில் குணத்தையும் உண்டுபண்ணுவதாக விருப்பதால் இந்த சுத்திகளை கூடியவரை செய்து முடிப்பதே உசிதமாகின்றது. ஆகவே ரஸ சுத்திகளை ரஸஸம்ஸ்காரங்களென நூல்கள் கூறுகின்றன. ஸம்ஸ்காரமாவது வஸ்துவுக்குப் புதிய சக்தியை யளிப்பதே. "த்வாதசைதே ரஸே தோஷா" என்று ரஸத்தில் 12 தோஷங்கள் இருக்கின்றன. அவைகளுள் மூன்று தோஷங்கள் பிரதானமானவை. அவைகளாவன ;— விஷம், அக்னி, மலம் ஆகியவைகளே. இவை நிஸர்க தோஷங்கள் எனப்படுகின்றன. நிஸர்க தோஷங்கள் என்றால் இயற்கை தோஷங்களெனப் பொருள். மற்ற தோஷங்கள் செயற்கையில் வந்தன இவ்விதம் இயற்கையிலும் செயற்கையிலும் ரஸத்திற்கு ஏற்பட்டுள்ள தோஷங்கள் 12-யும் விலக்க ஸம்ஸ்காரங்கள் அல்லது சுத்திகள் செய்யவேண்டியது அவசியமாகின்றது. ஸம்ஸ்காரங்கள் 18-விதங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன அவை யாவன—ஸ்வேதனம், மர்தனம், மூர்ச்சனம், உத்தாபனம், பாதனம், ரோதனம், நியாமனம், தீபனம், அப்பிரகக்ராஸமானம், சாரணம், கர்பத்ருதி, பாஹ்யத்ருதி, ஜாரணம், க்ராஸம் ஸாரணம் க்ராமணம், வேதம், யோகம் ஆக இவ்விதம் 18. சிலர் இவைகளுடன் அனுவாஸனம் என்பதையும் சேர்த்து 19 ஸம்ஸ்காரங்கள் என்கின்றனர். இவற்றுள் ஐந்தாவதான ரோதனம் என்ற ஸம்ஸ்காரத்தைச் சிலர் போதனமென அழைப்பர். ரோதனம், போதனம் என்ற இரண்டு சொற்களும் ஒரு அர்த்தத்தையே குறிப்பிடுகின்றன. ரோதனம் என்ற சொல் வெகு நூல்களில் காணப்படுகின்றது. போதனம் என்ற சொல் இரண்டொரு நூல்களில் காணப்படுகின்றது இவற்றுள் ஸ்வேதனம், மர்தனம் மூர்ச்சனம், உத்தாபனம், பாதனம், ரோதனம், நியாமனம், தீபனம் ஆக எட்டு ஸம்ஸ்காரங்களும் முக்கியமானவை. இந்த அஷ்ட ஸம்ஸ்காரமே வைத்தியத்திற்குத் தேவையானது. மற்ற ஸம்ஸ்காரங்கள் வாதத்திற்கும் (ரஸவாதம் அதாவது தங்கம் செய்யும் வித்தை) காயகல்பத்திற்கும் தேவையானவை. இந்த ஸம்ஸ்காரங்களை ஏற்கனவே சொல்லியுள்ள வரிசையில் செய்யவேண்டும்

1. ஸ்வேதனம் :- இது ரஸத்தின் முதல் ஸம்ஸ்காரமாகும். பலவித தானியங்களை கிடைத்த அளவு எடுத்து உமி நீக்கிப் புடைத்து ஓர் மண்பாண்டத்திலிட்டு அது நிறைய சுத்த ஜலம் விட்டு நன்றாக புளிப்பு ஏறும் வரையில் வைத்திருந்து பிறகு அந்த நீரைத் தெளிவாக எடுத்து ஓர் மண் சட்டியில் பாதி சட்டி விட்டு அதில் கோரைக்கிழங்கு, பிரமீ, வெள்ளைப்பூ, விஷ்ணுக்கிராந்தி, சாரணத்தி, பொன்னாங்காணி, கீரிபுரண்டான். ஸஹாதேவி, (இதுவே சீராசெங்கழுநீர்) தண்ணீர்விட்டான், திரிபலை, நீல

புஷ்பமுள்ள விஷ்ணுகிராந்தி சிறுபுள்ளடி, கொடுவேலி, ஆக இந்த 14 சரக்குகளில் கிடைத்த மட்டில் அதாவது எட்டு சரக்குகளுக்கு குறையாமல் சமயிடையாக எடுத்து (ஒவ்வொரு சரக்கும் ரஸத்தின் இடைக்கு 16-ல் ஒரு பங்காக எடுத்துக்கொள்ளவும்) நன்ருக அரைத்துப் போட்டு (இதற்குத்தான் தான்யாம்லமெனப் பெயர்) ரஸத்தை ஓர் துணியில் பொட்டளமாகக் கட்டி அதில் தொங்கவிட்டு (தோலா யந்திரத்தில்) சிறு தீயிட்டு மூன்று நாள் விடாமல் எரிக்கவேண்டும். தோலா யந்திரமாவது—ஓர் பாண்டத்தில் ஏற்கனவே சொல்லியுள்ள திரவ பதார்த்தத்தைப் பாதி பாண்டம் விட்டு பாண்டத்தின் கழுத்து பாகத்தில் இரு பக்கத்திலும் ஓட்டை செய்து அதில் ஓர் குச்சியை நுழைத்து ரஸம் முதலிய வஸ்துக்களைத் துணியில் கட்டி அந்தக் குச்சியின் நடுவில் முடிந்து பாண்டத்தின் அடி பாகம் படாமலிருக்கும்படி சுமார் 3, 4 அங்குலம் உயரத்திற்கு மேலேயே இருக்கும்படி தொங்கவிட வேண்டும் மூன்று நாள் எரிக்கும்போது ஜலம் ரஸப்பொட்டணத்தில் படாமல் குறைந்துவிட்டால் ஏற்கனவே சொல்லியுள்ள திரவத்தை மறுபடியும் பாதியளவுக்கு முன்போல விட்டுக்கொள்ள வேண்டும். தீபாக்னியாக எரிக்கவேண்டும்.

வேறு விதம் ஸ்வேதனம் :— இது மற்ருெருவிதமான ஸ்வேதனம். திரிகடு, இந்துப்பு, கடுகு, உள்ளிப்பூண்டு, திரிபலே, இஞ்சி, மஞ்சள்பூ, குருந்தொட்டி, நாகபலா, சிறுக்கீரை, சாரணத்தி, மேஷசிருங்கி, (இது ஓர் மரம் இது கிடைக்காவிட்டால் கர்காடக சிருங்கியை எடுத்துக் கொள்ளவும்) கொடுவேலி, நவாச்சாரம் ஆகிய இவைகளை வகைக்கு ரஸத்தின் இடைக்கு 16-ல் ஒருபங்கு எடுத்து முன்சொன்ன தான் யாம்லத்தால் அரைத்து அந்த கல்கத்தால் ஓர் வெள்ளைத் துணியில் கட்டை விரல் பிரமாணம் தடவி அதன் நடுவில் ரசத்தை வைத்துப் பொட்டணமாகக் கட்டி முன் சொன்னபடி சட்டியில் பாதிவரை தான்யாம்லம் விட்டு தோலா யந்திரமாக ரஸப்பொட்டணத்தைக் கட்டி மூன்று நாள் தீயிட்டு எரிக்கவும்.

மற்ருெரு வித ஸ்வேதனம்:— திரிகடு, இந்துப்பு, கடுகு, கொடுவேலி, இஞ்சி, முள்ளங்கி இவைகளை ரஸத்தின் இடைக்கு 16-ல் ஒரு பங்கு வகைக்குச் சமயிடையாக எடுத்து அரைத்து அந்த கல்கத்தால் ஓர் வெள்ளைத் துணியில் கட்டை விரல் பிரமாணம் தடவி அதில் ரஸத்தை வைத்து முன்போல தோலா யந்திரமாக மூன்று நான் தீபாக்னியாக எரிக்கவும். ஒவ்வொரு நாளும் ரஸத்தை எடுத்து புதிய கல்கம் தயாரித்து முன்போல துணியில் தடவி ரஸத்தை அதில் வைத்து எரிக்கவேண்டும். இது ஓர் சித்த முறைப்படி செய்யும் ஸ்வேதம்.

மற்றெரு ஸ்வேதனம் :— துணியை நான்கு மடியாக மடித்து அதன்பேரில் திரிகடு, திரிபலே, கொடுவேலி, சோற்றுக்கற்றழை, ஆகிய இவைகளை வகைக்கு ரஸத்தின் 16-ல் ஒரு பங்கு சமயிடையாக எடுத்து அரைத்து முன்போல கட்டைவில் பிரமாணம் பூசி ரஸத்தை அதில் வைத்து முன்போல தான்யாம்லம் விட்ட மண் பாண்டத்தில் தோலா யந்திரத்தில் ஒரு நாள் எரிக்கவும்.

குறிப்பு:— இவ்விதம் மூன்று நாள் எரிக்க முடியாத பக்ஷத்தில் ஒருநாளாவது பூர்ணமாக எரிக்கவேண்டும். இந்த நான்கு ஸ்வேதனங்களில் ஏதாவது ஓர் வகை ஸ்வேதனத்தைச் செய்ய வேண்டும். இவ்விதம் ஸ்வேதனம் செய்வதால் ரஸத்திலுள்ள தோஷங்கள் இளகிவிடுகின்றன. இனி மேலே சொல்லப்போகும் ஸம்ஸ்காரங்களால் அந்த இளகின தோஷங்கள் நிவர்த்தியாகி விடுகின்றன.

2. மர்தனம் :— ரஸத்தை கல்வத்திலிட்டு சூர்ணங்களாலும் திரவங்களாலும் அரைப்பது மர்தனமெனப்படும். ஏற்கனவே ஸ்வேதனம் செய்த ரஸத்தை கல்வத்திலிட்டு புகைக்கூடு (இதை ஒட்டடை என்று ஜனங்கள் அழைப்பார்கள்) செங்கல்பொடி, தயிர், வெல்லம், இந்துப்பு, கடுகு, இவைகளைச் சமயிடையாக எடுத்து தயிர், வெல்லம் இவை நீங்கலாக மற்றவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து மொத்தம் ஆறு சரக்குகளும் சேர்ந்து ரஸத்தின் இடைக்கு 16 ல் ஒரு பங்காக எடுத்துச் சேர்த்து மூன்று நாள் கைவிடாமல் அரைக்க வேண்டும் அல்லது ஒரு நாளாவது அரைக்கவேண்டும்.

மற்றெரு முறை மர்தனம்:— செங்கல்பொடி, மஞ்சள், ஒட்டடை, ஆட்டுரோமம், பஸ்மம் இவைகளைச் சமமெடுத்து முன் போல பொடிசெய்து ரஸத்தின் இடைக்கு 16-ல் ஒரு பங்கு எடுத்து கல்வத்திலிட்டு ரஸத்தையும் சேர்த்து எலுமிச்சம்பழ ரஸம் விட்டு மூன்று நாள் அல்லது ஒருநாள் அரைக்கவும். பிறகு ரஸத்தைத் தனிப்படுத்த வேண்டும். மேல் சட்டியில் பதங்கிக் கும்பிடி செய்து ரஸத்தைத் தனிப்படுத்தலாம். கஞ்சியில் அலசி தனிப்படுத்தலாம். குறிப்பு — இந்த இருவகை மர்தனங்களுக்குள் ஏதாவது ஒருவகைப்படி மர்தனம் செய்து ரஸத்தைத் தனிப் படுத்திப் பிறகு அடியிற்காணுமாறு மூர்ச்சனம் என்ற ஸம்ஸ் காரம் செய்யவேண்டு

3. மூர்ச்சனம்:— மூர்ச்சனமென்பது அடியிற்காணும் சில மூலிகைகளைப் பொடி செய்து கல்வத்திலிட்டு ரஸத்தையும் சேர்த்து அரைப்பதுவே. ரஸத்தில் இயற்கையில் அமைந்துள்ள தோஷங்கள் ஐந்தில் மூன்று தோஷங்கள் முக்கியமானவையென

முன்பே சொன்னோம். அவையாவன — மலம், அக்னி, விஷம், ஆகியவைகளே. இம்மூன்று தோஷங்களால் மிகுந்த விபத்துகள் உண்டாவதால் இவைகளை விலக்க இந்த மூர்ச்சனமென்ற ஸம்ஸ்காரம் சொல்லப்பட்டிருக்கின்றது. குமரீ (சோற்றுக்கற்றாழை) மலம் என்ற தோஷத்தை விலக்குகின்றது. திரிபலை அக்னி என்ற தோஷத்தை நிவர்த்திக்கின்றது கொடுவேலி விஷம் என்ற தோஷத்தைப் போக்குகின்றது. ஆகவே இந்த ஐந்து சரக்குகளையும் தனித்தனி சமமாக எடுத்து ரஸத்தின் அளவுக்கு 16-ல் ஒரு பங்கு மொத்தத்தில் இருக்கும்படி செய்து கல்வத்தி லிட்டு ரசத்தையும் சேர்த்து அரைக்கவேண்டும். சோற்றுக் கற்றாழை நீங்கலாக மற்ற நான்கு சரக்குகளையும் நன்றாகப் பொடி செய்துகொண்டு பிறகு அனைவற்றையும் ஒன்றுசேர்த்து அரைக்க வேண்டும். பிறகு ரஸத்தைத் தனிப்படுத்தி முன்போல அரைக்க வேண்டும். இவ்விதம் ஏழு தடவை செய்யவேண்டும். ஏழு தடவை செய்யவேண்டுமென்று நூல்களில் கூறப்பட்டபோதிலும் இம்முறை ரஸவாதத்திற்காகச் சொல்லப்பட்டதென்றும் வைத்ய விஷயத்தில் ஒரு முறை செய்யும் மூர்ச்சனமே போதுமான தென்றும் நூல்கள் கூறுகின்றன. மூன்று மணி நேரம் அரைக்க வேண்டும்.

மற்றொரு மூர்ச்சனம்:—சரக்கொன்னை மரத்தின் வேர் குமரிச் சார், இவைகளால் ரஸத்தை அரைப்பது ஓர் வித மூர்ச்சனமாகும். கருஊமத்தை ரஸத்தால் அரைக்க சாஞ்சல்யம் என்ற தோஷம் விலகும். திரிபலை, குமரி, இவைகளின் கஷாயத்தால் அரைக்க விஷம் என்ற தோஷம் விலகும். திரிகடு, குமரி இவைகளின் ரஸத்தால் அரைக்க கிரி என்ற தோஷம் விலகும். கொடுவேலி குமரி இவைகளால் அரைக்க அக்னி என்ற தோஷம் விலகும். ஒவ்வொரு தடவையும் அரைத்து சுடும் கஞ்சியில் அலசி ரஸத்தை எடுக்கவும். இம்முறைகளால் ரஸத்தின் ஏழு கஞ்சுகங்கள் அல்லது தோஷங்கள் நிவர்த்தியாகும்.

மற்றொரு முறை:— குமரி, கொடுவேலி, சிகப்பு கடுகு, கண்டங்கத்திரி, இவைகளைக் கஷாயம் செய்து அரைத்தாலும் அல்லது திரிபலை கஷாயத்தால் 7 நாள் அரைத்தாலும் ரஸத்தின் ஏழு கஞ்சுகங்கள் அல்லது தோஷங்கள் நிவர்த்தியாகும். குறிப்பு: சாதாரணமாக வைத்யர்கள் ரஸத்தை சுத்திசெய்யும் முறையாவது கொடுவேலி வேர், திரிபலை, குமரிச்சார், இவைகளைச் சமமாக எடுத்து ரஸத்தின் இடைக்கு 16-ல் ஒரு பங்கு கிரஹித்து கல்வத் திலிட்டு ரஸத்தையும் சேர்த்து ஒரு யாமம் அரைத்து சுடு நீரில் அலசி ரஸத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

4. உத்தாபனம் :— மூர்ச்சனம் செய்த ரஸத்தைத் தனிப் படுத்தவும். தனிப்படுத்த முடியாவிட்டால் அந்த சூர்ணங்களை அப்படியே ஓர் மண் சட்டியில் போட்டு வாயில் ஓர் சட்டியைக் கவிழ்த்து மூடி வாய்க்குச் சீலைமண் செய்து அடுப்பேற்றி இரண்டு யாமம் மந்தாக்னியாக எரிக்க ரஸம் மேல் சட்டியில் பதங்கிக்கும். ஆறின பிறகு ரஸத்தை எடுத்துக்கொள்ளவும். இதற்கு உத்தா பனம் எனப்பெயர். உத்தாபனம் என்றால் ரஸத்தைத் தனிப் படுத்தல் எனப்பொருள்.

5, பாதனம் :— ரஸத்தைச் சட்டியிலிட்டு அடுபேற்றி எரித்து மேலும் கீழும் குறுக்காகவும் போகும்படி செய்யும் ஸம்ஸ்காரத்திற்குப் பாதனம் எனப்பெயர். ஆகவே பாதனம் ஊர்த்வபாதனம், அத: பாதன்ம், திர்யக் பாதனம் என மூன்று விதமாகும். உத்தாபனம் செய்த ரஸம் மூன்று பங்கும் தாமிரப் பொடி ஒரு பங்குமாக எடுத்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழ ரஸம் விட்டு ஒரே மொத்தையாக ஆகும்படி அரைக்கவேண்டும். அந்த மொத்தையை அப்படியே ஓர் மண் சட்டியிலிட்டு மேல் மண் சட்டியைக் கவிழ்த்து மூடி வாய்க்கு சீலைமண் செய்து, மேல் சட்டியின் வெளிப்பக்கம் நுனியில் ஓர் பாத்தி கட்டி அதில் ஜலம் விட்டு அடுப்பேற்றி நான்கு யாமம் அதாவது 12 மணி எரிக்கவும். ஆறினபிறகு மேல் சட்டியில் இருக்கும் பதங்கத்தை எடுத்துக் கொள்ளவும். இதற்கு ஊர்த்வ பாதனம் எனப்பெயர்.

மற்றொரு முறை:— மயில் துத்தம், சுவர்ணமாக்ஷிகம், இவை களை ரஸத்துடன் சேர்த்துக் குமரிச்சாற்றால் அரைத்து முன் போல எரித்து எடுக்கவும். இது மற்றொரு முறை ஊர்த்வ பாதனம்.

அத: பாதனம்:— அதாவது ரஸத்தைக் கீழ் நோக்கிச்செல்லும் படி செய்தலாம் திரிபலை, முருங்கை, கொடுவேலி, இந்துப்பு, கடுகு இவைகளைப் பொடிசெய்து ரஸத்தைச் சேர்த்து குமரிச் சாற்றால் அரைத்து ஓர் சட்டியின் உள் பாகத்தில் தடவி ஓர் சட்டி நிறைய தண்ணீர் விட்டு அந்தச் சட்டியின்பேரில் முன் சொன்ன சட்டியைக் கவிழ்த்து மூடி வாய்க்குச் சீலைமண் செய்து இந்த இரண்டு சட்டிகளில் மருந்துள்ள சட்டியில் பாதி சட்டி முழுகும்படி குழி செய்து அதில் அதை வைத்து குழியை மூடி மேல் சட்டியின்மேல் எருமுட்டையடுக்கித் தீயிட ரஸம் கீழ்ச் சட்டியிலுள்ள தண்ணீரில் இறங்கும். அதை எடுத்துக்கொள்ள வும். இதற்கு அத: பாதனம் எனப்பெயர். குக்குட புடமாகத் தீயிடவும்.

அத: பாதனம் :— இது மற்ருெரு விதம். அப்பிரக நவ நீதத்தையும் ரஸத்தையும் நன்ருக எலுமிச்சம்பழ ரஸத்தால் ஒரு நாள் அரைத்துப் பிறகு பூனைக்காலி, முருங்கை, கொடுவேலி, இந்துப்பு கடுகு இவைகளையும் சேர்த்து அரைத்து முன்போல பாண்டத்தில் தடவி கீழ்பாண்டத்தில் ரஸம் விழும்படி முன் போல செய்யவும்.

திர்யக்பாதனம் :—அதாவது ரஸம் குறுக்காகச் செல்றுமாறு செய்து எடுப்பது திர்யக் பாதனமாகும். ஓர் மண்பாண்டத்தில் சுத்த ஜலம்விட்டு மற்ருெரு பாண்டத்தில் ரஸத்தை வைத்துத் தண்ணீருள்ள பாண்டம் சாய்ந்து ரஸம் இருக்கும் பாண்டத்தின் கழுத்து பாகத்தில் பொருந்தும்படி செய்து வாய்மூடி ரஸம் உள்ள பாண்டத்தை அடுப்பேற்றி எரிக்க அந்த ரஸம் தண்ணீர் இருக்கும் பாண்டத்தில் விழும். இதற்கு திர்யக்பாதன மெனப் பெயர். இவ்விதம் மூன்றுவித பாதனங்கள் செய்வதால் ரஸத்தி லுள்ள நாகவங்க தோஷங்கள் நிவர்த்தியாகின்றன.

6. ரோதம் அல்லது போதனம்:— இவ்விதம் பாதன ஸம்ஸ் காரம் செய்தபிறகு அந்த ரஸத்திற்கு ரோதம் அல்லது போதனம் என்ற ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். இந்த இரண்டு பாதனங் களுக்கும் பொருள் ஒன்றே. பாதனம் வரையிலுள்ள ஐந்து ஸம்ஸ்காரங்களால் ரஸம் ஷண்டத்தன்மையை யடைகின்றது. அத்தன்மை விலகி வீர்யம் பெறும்படி செய்யும் ஸம்ஸ்காரம் போதனமாகும். பூர்ஜ விருக்ஷத்தின் இலையில் ஷை ரஸத்தை வைத்துச் சுற்றி முடிந்து இந்துப்பு கலந்த நீரில் டோலா யந்திர மாகக் கட்டி ஸ்வேதனம் செய்யவும்.

மற்ருெரு முறை:— எலுமிச்சம்பழ ரஸத்தில் இந்துப்பை அரைத்து பில்லையாகத் தட்டி ஓர் சட்டியில் ரஸத்தை விட்டு அதன்பேரில் அந்த பில்லையை மூடி ஓர் உத்தரணி நீர் விட்டு வாய் மூடி சீலமண் செய்து அதைப் பூமியில் புதைத்து மூடிமேல் லகுபுடமிடவும்.

மற்ருெரு முறை:— கீரி புரண்டான், புளி, பழுபாகல், கரிப் பான், கோரைக்கிழங்கு, இவைகளைக் கஷாயம் செய்து ரஸத்தை டோலா யந்திரமாகக் கட்டி எரிக்க போதனமாகும்.

7. நியமனம்:— முன் சொன்னபடி போதனம் என்ற ஸம்ஸ் காரம் செய்த பிறகு அந்த ரஸத்திற்கு நியமனம் என்ற ஸம்ஸ் காரம் செய்யவேண்டும். ரஸத்தை ஓடாமல் கட்டியாகச்செய்யும் ஸம்ஸ்காரத்திற்கு நியமனமெனப் பெயர். கீரிபுரண்டான், புளியம்தழை, பழுபாகல், கரிப்பான், கோரைக்கிழங்கு இவை களின் ரஸம் எடுத்து அதில் டோலா யந்திரமாக ரஸத்தை எரிக்க நியமனமாகும்.

மற்றொருவிதம் — வடதேசத்தில் விளைந்த பெரிய கனத்த இந்துப்பு பாரையைக் கொண்டுவந்து அதை நடுவில் சுமார் ஒரு சாண் அல்லது ஆறு அங்குல ஆழம் குடைந்து அந்தப் பள்ளத்தில் முன் ரஸத்தைவிட்டு அதில் நவாச்சாரம் அல்லது சோடாவுப்பையும் எலுமிச்சம்பழ ரஸத்தையும்விட்டு இந்துப்பு துண்டத்தால் வாயை நன்றாக மூடி பூமியில் பள்ளம் தோண்டி அந்தப் பள்ளத்தில் ஷை இந்துப்புப் பாரையை வைத்து எட்டு அங்குல உயரம் பொடி மணல் பரப்பி அதன்மேல் ஏழு நாள் உமிகொட்டி நெருப்பிட நியமனமாகும்.

8. தீபனம் — இவ்விதம் நியமனம் செய்த பிறகு அந்த ரஸத்திற்குத் தீபனம் என்ற ஸம்ஸ்காரம் செய்யவேண்டும் தீபனமென்பதே ஸந்தீபனமாகும் அன்னபேதி, பஞ்சலவணம், கடுகு, மிளகு, முருங்கைவிதை, சிகப்பு முருங்கைவிதை, வெங்காரம், இவைகளைச் சமவிடையாக எடுத்து காடியில் கலக்கி மூன்று நாள் தோலா யந்திரத்தில் ஷை ரஸத்தை எரிக்க தீபனமாகும் மற்றொருமுறை — கொடுவேலி கஷாயம் செய்து அதையும் காடியையும் சமமாகக் கலந்து அதில் முன்போல தோலா யந்திரமாக மூன்று நாள் எரிக்க தீபனமாகும்

9. அனுவாஸனம் — தீபனம் செய்த ஷை ரஸத்திற்கு அனுவாஸன ஸம்ஸ்காரம் செய்யவேண்டும் ஷை ரஸத்தை ஓர் பீங்கான் கோப்பையில் வைத்து ரஸம் முழுகும்படி எலுமிச்சம் பழ ரஸம் விட்டு வெய்யிலில் வைக்க அனுவாஸனமாம் இந்த ஸம்ஸ்காரம் ரஸசிந்தாமணி முதலிய நூல்களில் காணப்படுகின்றது. ரஸரத்னசமுச்சயம் முதலியவைகளில் காணப்படவில்லை உண்மையில் தீபனம் முடிய சொல்லப்பட்ட எட்டு ஸம்ஸ்காரங்கள் தான் ஸம்ஸ்காரங்களாகும். இவ்விதம் ரஸத்திற்கு தீபனாந்தமான எட்டு ஸம்ஸ்காரங்களால் எடையில் எட்டில் ஒரு பாகம் தான் மீதமாக நிற்கும் அதாவது எட்டு தோலா ரஸமெடுத்து முற் கூறியபடி எட்டு ஸம்ஸ்காரங்கள் செய்தால் ஒரு தோலா தான் மீதமாகத்தேரும் ரஸத்திற்கு ஏழு தோஷங்கள் அல்லது கஞ்சுகங்கள் இருப்பதால் இந்த எட்டு ஸம்ஸ்காரங்களால் ஏழு கஞ்சுகங்களும் கழிந்து விடுவதால் சுத்த ரஸம் எட்டில் ஒரு பாகம்தான் மீதமாக நிற்கும். தீபனாந்தமான எட்டு ஸம்ஸ்காரங்கள் வைத்தியனுடைய தேவைக்குப் போதுமானவைகளாகின்றன மற்ற பத்து ஸம்ஸ்காரங்கள் கல்பமுறைகளுக்கும் ரஸவாதத்திற்கும் பயன் படுபவை. இந்த எட்டு ஸம்ஸ்காரங்கள் கல்பமுறைகளுக்கும் ரஸவாதத்திற்கும் பொதுவானவையாகின்றன. இந்த எட்டு ஸம்ஸ்காரங்களையும் செய்யமுடியாத பக்ஷத்தில் இலகுவான சுத்தி முறைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன.

இலகுசுத்தி — அடியிற்காணுமாறு ரஸத்தை இலகுவான முறையில் சுத்தி செய்து கொள்ளலாம். உள்ளிபூண்டு, கடுகு (கருப்புக் கடுகு) இவைகளைச் சமயிடையாக எடுத்து நீர் விடாமல் அரைத்து குகை செய்து அதில் தேவையான ரஸத்தைவிட்டு ஓர் துணியில் கட்டி முடிந்து காடியில் மூன்று நாள் தோலா யந்திரமாக எரித்து எடுத்துப் பிறகு குமரிச்சாற்றாலும், கொடுவேலி கஷாயத்தாலும், மணத்தக்காளி ரஸத்தாலும், திரிபலை கஷாயத்தாலும் முறையே தனித்தனி ஒருநாள் கல்வத்திலிட்டு அரைத்து ரஸத்தைப் பிறகு தனிப்படுத்தி, கல்வத்திலிட்டு ரஸத்தின் பாதியிடை இந்துப்பு சேர்த்து எலுமிச்சம்பழ ரஸம்விட்டு ஒருநாள் அரைத்துப் பிறகு கடுகு, பூண்டு நவாச்சாரம், இவைகளைத் தனித்தனி ரஸயிடை எடுத்துக் கல்வத்திலிட்டு ரஸத்தையும் சேர்த்து அரிசி கழுநீர்விட்டு அரைத்து பில்லை தட்டி உலர்த்தி மேல்பாகத்தில் பெருங்காயம் பூசி ஓர் சட்டியில் பில்லையைப் போட்டு மேல் சட்டிமூடி வாய்க்குச் சீலைமண் செய்து காயவைத்துப் பிறகு அடுப்பேற்றி தீவ்ராக்கினியாக எரித்து மேல்சட்டியின் உச்சியில் நடுவில் ஈரத்துணிபோட்டு 9 மணி சாவகாசம் எரிக்க ரஸம் மேல் சட்டியில் பதங்கிக்கும் ஆறின பிறகு எடுத்துக் கொள்ளவும் ரஸத்தை நிறுத்துப் பார்த்து எடை குறைந்திருந்தால் மேல் சட்டி மூடி முன் போலவே எரிக்க மறுபடியும் ரஸம் மேல் சட்டியில் பதங்கிக்கும். ரஸம் சுத்தமாகும். மற்றொரு விதம் சுத்தி— ஆட்டு ரோமச் சாம்பல், ஒட்டடை, மஞ்சள்பொடி, செங்கல்பொடி, இவைகளுடன் ரஸத்தைச் சேர்த்து அரைத்துப் பிறகு திரிகடு, குமரிச்சார், கொடுவேலி, திரிபலை, எலுமிச்சம்பழ ரஸம், இவைகளில் குமரிச்சார், எலுமிச்சம்பழ ரஸம், இவை நீங்கலாக மற்றவைகளைக் கஷாயம் செய்து வடிகட்டி அதோடு குமரிச்சாரையும், எலுமிச்சம்பழ ரஸத்தையும் சேர்த்து அதில் ஷை ரஸத்தை தோலா யந்திரமாக எரித்துப் பிறகு ரஸத்தின் எடைக்கு நான்கில் ஒருபங்கு தாமிரம்பொடி சேர்த்து அரைத்து பில்லை தட்டி உலர்த்தி ஓர் சட்டியில்போட்டு மேல் சட்டி மூடி முன்போல எரித்து மேல் சட்டியில் பதங்கித்த ரஸத்தை எடுத்துக் கொள்ளவும் ரஸம் சுத்தமாகும் மற்றொருவிதம் இலகுசுத்தி— கழற்ச்சியிலை, பழுபாகல், கரிப்பான், இவைகளை நீர்விடாமல் கெட்டியாக அரைத்து அதைக் குழித்து தேவையான ரஸத்தை விட்டு உருட்டி உப்பு நீரில் தோலா யந்திரமாக ஒருநாள் எரித்து ரஸத்தை எடுத்துப் பிறகு கொடுவேலிகஷாயத்திலும் காடியிலும் இந்துப்பு மிளகு, முருங்கை இவைகளை சேர்த்து தோலா யந்திரமாக ஸ்வேதனம் செய்ய சுத்தமாகும். மற்றொருவிதம் இலகுசுத்தி — ரஸத்தின் எடைக்கு 16 ல் ஒரு பங்கு மஞ்சள்பொடி, செங்கல்பொடி, இவைகளைச் சேர்த்து எலுமிச்சம்பழ ரஸத்தால் தப்த கல்வத்தில் அரைக்கவும் பிறகு ரஸத்தைக் காடியில் கழுவி எடுத்துக்கொண்டு பேய்க்கொம்மட்டிவேர், அழிஞ்சிவேர், இவை

களைப் பொடிசெய்து அதோடு ஷை ரஸத்தை அரைத்துப் பிறகு சரக்கொன்றை சூர்ணத்தாலும், பிறகு கொடுவேலி சூர்ணத்தாலும் பிறகு கரு ஊமத்தைச் சாற்றாலும் பிறகு திரிபலைப்பொடியாலும், பிறகு திரிகடுகுப் பொடியாலும், சிறுநெருஞ்சி சூர்ணத்தாலும் முறையே தனித்தனி அரைத்துப் பிறகு காடியில் கழுவி எடுத்துக்கொள்ள ரஸம் சுத்தமாகும். முன் சொன்ன பொடிகள் தனித்தனி ரஸத்தில் எடைக்கு 16-ல் ஒரு பங்கு இருக்கவேண்டும். குறிப்பு— கீழ்ச்சொன்ன விதமாக ரஸத்தை அரைத்துப் பிறகு அதைத் தனிப்படுத்த முடியாவிட்டால் அப்படியே ஓர் மண் சட்டியில் போட்டு மேல் மண் சட்டி மூடி வாய்க்கு சீலை மண் செய்து அதை அடுப்பேற்றி 12 மணி எரிக்க மேல் சட்டியில் ரஸம் பதங்கிக்கும் அதை எடுத்துக் கொள்ளவும். ரஸம் சுத்தமாகும் மற்றொரு முறை:— மஞ்சள் பொடியுடன் ரஸத்தைச் சேர்த்து சோற்றுக்கற்றாழை நீர்விட்டு ஒரு நாள் அரைத்து ரஸத்தை முன்போல பதங்கித்து எடுத்துக்கொள்ளவும். ரஸம் சுத்தமாகும். குறிப்பு –இம்முறைதான் மிகவும் இலகுவானதால் இதையே பெரும்பான்மையாக வைத்தியர்கள் அனுஷ்டிக்கின்றனர். மற்றொரு முறை:– பூண்டையும் ரஸத்தையும் சேர்த்து தப்த கல்வத்தில் இந்துப்புடன் ஒரு மாதம் அரைத்து ரஸத்தை முன் கூறியபடி தனிப்படுத்திக்கொள்ளவும். ரஸம் சுத்தமாகும்.

இரும்பு அரப்பு கல்வம்.

மற்றொரு முறை:— (குறிப்பு:— இதுவே உயர்ந்த முறை) அதாவது உலாந்து லிங்கத்திலிருந்து ரஸத்தை எடுத்துக் கொள்ளுவதே. வேப்பிலையை இடித்து ரஸம் எடுத்து அந்த ரஸத்தால் உலாந்து லிங்கத்தைக் கல்வத்திலிட்டு ஒரு யாமம் (மூன்று மணி) அரைத்து உலர்த்தவும் அல்லது எலுமிச்சம்பழ ரஸத்தால் முன்போல அரைத்து உலர்த்தவும். பிறகு அதை ஓர் சட்டியில் போட்டு வாயக்கு ஓர் சட்டியைக் கவிழ்த்து மூடி, சந்துவாய்க்குச் சீலைமண் செய்து காயவைத்து அடுப்பேற்றி 12 மணி எரிக்கவும். ஆறவிட்டு எடுத்து மேல் சட்டியில் பதங்கித்திருக்கும் ரஸத்தை எடுத்துக்கொள்ளவும் (குறிப்பு— உயர்ந்த உலாந்து லிங்கமாக இருந்தால் லிங்கத்தின் எடைக்குப் பாதி எடை ரஸம் கிடைக்கும்) ரஸம் எடை குறைந்திருந்திருந்தால் மறுபடியும் முன்போல செய்து எரித்து மேல் சட்டியில் பதங்கிக்கும ரஸத்தை எடுத்துக்கொள்ளவும். இவ்விதம் எடுக்கப்படும் ரஸம் சுத்தமானது இதில் ஏழு கஞ்சுகங்கள் சம்பந்தப்படுவதில்லையாதலால் முன்சொன்ன எட்டு ஸம்ஸ்காரங்கள் இதற்குத் தேவையில்லை. மற்றொரு முறை:—முன் சொன்னபடி லிங்கத்திலிருந்து ரஸத்தை எடுத்து அதை தோலா யந்திரமாக இந்துப்பு நீரில் ஸ்வேதனம் செய்து மருந்துகளில் சேர்க்கவும். ரஸம் சுத்தமாகும். குறிப்பு—இங்கு லிங்கத்திலிருந்து எடுக்கப்பட்ட ரஸம் சுத்தமான போதிலும் அதாவது ஏழு கஞ்சுகங்களின்றி

சுத்தமாகவிருந்த போதிலும் இந்துப்பு நீரில் ஸ்வேதனம் செய்ய வேண்டுமென்று சொல்லியிருப்பதால் ரஸம் சுத்தமாயிருப்பது மாத்திரம் போதாதென்றும் அதற்கு வீர்யம் உண்டாகும்படி ஸம்ஸ்காரமும் அவசியமெனப் புலப்படுகின்றது. ஆனால் நூல்களில் "ஹிங்குளாகிருஷ்ட ஸூதஸ்து ஜீர்ணகந்த ஸமோ குணை" என்று கூறப்படுகிறது இதன் பொருள், 'லிங்கத்திலிருந்து முன்சொன்ன விதமாக ரஸத்தை எடுத்தால்அது நிர்துஷ்டமாக விருப்பதுடன் கந்தகஜாரணம் செய்த மாதிரி குணமுள்ளதாகவும் இருக்கின்றது. அதாவது முன் சொன்னபடி அஷ்ட ஸம்ஸ்காரங்கள் செய்த பிறகு அந்த ரஸத்திற்கு ஜாரணம் என்ற ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். ஜாரணங்கள் பலவிதமாக விருந்தபோதிலும் வைத்தியர்களுக்கு முக்கியமானது கந்தகஜாரணமே. கந்தகஜாரணம் செய்யாவிட்டால் எட்டு ஸம்ஸ்காரங்கள் செய்திருந்தபோதிலும் ரஸத்தின் உண்மையான குணம் காணப்படாது ரஸத்திற்குப் பிரத்யேகமாகச் சொல்லப்பட்ட பெருமையனைத்தும் கந்தகஜாரணத்தைப் பற்றியே நிற்கின்றது. "ஸமே கந்தேது ரோகக்ந: த்விகுணே ராஜயக்ஷ்மநுத்! ஜீர்ணேது த்ரிகுணே கந்தேகாமிநீ தர்ப நாசந:! சதுர்குணே து தேஜஸ்வீ ஸர்வ சாஸ்திர விசாரத! பலேத் பஞ்ச குணேஸித்த: ஷட்குணே மிருத்யுஜித் பவேத்!!" இதன் பொருள்—"ரஸத்திற்குச் சமயிடை கந்தகத்தை ஜாரணம் செய்தால் ரோகங்கள் நிவர்த்தியாகின்றன. ரஸத்திற்கு இரு மடங்கு கந்தகத்தை ஜாரணம் செய்தால் ராஜயக்ஷ்மா என்ற Tuberculosis விலகும். ரஸத்திற்கு மூன்று மடங்கு கந்தகத்தை ஜாரணம் செய்தால் தாது புஷ்டி உண்டுபண்ணும் ரஸத்திற்கு நான்கு மடங்கு கந்தகத்தை ஜாரணம் செய்தால் சித்திகளையுண்டுபண்ணும் ஆறுமடங்கு கந்தகத்தை ஜாரணம் செய்தால் மரணத்தை விலக்கும். மற்றொரு வசனம் கூறுவதாவது—'ரஸ குண பலிஜாரணம் விநாயம் நகலுருஜாம் ஹரணக்ஷமோ ரஸேந்திர:! நசகல தௌத பாகஹீந: ஸ்பிருசதி ரஸாயநதாமிதி ப்ரதிக்யா" இதன் பொருள்—"ரஸத்திற்கு ஆறு மடங்கு அதிகமான கந்தகத்தை ஜாரணம் செய்யாவிட்டால் அந்த ரஸம் வியாதிகளைப் போக்குவதாயுள்ளதாகாது. ரஸம் காயகல்பமாக ஆக வேண்டுமானால் அப்ரகம், தங்கம், இவைகளை ஜாரணம் செய்யவேண்டும். அப்பிரகம் தங்கம் இவைகளை ஜாரணம் செய்யாமல் ரஸம் ரஸாயனமாகாது."

ஆகவே கந்தக ஜாரணம் செய்யாமல் ரஸத்திற்கு சக்தி வருவது துர்லபம். லிங்கத்திலிருந்து எடுக்கப்படும் சுத்த ரஸத்திற்கும் கந்தகஜாரணம் செய்யவேண்டியது அவசியம். அதிலும் ஆறு மடங்கு அதிகமான கந்தகஜாரணமே முக்கியமானது. இதை வடமொழியில் ஷட்குண கந்தகஜாரிதம் என்பர்.

சாதாரணமாக ரஸத்தையும் கந்தகத்தையும் சேர்த்து அரைத்து குப்பி எரிப்பாகச் செய்யப்படும் ரஸசிந்தூரம் எதிர்பார்க்கும் பலனையளிப்பதில்லை யென்பது வைத்தியர்களின் அனுபவம். இவ்விதம் செய்யப்படும் சிந்தூரத்தை விட ரஸத்தையும் கந்தகத்தையும் நன்ருக மர்த்தித்து கஜ்ஜலி செய்து உபயோகிப்பது அதிக பலனையளிப்பதாக இருக்கின்றது. ரஸம் யோகவாஹி என்றும் ஸகல நோய்களும் ரஸத்தால் நிவர்த்தியாகுமென்றும் நூல்கள் கூறுகின்றது. தற்காலம் அனுபவத்தில் நூல்களில் சொல்லப்படும் பெருமை ரஸத்தில் காணப்படவில்லை. அதற்குக் காரணமென்னவெனில் அநேகமாக ரஸத்தைக் கையாளும் வைத்தியர்கள் லிங்கத்திலிருந்து ரஸத்தை எடுப்பதை மாத்திரம் அறிந்திருக்கிருர்களே யன்றி அதன் ஸம்ஸ்காரத்தை யறிந்தவர்களே துர்லபம். வஸந்த குஸுமாகரம் போன்ற மருந்துகளில் ரஸம் சேருமிடங்களில் எல்லாம் குப்பி எரிப்புச் சிந்தூரத்தையே சேர்க்கின்றனர், ஆகவே ரஸத்தின் குணம் அவைகளில் தகுந்தபடி காணப்படுவதில்லை கந்தகஜாரணம் செய்த ரஸம் தான் உண்மையில் வியாதிகளை நிவர்த்திக்கின்றது. ரஸஹ்ருதயத்தில் கோவிந்த பகவத்பாதர்களும் "மூர்சித்வா ஹரதி ருஜம்" என்று சொல்லியுள்ளார்கள். ரஸத்திற்கு மூர்ச்சனா என்ற ஸம்ஸ்காரம் செய்தால்தான் வியாதிகளைக் கண்டிக்குமென்பது அதன்பொருள். மூர்ச்சனா என்பதும் ஜாரணம் என்பதும் அநேகமாக ஒன்றே. ஆகவே தனிரஸம் குணம் கொடுக்கக்கூடியதல்ல வென்பதும் மூர்ச்சனா ஜாரணம் செய்தால்தான் குணம் கொடுக்குமென்பதும் தெளிவாகின்றது. ஜாரணம் என்ற சொல்லுக்கு மடிதல் என்பது பொருள் கந்தகஜாரணம் என்ருல் ரஸத்தில் கந்தகம் மடிதல் என்பதாகின்றது. கந்தகம் போலவே தங்கம், அப்பிரகம் முதலியவைகளாலும் ஜாரணம் செய்யும்படி நூல்கள் கூறுகின்றன வைத்தியர்களுக்கு முக்கியமாக வேண்டியது கந்தகஜாரணமே. கந்தகஜாரணம் செய்யத்தெரிந்த வைத்தியர்களே தற்காலம் மிகவும் துர்பலம் அப்பிரகஜாரணம் தெரிந்தவர்கள் தற்காலம் இல்லையென்றே சொல்லலாம் மருந்துகளில் ரஸம் சேர்க்கும்படி சொல்லுமிடங்களிலெல்லாம் கந்தகஜாரணம் செய்த ரஸத்தையே சேர்க்கவேண்டும் லிங்கத்லிருந்து எடுக்கப்படும் ரஸம் பிறவியிலேயே சுத்தமானதால் அதற்கு வேறு சுத்தி வேண்டியதில்லை. ஆனால் அதற்கும் கந்தகஜாரணம் வேண்டியது அவசியம் "கந்தகஜாரணா ரஹித; ஸம் சுத்தோபி ரஸ: யோகோஷு ந யோஜ்ய: । கத ஹந்த்ருத்வ சக்த்யனுதயாத் ॥" என்று வசனம் கூறுகின்றது இதன் பொருள்—" கந்தகஜாரணம் செய்யாமல் எட்டு ஸம்ஸ்காரங்கள் செய்து சுத்தமாகவிருந்தபோதிலும் ரஸத்தை மருந்து முறைகளில் சேர்க்கக்கூடாது. ஏனெனில் கந்தகஜாரணம் செய்யாமல் ரஸத்திற்கு வியாதிகளை நிவர்த்திக்கும் சக்தி உண்டாவதில்லை". ரஸாதெளபாக அவலேஹ குடிகா

சூர்ணேதௌ வா ரஸ யோகே விஹிதே யதாவசனம் ஸம்சுத்தோ மூர்ச்சிதோ கந்தகஜீர்ணே ஹேமாதிஜீர்ணே வா மிருத: அமிருதோ வா ரஸோ யோஜ்ய: இதி குருஸங்கேத:" என்று வசனம் கூறுகின்றது.

வஸந்தகுஸுமாகர ரஸம் முதலிய ரஸங்களிலும் லேஹியங்களிலும், குளிகைகளிலும், சூர்ணங்களிலும் மற்றும் பலவிதமான முறைகளிலும் எங்கெங்கு ரஸம் சேர்க்கும்படி கூறுகின்றனவோ அந்தந்த இடங்களிலெல்லாம் சுத்தம் செய்த அல்லது லிங்கத்திலிருந்து எரித்த ரஸத்தை கந்தக ஜாரணம் செய்தோ அல்லது ஸுவர்ணம் முதலியவைகளால் ஜாரணம் செய்தோ அதன் பிறகு பஸ்மம் செய்தோ அல்லது செய்யாமலோ சேர்க்கவேண்டியது என்பது குரு ரகஸியம். அவ்விதம் கந்தகம் முதலியவைகளால் ஜாரணம் செய்திருந்தபோதிலும் ரஸத்தை சுத்தி செய்யாவிட்டால் அதை உபயோகிக்கக்கூடாது. அவ்விதம் அசுத்த ரஸத்தை ஜாரணம் செய்து உபயோகித்தால் அது கெட்ட குணங்களைக் கொடுக்கும். "அவ்யபிசரித வ்யாதி காதகத்வம் மூர்ச்சனா" என்று வசனம் கூறுவதால் நிச்சயமாக வியாதியைப் போக்கடிக்கும் தன்மையே மூர்ச்சனையாகும் இம் மூர்ச்சனை பல விதங்களாக சொல்லப்பட்டிருக்கின்றன. நிர்கந்த மூர்ச்சனா, ஸகந்த மூர்ச்சனா என இரு விதங்களாகின்றன. இவற்றுள் நிர்கந்த மூர்ச்சனா என்பது வத்ஸநாபி முதலியவைகளால் செய்யப்படுகின்றது. இது ஓரேவிதமாகும். ஸகந்த மூர்ச்சனா என்பது பஹிர்தூமம், அந்தர்தூமம், நிர்தூமம். என மூன்று விதங்களாகும். பஹிர்மதூமம் = வெளியில் புகைவருவது அந்தர்தூதுமம் = உள்ளே புகைவது நிர்தூமம் = புகையாதது எனப்பொருள் இம்மூன்றும் கந்தபிஷ்டி, கந்தபந்தம். கந்தஜீர்ணம் கந்தகஜ்ஜலி, தாதுபிஷ்டி, என ஐந்து வகையாகும். அவற்றுள் தாதுபிஷ்டீ, என்பது தங்கப், வெள்ளி, தாமிரம், அப்பிரக ஸத்வம், அயம் என ஐந்து விதமாகும். ஆக மொத்தம் 27 மூர்ச்சனைகள் ஆகின்றன. இவற்றின் விவரமாவது (1) பஹிர்தூம கந்தபிஷ்டி (2) பஹிர்தூம கந்தபந்தம் (3) பஹிர்தூம கந்தஜீர்ணம் (4) பஹிர்தூம கந்தகஜ்ஜலீ (5) பஹிர்தூம ஸ்வர்ணபிஷ்டீ (6) பஹிர்தூம ரஜதபிஷ்டீ (7) பஹிர்தூம தாமிர பிஷ்டீ (8) பஹிர்தூம அப்பிரக ஸத்வபிஷ்டீ (9) பஹிர்தூம அயபபிஷ்டீ. இவ்விதம் பஹிர்தூம மூர்ச்சனை ஒன்பது விதமாகின்றது. இவ்விதமே அந்தர்தூம மூர்ச்சனை ஒன்பது விதங்களாகின்றன. அவையாவன— (1) அந்தர்தூம கந்தபிஷ்டீ (2) அந்தர்தூம கந்தபந்தம் (3) அந்தர்தூம கந்கஜீர்ணம் (4) அந்தர்தூம கந்தகஜ்ஜலீ (5) அந்தர்தூம ஸ்வர்ணபிஷ்டீ (6) அந்தர்தூம ரஜதபிஷ்டீ (7) அந்தர்தூம தாமிரபிஷ்டீ (8) அந்தர்தூம அப்பிரகஸத்வபிஷ்டீ (9) அந்தர்தூம அயபபிஷ்டீ. இவ்விதமே நிர்தூம மூர்ச்சனையும் ஒன்பது விதமாகின்றது. அவையாவன—

ஜீர்ணம் (4) நிர்தூம கந்தகஜ்ஜலி (5) நிர்தூம ஸ்வர்ணபிஷ்டீ (6) நிர்தூம ரஜதபிஷ்டீ (7) நிர்தூம தாமிரபிஷ்டீ (8) நிர்தூம அப்பிரகஸத்வபிஷ்டீ (9) நிர்தூம அயப்பிஷ்டீ என இவ்விதம் 27 வகைகளாக மூர்ச்சனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. மூர்ச்சனையும் ஜாரணையும் அனேகமாக ஒன்று அதாவது ஜாரணை இனத்தைச் சேர்ந்ததுதான் என்று ஏற்கனவே சொல்லியுள்ளோம். ஜாரணை என்பதில் மூர்ச்சனையில் சொல்லியுள்ள பேதங்கள் நூல்களில் காணப்படவில்லை. ஜாரணை என்பது எட்டு விதங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தர்தூம ஜாரணை, பஹிர்தூம ஜாரணை என்று அதை இரு விதமாகப் பிரித்து அந்த இருவிதங்களும் (1) இஷ்டிகா (2) காசுக்குப்பி (3) காசஸம்புடம் (4) யந்திரம் என நான்கு விதங்களாக வகுத்து மொத்தம் எட்டு விதங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. பொதுவாக வைத்தியர்கள் பஹிர்தூம ஷட்குண ஜாரணை என்ற கிரமத்தை அனுசரிக்கின்றனர். ஆகவே அதையே எழுதுகின்றோம். ஸ்வேதனம் முதலிய எட்டு அல்லது ஒன்பது ஸம்ஸ்காரங்கள் செய்து கட்டுப்பட்ட ரஸத்திற்குத்தான் ஷீ ஜாரணம் செய்யவேண்டும். கட்டுப்பட்ட ரஸம் என்பதை வடமொழியில் பத்தரஸம் என்பர். பத்தம் என்பதற்கு சுபாவமாக திரவமாகவிருக்கும்பொழுதே நெருப்பில் போட்டால் ஓடாமல் நிற்பது என்பது பொருள். இந்த பத்தம் என்ற தன்மை எட்டு ஸம்ஸ்காரங்களால் ரஸத்திற்கு உண்டாகின்றது இந்த எட்டு ஸம்ஸ்காரங்களைச் செய்ய முடியாதவர்கள் ஏற்கனவே சொல்லியுள்ளபடி இலகுசுத்திகளில் ஏதாவது ஒரு சுத்தியைச் செய்து கொள்ள வேண்டும். இவ்விதம் சுத்தி செய்த பிறகு முககரணம் என்ற ஓர் கிரியை ரஸத்திற்குச் செய்யவேண்டும் முககரணம் என்றால் ரஸத்திற்கு வாய் உண்டுபண்ணுவது என்பது பொருள். ரஸத்திற்கு வாய் உண்டுபண்ணுவதால்தான் சுவர்ணம் முதலியவைகளை அது விழுங்கும் அதாவது ஏற்றுக்கொள்ளும். முககரணமென்பது ஓர் தனித்த ஸம்ஸ்காரமல்ல. தீபனம் என்ற ஸம்ஸ்காரத்தில் அடங்கியதே.

முககரணம்:— இந்துப்பு, முருங்கை, மயில் துத்தம், கடுகு, மிளகு, இவைகளால் மூன்று நாள் அரைத்து பிறகு இவைகளால் ஸ்வேதனம் செய்ய ரஸத்திற்கு முகமுண்டாகும். வேறுமுறை:— திரிகடு, யவக்ஷாரம், சத்திக்ஷாரம், கடுகு, பஞ்சலவணம், உள்ளிப் பூண்டு, நவாச்சாரம், முருங்கை, இவைகளைச் சமயிடையாக எடுத்துப் பொடிசெய்து அந்தப்பொடிக்குச் சமயிடை சுத்தி செய்த ரஸத்தைச்சேர்த்து எலுமிச்சம்பழச்சார், காடி இவைகளில் ஏதாவது ஒரு ரஸம் விட்டு தப்த கல்வத்தில் மூன்று நாள் அரைக்க ரஸத்திற்கு முகமுண்டாகும். இவ்விதம் முககரணம் ஆன பிறகு முன்சொல்லியபடி பஹிர்தூம ஷட்குண கந்தகஜாரணை செய்யவேண்டும். அதாவது ரஸத்தின் இடைக்கு ஆறுமடங்கு

கந்தகத்தை ரஸத்துடன் அடியில் சொல்லப்படும் முறையாகச் சேர்த்து ரஸத்தில் கந்தகம் மடியும்படி செய்யும் கிரமம். கந்தக ஜாரணம் செய்வதற்கும் மற்ற ஜாரணங்கள் செய்வதற்கும் யந்திரங்கள் சகாயம வேண்டும். அதற்காகப் பல யந்திரங்கள் சொல்லப்பட்டிருந்தபோதிலும் முக்கியமான யந்திரங்கள் இரண்டு கூறப்பட்டுள்ளன. இந்த இரண்டு யந்திரங்களும் மணல் சம்பந்தம் பெற்றவை இவற்றுள் ஒன்றுக்கு பூதரயந்திரம் என்றும் மற்றொன்றுக்குக் கூர்மயந்திரமென்றும் பெயர் அவைகளைச் செய்யும் உபாயமாவது:— பூதரயந்திரம் — புத்து மண்ணையும் கிழிந்த வஸ்திரத்தையும் ஜலத்தை விட்டு ஊறவைத்துச் சிலநாள் அப்படியே வைத்திருந்து நன்றாக ஊறின பிறகு அப்படியே கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து (அவசியமானால் ஜலம் விட்டுக் கொள்ளலாம்) அதால் ஓர் கெட்டியான காசுக்குப்பிக்கு ஏழு சீலைமண் செய்து நன்றாக உலர்த்தவேண்டும். பிறகு அந்தக் காசுக்குப்பிக்கு ஏற்ற ஓர் மண் சட்டி அல்லது பானையை எடுத்து அதன் அடியில் நடுபாகத்தில் கட்டைவிரல் பிரமாணம் ஓட்டை செய்துகொள்ளவும். பிறகு அந்த காசுக்குப்பியில் அடியில் சொல்லப்போகும் முறையில் ரஸம் கந்தகங்களைப்போட்டு அந்தக் காசுக்குப்பியை முன்சொன்ன சட்டியின் ஓட்டை பாகத்தில் வைத்துச் சுற்றிவர இரண்டு அல்லது மூன்று விரல் பிரமாணம் உப்பைப்போட்டு அதற்குமேல் மணலைப்போட்டு நிறப்பி அடுப்பேற்றி மூன்று அல்லது நான்கு நாள் ஐந்து அல்லது ஆறு நாள் எரிக்கவேண்டும். இது ஓர்வகை யந்திரமாகும் இதற்கு ஊர்த்வயந்திரம் எனவும் பெயர். மற்றொரு வகை யந்திரமாவது ஒரு முழம் அகலம் நீளம் ஆழமுள்ள குழி தோண்டி அக்குழியில் முன்சொன்னபடி காசுக்குப்பியை வைத்து மணல் நிறப்பி மேல் புடமிடவும் இம்முறையில் காசுகுப்பிக்குக் கழுத்து நீண்டிராமல் சப்பட்டையாகவும் குறுகியும் இருக்கவேண்டும் அதாவது மசிக்கூடுபோல் கழுத்து உயரமில்லாமல் இருக்கவேண்டும். காசுக்குப்பியின் வாய்க்கு மாக்கல் மூடி பொருத்தி வாய்க்குச் சீலைமண் செய்து காயவைத்துப் பிறகு புடம் போடவேண்டும். இதற்கு அதோயந்திரம் எனவும் பெயர். இந்த இரண்டு யந்திரங்களில் கந்தகஜாரணம் செய்யவேண்டும். கந்தகஜாரணத்தில் ரஸத்தையும கந்தகத்தையும் சேர்த்து அப்படியே கல்வத்தில் அரைத்து ரஸம் மடிந்த பிறகு அதாவது ரஸமும் கந்தகமும் நன்றாகக் கலந்து ஒரே கறுப்பாக ஆனபிறகு அதை முன்சொன்ன காசுக்குப்பியில் போட்டு எரிப்பது ஓர் விதம். ரஸத்தையும் கந்தகத்தையும் சேர்த்து அரைக்காமல் கந்தகத்தை மாத்திரம் பொடிசெய்து ரஸத்திற்குக் கீழும் மேலும் போட்டு எரிப்பது மற்றுமோர் விதம். ரஸத்திற்குச் சமயிடையாக கந்தகத்தை எடுத்துக்கொண்டு முன்சொன்ன இரண்டு விதங்களுள் ஏதாவது ஒரு விதமாக ஜாரணம் செய்யவேண்டும். இவ்விதம் ஆறுதடவை

செய்தால் அது ஷட்குண கந்தகஜாரணம் என்று சொல்லப்படுகின்றது. இந்த ஜாரணத்திற்கு முன் சொன்ன இரண்டு யந்திரங்கள் நீங்கலாக கச்சபயந்திரம் என்ற ஓர் யந்திரம் உண்டு. முன் சொன்ன இரண்டு யந்திரங்களில் ஜாரணம் செய்தால் ரஸத்தில் நல்ல நிறம் அதாவது சிகப்பு நிறம் நன்ருக உண்டாவதில்லை ஆகையால் முன் சொன்ன இரண்டு யந்திரங்களில் ஏதாவது ஒன்றில் மூன்று ஜாரணங்களைச் செய்துவிட்டுப் பிறகு மூன்று ஜாரணங்களை கச்சபயந்திரத்தில் செய்தால் நல்ல ரோஜா கலர் உண்டாகும்.

கச்சபயந்திரம்—ஜலம் நிறைந்த ஓர் மண் சட்டியைக் கழுத்து வரையில் பூமியில் புதைக்கவேண்டும். சட்டியின் வாயை ஓர் அகல் அல்லது வாணையால் மூடவேண்டும். அந்த வாணைக்கு நடுவில் ஓர் சந்து செய்யவேண்டும். ஓர் மண் குகையை அந்த சந்தில் வைத்து அடிபாகம் கீழ் சட்டியிலிருக்கும் ஜலத்தில் படும்படி வைத்து அந்த மண் குகையில் ரஸத்தை வைத்து ரஸத்திற்கு கீழும் மேலும் ரஸயிடை கந்தகப்பொடியைப் போடவேண்டும். அதாவது ரஸயிடை கந்தகம் எடுத்துப் பொடிசெய்து பாதி பொடியை குகையில் போட்டு மேலே ரஸத்தை வைத்துப் பிறகு அதன்மேல் பாதி பொடியைப் போடவேண்டும். சட்டி வாயில் பதிந்திருக்கும் வாணைக்கு மேல் மற்றொரு வாணையை மூடி வாய்க்குச் சீலேமண் செய்து மேல் சட்டியின்மேல் லகுவாகப் புடமிட அதாவது பசு எரு ஐந்தாறு எரு அடுக்கிப் புடமிடவும் ஆறின பிறகு மறுபடியும் முன்போல கந்தகப்பொடியைப்போட்டு புடமிடவும். இவ்விதம் ஆறு தடவை செய்தால் ஷட்குண கந்தக ஜாரணம் ஆகும். முன் சொன்ன இரண்டு யந்திரங்களில் கந்தக ஜாரணம் செய்தால் நல்ல நிறம் உண்டாவதில்லை ஆகையால் மூன்று ஜாரணங்கள் இவைகளில் செய்து பிறகு மூன்று ஜாரணம் கச்சபயந்திரத்தில் செய்தால் நல்ல நிறமாக இருக்கும். மற்றொரு முறை கச்சபயந்திரம்—ஓர் பானையில் ஜலம் நிறைய விட்டு அதன் வாயைத் தட்டையான தோசைக்கல் போன்ற மண் மூடியால்மூடி அந்த மூடிக்கு நடுவில் ஓர் சிறிய குழி வைத்து (அதாவது மூடியில் குழி போன்று வட்டமாக ஓர் அடைப்பு செய்து அந்த அடைப்பில் ரஸத்தை விட்டால் சிந்திப்போகாமலிருக்கும்படி செய்து கொள்ளவேண்டும்.) அக்குழியில் சுண்ணாம்பு தடவி ரஸத்தை விட்டு அதன்மேல் கந்தகப்பொடியை ஸமயிடை போட்டு மேல் சட்டி மூடி சந்து வாய்க்குச் சீலேமண் செய்து மேல் சட்டியில் 3—4 எருக்களை வைத்துப் புடம் போட்டு ஆற விட்டு எடுத்து மறுபடியும் முன்போல இவ்விதம் ஆறு தடவை செய்யவும். இந்த இருவகையான கச்சபயந்திரங்களுள் ஏதாவது ஒன்றில் கந்தக ஜாரணம் செய்யவும்.

கந்தகஜாரணம் சுருக்குவழி:— அடியில் கண்ட விதமாகச் சுருக்கமான வழியில் கந்தகஜாரணம் செய்துகொள்ளுவது நலம். இவ்வழிதான் தற்காலம் வைத்தியர்களால் பின் பற்றப்படுகின்றது. ஆகவே இது அனுபவ முறையாகும். முன்போல காசுக் குப்பியைத் தயாரித்து அதில் சமயிடையாக ரஸத்தையும் கந்தகத்தையும் சேர்த்து அரைத்து (ஜலம் விடாமல்) அந்தப்பொடியைப் போட்டு முன்சொன்ன ஊர்த்வயந்திரம் என்ற வாலுகாயந்திரத்தில் நான்கு ஜாமம் அதாவது 12 மணி எரித்து ஆறவிட்டு எடுத்து காசுக்குப்பிக்குள் இருக்கும் ரஸத்தை எடுத்துச் சமயிடை கந்தகம் சேர்த்து முன்போல் அரைத்து முன்போல காசுக்குப்பிக்குள் போட்டு முன்போல எரித்து முன்போல எடுக்கவும். இவ்விதம் மொத்தம் ஆறு தடவை செய்யவும். ஷட்குண கந்தகஜாரணம் ஆகும். மற்றொரு விதம்—உலர்ந்த லிங்கத்தையும், கந்தகத்தையும் சமயிடை எடுத்துப் பொடிசெய்து முன்போல காசுக்குப்பியில் போட்டு எரித்து இவ்விதம் 6 தடவை செய்து எடுக்க ஷட்குண கந்தகஜாரணம் ஆகும். இம்முறைகளில் ஆறு தடவை எரிப்புக்கும் ஒரே காசுக்குப்பி உடையாமல் இருப்பது துர்லபம். காசுக் குப்பி உறுதியாக இல்லாவிட்டால் புதிய காசுக்குப்பிகளை உபயோகித்துக் கொள்ளலாம் இவ்விதம் செய்யும்பொழுது ரஸமானது ரஸஸிந்தூரம் போல் ஆகிவிடுமாகில் அப்பொழுது அதை ஓர் சட்டியில் போட்டு உலர்ந்த லிங்கத்திலிருந்து ரஸம் எடுப்பது போல மேல் சட்டி மூடி அடுப்பேற்றி நான்கு யாமம் எரித்து மேல் சட்டியில் பதங்கித்திருக்கும் ரஸத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் கந்தகஜாரணத்தால் ரஸத்திற்குப் பூர்ண சக்தி வருவதோடு ரஸத்தினுடைய வாய் வெந்துபோகும். துர் குணமும் மாறிவிடுகின்றது. தனி ரஸம் சாப்பிட்டால் வாய், குடல், முதலியவை வெந்து புண்ணாகிவிடுமென்பது உலகமறிந்த விஷயம் கந்தகஜாரணத்தால் அத்துர்குணம் போய்விடுகின்றது.

ரஸத்திற்குப் பூர்ணசக்தியை யுண்டுபண்ணுவதிலும் துர் குணங்களை மாற்றுவதிலும் கந்தகஜாரணம் முக்கியமான ஸம்ஸ்காரமாகின்றது. மற்ற மூலிகைகளுக்கும் தாதுக்களுக்கும் இல்லாத பெருமை சாஸ்திரங்களில் ரஸத்திற்குக் கூறப்பட்டிருக்கின்றது "ஏகோஸௌ ரஸராஜ: சரீரமஜராமரம் குருதே" ரஸம் ஒன்றுதான் சரீரத்திற்கு ஜராமரணங்களை விலக்குகின்றது. மற்ற கல்பங்கள் ஓரளவு நன்மையைக் கொடுத்தபோதிலும் மூப்பு மரணங்களை அடியோடு விலக்கிவிடும் பெருமை ரஸம் ஒன்றிற்கே உரித்தானது. இம்முறையால் தான் சித்தர்கள் என்ற ஓர் பதவியை நமது முன்னோர்கள் பெற்றதாக நமது நூல்கள் கூறுகின்றன. நூல்கள் கூறும் மார்க்கங்களில் ரஸத்தை பஸ்மம் செய்து உபயோகிப்பதென்பது தற்காலம் அனுபவத்தில் காணப்படவில்லை இருந்தபோதிலும் ஓரளவு சுத்தி செய்து பதங்கித்து எடுத்து

முறைகளில் சேர்த்து உபயோகிப்பதுதான் தற்காலத்தில் வழக்கத்தில் இருந்து வருகிறது. இவ்விதம் செய்வதே பல நோய்களை விலக்கப் போதுமானதாகின்றது. ரஸேந்திர ஸாரஸங்கிரஹம் என்ற ஓர் வடமொழி வைத்ய நூலில் சந்திரோதயம் என்ற ஓர் முறை காணப்படுகின்றது. அது தங்கம் ரஸம் கந்தகம் இவைகளை அளவுப்படி எடுத்து குப்பியிலிட்டு மூன்று நாள் வாலுகா யந்திரமாக எரித்துத் தயாரிக்கப்படுகின்றது. இம்மருந்திற்கே மகரத்வஜம் எனவும் ஓர் பெயருண்டு "தந்த்ராந்தரே ப்ரஸித்தோயம் மகரத்வஜநாமத" என்று சந்திரோதயம் என்பதும் மகரத்வஜம் என்பதும் ஒரே மருந்தெனக் கூறப்பட்டுள்ளது. இம்முறை தமிழ் நூல்களிலும் காணப்படுகின்றது. இம்மருந்தைப் போற்றாத நூல்கள் கிடையாது இந்தியா தேச முழுவதும் அனேகமாக எல்லாரும் இம்மருந்தை யறிவர் ஆனால் உண்மையில் இம்மருந்தை உபயோகித்த பலர் இம்மருந்தின் வியாதிக்குத் தகுந்தவளவு குணம் காணப்படவில்லையென அனுபவத்தில் அறிந்திருக்கின்றனர். அதற்குக் காரணங்கள் இரண்டு. முதல் காரணமாவது—அதில் சொல்லப்பட்டுள்ள தங்கத்தை மருந்தில் சேரவொட்டாமல் பிரித்து விடுவது. இரண்டாவது காரணம்—ரஸத்தை கந்தகஜாரணமின்றி சேர்ப்பது. வடநாட்டில் சிலர் தங்கத்தை மருந்திலிருந்து பிரித்துவிடுவதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளுகின்றனர். இதற்குக் காரணம் என்னவெனில் பைஷஜ்யரத்நாவளீ போன்ற நூல்களில் சந்திரோதயம் என்றும் மகரத்வஜம் எனவும் வெவ்வேறான இரு மருந்துகள் கூறப்பட்டிருக்கின்றன சந்திரோதயம் என்ற மருந்தில் தங்கத்தைச் சேர்த்தும் மகரத்வஜம் என்பதில் தங்கத்தைப் பிரித்தும் தயாரிக்கின்றனர். சந்திரோதயம் என்பதே பூர்ணசந்திரோதயம் எனப்படுகின்றது. தென் தேசத்தினர் இருவகை மருந்தும் ஒன்றாகவே நூல்கள் கூறுவதால் தங்கத்தைப் பிரிக்காமல் சேர்த்துவிடுகின்றனர் சந்திரோயத்தில் தங்கம் சேர்ந்திருப்பதாக வடதேசத்தினர் கூறியபோதிலும் இவ்விரு மருந்துகளும் ஒன்றெனஅறியாமை காரணமாகப் பொதுஜனங்கள் மனதில் மகரத்வஜத்தில் தங்கம் கிடையாதென்பதே ஊறிக்கிடக்கின்றது. ஆகவே தென் தேசத்தினர் மகரத்வஜம் என்ற பெயரை விட்டு விட்டு சந்திரோதயமென்ற பெயரைக் கொள்ளுவதே உசிதமாகும். ரஸம் கந்தகம் இவைகளுடன் சேர்த்து எரிக்கப்படும் தங்கம் வெட்டையாகி விடுவதால் மருந்தில் கலந்துவிட ஹேதுவாகின்றது அகவே சந்திரோதயத்தில் தங்கரேக்குகள் அல்லது சுருள் தங்கத்தைச் சேர்க்கவேண்டும். வட தேசத்தினர் மகரத்வஜத்தில் தங்க ரேக்கைச் சேர்த்தால் பிறகு அதைப் பிரிக்கமுடியாது போவது பற்றி சற்று கெட்டியான தகடுகளைச் சேர்க்க வேண்டியதாகின்றது. இரண்டாவது காரணத்தை முக்கியமாக கவனிக்கவேண்டியது அவசியமாகும். சுத்தி செய்த ரஸத்தையும் கந்தகத்தையும்

சேர்த்து அரைத்து எரிப்பதால் ஏற்படும் சிந்தூரம் அனேகமாக வேகம் குறைந்து குணக் குறைவையுமடைகின்றது. ஆகவே அது ரோக நிவாரணத்திற்கேற்றதாக ஆகாமல் போய்விடுகின்றது. பல நாட்கள் உபயோகித்தும் நல்ல பலன் கிடைப்பதில்லை. கந்தக ஜாரணம் செய்த பிறகு அந்த ரஸத்தைச் சேர்த்து எரித்தால் அது மிகுந்த பலனையளிக்கும். ஜாரணம் செய்த பிறகு ரஸத்தை ஓர் சட்டியிலிட்டு மேல் சட்டி கவிழ்த்து மூடி வாய்க்குச் சீலைமண் செய்து லிங்கத்திலிருந்து ரஸம் எடுக்கும் முறையில் எரித்து மேல் இருக்கும் பதங்கத்தை எடுத்துக்கொள்ளவும். இதற்கு மேலுள்ள மற்ற ஸம்ஸ்காரங்கள் ரஸவாதத்திற்கும் கல்ப முறைக்கும் முக்கியமானவை. வைத்தியத்தில் அவைகளுக்குச் சம்பந்தமில்லையாகையால் அவை இங்கு விவரிக்கப்படவில்லை. தவிர அவை நூல்களில் மாத்திரம் காணப்படுகின்றனவேயன்றி அனுஷ்டான சாத்தியங்களாகவும் இல்லை. ரஸவாதத்தில் முக்கியமான ரஸஹ்ருதய மென்ற வடமொழி நூலை இனி மொழி பெயர்க்கும்போது அவை விவரிக்கப்படும்.

ரஸபந்தங்கள் :— ரஸபந்தங்கள் 25 என்று சில நூல்களும் நான்கு என்று சில நூல்களும் சொல்லுகின்றன. பந்தம் என்பது ரஸத்தைக் கட்டுதல் எனப்பொருளைக் கொடுக்கும். சாதாரணமாகக் கடையில் கிடைக்கும் ரஸத்தைக் கையால் அல்லது விரல்களால் எடுத்தால் அகப்படாமல் நழுவிக்கொண்டு போய்விடுகின்றது அத்தன்மையை விலக்குவதுதான் பந்தமெனப்படும். இந்த பந்தம் 25 வகையென முன் சொன்னோம். அவையாவன: (1) ஹடம் (2) ஆரோடம் (3) ஆபாஸம் (4) க்ரியாஹீநம் (5) பிஷ்டிகா (6) க்ஷாரம் (7) கோடம் (8) பாடம் (9) கல்கபந்தம் (10) கஜ்ஜலீ (11) ஸஜீவம் (12) நிர் ஜீவம் (13) நிர் பீஜம் (14) ஸபீஜம் (15) சிருங்கலா (16) த்ருதிபந்தம் (17) பாலம் (18) குமாரகம் (19) தருணம் (20) விருத்தம் (21) மூர்த்தி பந்தம் (22) ஜலபந்தம் (23) அக்னிபந்தம் (24) ஸுஸம்ஸ்கிருத கிருதம் (25) மஹாபந்தம். ஜலௌகா பந்தம் என்று ஓர் பந்தம் 26-வதாகச் சிலர் சொல்லுகின்றனர் அது உண்மையே. அந்த பந்தம் வியாதிக்கு உள்ளுக்கு உபயோகமாவதில்லை. தாது புஷ்டி காரியாக வெளிக்கு மாத்திரம் உபயோகப்படுகின்றது. வேறு சிலர் பாடம், கோடம், ஜலௌகா, பஸ்மம் என நான்கு விதமென்கின்றனர். இந்த மதத்தில் வெளிப்பிரயோகத்திற்கு மாத்திரம் ஏற்பட்ட ஜலௌகா பந்தம் நீங்கலாக மற்ற மூன்று பந்தங்கள் உள்ளுக்கு உபயோகிக்கத் தகுந்தவைகளாகின்றன. முன்சொன்ன 26 வகைகளில் இந்நான்கும் அடங்கியவைகளே. உண்மையில் இந்நான்கு பந்தங்களே முக்கியமானவை. இந்த 26 பந்தங்களுக்கும் லக்ஷணங்கள் அடியில் காணுமாறு நூல்களில் கூறப்பட்டுள்ளன.

1. ஹடம்—ரஸத்தை நன்றாகச் சுத்திசெய்யாமல் செய்யப் படும் பந்தங்கள் எல்லாம் ஹடம் என்று அழைக்கப்படுகின்றன அதாவது கீழே சொன்ன ஒன்பது வித ஸம்ஸ்காரங்கள் செய்யாமல் அல்பமாக சுத்திசெய்து அதை பந்தம் செய்தால் அது ஹடபந்தமாகும் அந்த ரஸத்தை உள்ளுக்கு உபயோகித்தால் பல வியாதிகளையுண்டுபண்ணி கடைசியில் அகால மரணத்தையும் விளைவிக்கும். (2) ஆரோடம்—நன்றாக சுத்திசெய்து அந்த ரஸத்தை பந்தம் செய்தால் அது ஆரோடம் எனப்படும். இந்த ஆரோடபந்தம் உள்ளுக்கு உபயோகித்தால் கிரமமாக வியாதிகளை நிவர்த்தி செய்வதுடன் கல்பமுறைகளுக்கும் ஏற்றதாகின்றது. (3) ஆபாஸம்—தாதுக்கள் அல்லது மூலிகைகள் இவைகளுடன் சேர்ந்திருந்து பந்தமடைந்த ரஸம் பிறகு சில காலத்தில் தன் பூர்வ நிலைமையை யடையுமாகில் அது ஆபாஸ பந்தமெனப்படும். அதாவது பந்தமடைந்த ரஸம் முன்போல பழைய உருவம் அடைந்து மறுபடியும் ஜனிப்பது ஆபாஸமாகும். இந்த பந்தம் குணங்களையும் துர் குணங்களையும் செய்யும். (4) க்ரியாஹீநம்—சுத்தி செய்யாத உலோஹம் முதலியவைகளால் செய்யப்படும் பந்தம் க்ரியாஹீநமெனப்படுகின்றது அதாவது ரஸத்தை சுத்தி செய்துகொண்டு அதில் சுத்தி செய்யாத உலோஹங்களைச் சேர்த்து மூலிகை ரஸம் முதலியவைகளால் பர்தித்துச் செய்யப் படும் பந்தம் க்ரியாஹீநமாகும் இந்த பந்தம் சற்று அபத்தியம் செய்துவிட்டால் நோயாளிக்குத் தீங்கை விளைவிக்கும் (5) பிஷ்டிகா—நன்றாகச் சுத்திசெய்த ரஸத்தைக் கல்வத்திலிட்டு கடும் வெய்யிலில் வைத்து மூலிகை ரஸம் முதலியவைகளால் கைவிடாமல் அரைக்க ரஸம் வெண்ணை போல ஆகும். இதற்கு பிஷ்டிபந்தமெனப் பெயர். இது நோயாளிக்கு மிகுந்த நன்மை யைக் கொடுக்கும். நல்ல தீபன சக்தியை உண்டுபண்ணும் (6) க்ஷாரம்—சங்கு, முத்துச்சிப்பி, பலகறை, (இதைச் சோகி என்பர்) இவை முதலியவைகளால் ரஸத்தை பந்தம் செய்தால் அது க்ஷாரபந்தமாகும். அதாவது முன் சொன்ன வஸ்துக்களைச் சுன்னம் செய்து சுத்திசெய்த ரஸத்தையும் சேர்த்து மூலிகை ரஸங்களால் அரைக்க அது க்ஷாரபந்தமெனப்படும் இந்த பந்தம் தீபனத்தை விருத்தி செய்யும் சூலநோயைப் போக்கும். சரீர புஷ்டியை யளிக்கும். (7) கோடம்—இதைத் தமிழில் கட்டு என்பர் சுத்திசெய்த ரஸத்தை நெருப்பில் வைத்து ஊத அது உருகிக் கட்டிப்போகுமாகில் அது கோடபந்தமெனப்படும். அதாவது சுத்தி செய்த ரஸத்தை மூலிகை முதலியவைகளால் அரைத்து உருட்டி ஓர் குகையில் வைத்துத் தணலில் ஊத அது உருகி மணிபோல் கட்டும் இது கோடபந்தமாகும் இது விஷங்களை விலக்கும். (8) பாடம்—இதற்கு பர்படீ பந்தமெனவும் மற்றொரு பெயர் உண்டு. பர்படீ என்ற வடமொழிக்கு அப்பளாம் எனத்தமிழில் பொருள். மலையாள பாஷையில் அப்பளாத்திற்கு

பர்படம் என்று வழங்குகின்றனர். இந்த பந்தம் அப்பளம்போல செய்யப்படுவதால் பர்படீ எனப் பெயர் பெறலாயிற்று. ரஸத்தை உருக்கி ஓர் வாழைக்குருத்து இலையில் அப்பளம்போல மெல்லியதாகப் பாவும்படி விட அது பாட பந்தம் அல்லது பர்படீ பந்தமாகும். அதாவது சுத்தி செய்த ரஸத்தை சுத்தி செய்த கந்தகத்துடன் சேர்த்துத் தண்ணீர் விடாமல் நன்றாகக் கலக்கும்படி அரைத்துப் பிறகு ஓர் இரும்புக் காண்டியில் அப்பொடியைப் போட்டுத் தணலில் வைக்க உருகும். உருகினவுடன் ஏற்கனவே பசுஞ்சாணியைப் பரப்பி அதன்மேல் விரித்து வைத்திருக்கும் வாழையிலையில் அதை அப்பளாம்போல அதிக கனமில்லாமல் இருக்கும்படி பரவலாக விட அது கெட்டியாகும். இதற்கு பர்படீபந்தமெனப் பெயர் இது சகல நோய்களையும் தீர்க்கவல்லது (9) கல்கபந்தம்—சுத்தி செய்த ரஸத்தை தோலா யந்திரமாகக் கட்டி ஓர் சட்டியில் தொங்கவிட்டு திரவங்களால் ஸ்வேதனம் செய்து ரஸம் விழுதாக ஆகும்படி செய்வது கல்கபந்தமாகும். இந்த பந்தம் நூல்களில் கூறியவண்ணம் பூர்ண குணங்களைக் கொடுக்கும். (10) கஜ்ஜலீ—ரஸத்தையும் (சுத்தி செய்த) கந்தகத்தையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து மைபோல ஆனால் அது கஜ்ஜலீ பந்தமாகும். இந்த பந்தமும் மிகுந்த குணங்களைக் கொடுக்கும். (11) ஸஜீவம்—ரஸத்தைப் புடமிட அது பஸ்மமாகி இடை குறையுமாகில் அது ஸஜீவபந்தமாகும். அதாவது சுத்திசெய்த ரஸத்தை சில மூலிகை முதலியவைகளால் அரைத்துப் புடம் போடும்பொழுது வைத்த இடை குறையுமாகில் அது ஸஜீவபந்தமெனப்படும் அதைச் சாப்பிட்டால் ரஸபஸ்மத்தின் குணங்கள் ஒன்றும் காணப்படா. ஆகவே ரோகங்களை நிவர்த்திப்பதில் சற்றும் பயன் படாது. குறிப்பு:— தற்காலம் ரஸ பஸ்மம் செய்வதாகப் பெருமை பேசுபவர் இந்த ஸஜீவபந்தம் செய்கின்றனர். அதாவது ஒரு தோலாயிடை ரஸத்தை மூலிகைச் சாற்றால் அரைத்து பில்லை தட்டிக் காயவைத்து லகு புடமிட்டு ஆறின பிறகு பார்க்கும் பொழுது ரஸம் பஸ்மமாகக் காணப்படும். நிறுத்துப் பார்த்தால் அரைத்தோலா யிடைக்குக் குறைவாகவே காணப்படும். ரஸத்தில் எது முக்கியமான ஸாரமான பாகமோ அது நெருப்பில் ஓடிவிடுகின்றது. திப்பியான அஸாரமான பாகம் பஸ்மமாக நிற்கின்றது இதை உபயோகிக்க சற்றும் குணம் காணப்படுவதில்லை. (13) நிர்ஜீவம்—அப்பிரக ஜாரணம் அல்லது கந்தக ஜாரணம் செய்து அந்த ரஸத்தை பஸ்மம் செய்தால் அது நிர்ஜீவ பந்தமாகும். அதாவது முன் சொன்ன வழியில் கந்தகஜாரணம் செய்யவேண்டும் அல்லது அப்பிரகஜாரணம் செய்யவேண்டும். இந்த அப்பிரகஜாரணம் என்பது முன்போல கந்தகத்திற்குப் பதிலாக அப்பிரகத்தைக் கொடுத்து ஜாரணம் செய்வதாகும். இந்த அப்பிரகஜாரணம் நூல்களில் மிகவும் பெருமையாகச்

சொல்லப்பட்டபோதிலும் நமக்கு தற்காலம் அனுபவ ஸாத்திய மில்லை. நமக்குத் தெரிந்தவரையில் அப்பிரகஜாரணம் தெரிந்த மகான்கள் கிடையாதென்று சொல்லக்கூடும் கந்தகஜாரணம் செய்வதற்கே மிகுந்த அனுபவம் வேண்டும். இல்லாவிடில் சரியாக ஜாரணம் சித்திப்பதில்லை. முன் சொன்ன ஜாரணங் களில் ஏதாவது ஒரு ஜாரணத்தைச் செய்து பிறகு அந்த ரஸத்தை புடமிட்டு பஸ்மம் செய்தால் அது இடை குறையாமல் இருக்கவேண்டும். அவ்விதம் இடை குறையாத பந்தம் நிர்ஜீவ பந்தம் அதாவது ரஸத்தின் ஸாரமான ஜீவஸத்தும் நெருப்புக்கு ஓடாமல் சேர்ந்து பஸ்மமாகி இருப்பதால் நிர்ஜீவபந்தமென அது அழைக்கப்படும். இந்த பந்தம் மிகவும் உயர்ந்தது. விரைவில் ரோகங்களைக் கண்டிக்கும் (13) நிர்பீஜபந்தம்—சுத்தி செய்த ரஸத்தின் இடைக்கு நான்கில் ஒரு பங்கு சுவர்ணம் எடுத்து அதை ரஸத்தில் ஜாரணம் செய்து பிறகு அந்த ரஸத் துடன் கந்தகத்தைச் சேர்த்துப் பிறகு பில்லை தட்டி காயவைத்து அதன் இடைக்கு சரியிடை கந்தகம் சேர்த்துப் புடமிட்டு செய்யப்படும் ரஸபஸ்மம் நிர்பீஜபந்தமாகும். அதாவது ரஸத்திற்கு கந்தக ஜாரணம் செய்வது போலவே ஸ்வர்ணம் முதலியவைகளாலும் ஜாரணம் செய்யலாம். ஆனால் அப்பிரக ஜாரணம் போலவே இந்த ஜாரணமும் அனுஷ்டித்தல் அஸாத்யம். அஸாத்யமாகிலும் அதன் விவரம் விளங்க நூல் களில் கூறப்பட்டிருப்பதை அப்படியே எழுதுகின்றோம். முதலில் கந்தகஜாரணம் செய்யவேண்டும். அதற்குப் பிறகு சுவர்ண ஜாரணமும் பிறகு அப்பிரக ஸத்வஜாரணமும் செய்யவேண்டும். அதாவது கந்தகஜாரணம் செய்யாவிட்டால் அந்த ரஸத்திற்கு சுவர்ணஜாரணம் செய்ய முடியாது. ஜாரணம் என்றால் மடிந்து போதல் என்பது பொருள். ரஸத்தில் சுவர்ணம் மடிந்து போதல் என்பதாகின்றது அதாவது ரஸத்தில் தங்கத்தைக் கொடுத்தால் தங்கம் அந்த ரஸத்தில் மடிந்து போகவேண்டும் உதாஹரண மாக ஒரு தோலாயிடை ரஸத்தில் கால் தோலாயிடை சுவர்ணத் தைச் சேர்த்து ஜாரணக்கிரியை செய்த பிறகு எடுத்து ரஸத்தை நிறுத்துப் பார்த்தால் ரஸத்தின் இடையான ஒரு தோலாதான் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் சுவர்ணஜாரணம் பூர்த்தியாகும். தங்கம் ரஸத்தில் மடிந்ததாகும். அவ்விதமின்றி ரஸம் அதிக இடை இருக்குமாகில் பூர்ணமாக மடியவில்லை யென்றும் ஜாரணம் பூர்த்தியாகவில்லையென்றும் நினைக்க வேண்டும் அப்பொழுது மறுபடியும் அதை அப்படியே ஜாரணக் கிரியை செய்து மடியும்படி செய்யவேண்டும். இவ்விதமே அப்பிரக ஸத்வஜாரணையுமாகும். இவ்விதம் ரஸத்தில் சுவர்ணம் ஜாரணம் ஆக வேண்டுமானால் ரஸமானது தன்னுடன் சேர்ந் திருக்கும் தங்கத்தை விழுங்கவேண்டும். விழுங்குவது பாத்திர மின்றி சுவர்ணயிடை கூடாமல் தன்னுள் ஜீர்ணமும் செய்து

கொள்ளவேண்டும். அதற்காகச் செய்யவேண்டியது என்னவெனில் சுவர்ணத்தை விழுங்கி ஜரித்துக்கொள்ளும்படி ரஸத்திற்கு ஓர் பெரும் பசியை யுண்டுபண்ண வேண்டும். ரஸத்திற்குப் பசியையுண்டுபண்ணும் கூட்டு சரக்குகளுக்கு பிடம் எனப்பெயர். இந்த பிடங்கள் நூல்களில் ஏராளமாகச் சொல்லப் பட்டிருக்கின்றன. அவைகளுள் ஒன்றை உதாரணமாகக் காட்டுகின்றோம். பிடம்—மயில் துத்தம், வெண்காரம், ஸர்ஜிக்ஷாரம், இந்துப்பு இவைகளைச் சமபிடையாக எடுத்துப் பொடிசெய்து ஓர் தாமிரப் பாத்திரத்தில் காடிவிட்டு அதில் இதைப்போட்டு மூன்று நாள் பாவனை செய்து உலர்த்தி எடுத்துக்கொள்ள இது பிடமாகும். இந்த பிடத்தைக் காடியில் கரைத்து ரஸத்தை அதில் போட்டு எடுக்க அந்த ரஸம் மிகுந்த பசியை யடைந்து சுவர்ணம் முதலியவைகளை விழுங்கி ஜரித்துக்கொள்ளும் நிலைமையை யடையும். இந்நிலைமையை யடைந்த பிறகு சுவர்ண ஜாரணம் செய்யவேண்டும். சுவர்ணஜாரணம் செய்யும் வழி—ஷை ரஸத்தை தப்த கல்வத்திலிட்டு பிறகு ரஸத்தின் இடையில் 64-ல் ஒரு பங்கு இடையுள்ள தங்கத்தகட்டில் மயில் மலம் பூசி அதையும் சேர்த்து எலுமிச்சம்பழ ரஸம் விட்டு ஒரு நாள் கைவிடாமல் அரைத்து அதை வழித்து ஓர் பூர்ஜமர இலையில் சுற்றி ஓர் பானையில் காடிவிட்டு இந்துப்பு சேர்த்து அதில் அந்த பூர்ஜ இலையை தோலா யந்திரமாகக் கட்டி மூன்று நாள் அடுப்பேற்றி எரித்து நிறுத்துப் பார்த்து ரஸத்தின் இடையிருக்குமாகில் சுவர்ணம் ஜீர்ணயானதாக நினைத்து சுவர்ணஜாரணம் பூர்ணமானதாகக் கொள்ளவேண்டும். ரஸத்தின் இடைக்கு அதிகமாக இருக்குமாகில் சுவர்ணம் பூர்ணமாக ஜாரணமாகவில்லையென்று கொள்ளவேண்டும். அப்பொழுது மறுபடியும் முன்போல ஓர் பானையில் காடிவிட்டு இந்துப்பு சேர்த்து அதில் அந்த ரஸத்தை முன்போல பூர்ஜ இலையில் கட்டித் தொங்கவிட்டு தோலா யந்திரமாக மூன்றுநாள் எரிக்கவேண்டும். இவ்விதம் சுவர்ணம் பூர்ணமாக ஜீர்ணமாகும்வரையில் செய்யவேண்டும் பூர்ணமாக ஜீர்ணமானதற்கு அடையாளத்தை ஏற்கனவே சொல்லியுள்ளோம். அதாவது நிறுத்துப் பார்த்தால் ரஸயிடை மாத்திரம் இருக்க வேண்டுமென்பதே. இவ்விதம் அப்பிரகஜாரணமும் சொல்லப் பட்டிருக்கின்றது. இவ்விஷயங்களை ரஸ ஹிருதயம் என்ற நூலின் மொழி பெயர்ப்பில் விரிவாகச் சொல்லுவோம் இந்த ஸம்ஸ்காரங்கள் தற்காலம் அசாத்தியமானவை. (14) ஸபீஜ பந்தம்—அப்பிரக ஸத்வம், சுவர்ணம், வெள்ளி, தாமிரம், காந்தம் இவைகளை ரஸத்தில் ஜாரணம் செய்து ஆறு மடங்கு கந்தகத்தால் புடமிட அது ஸபீஜபந்தமாகும். இது மிகுந்த பிரபாவமுள்ளது. (15) சிருங்கலாபந்தம்—வஜ்ரம், வைக்ராந்தம், காந்தம், அயம், சுவர்ணம், வெள்ளி, தாமிரம் இவைகளில் சாத்தியமான அளவு இரண்டுக்குக் குறையாமல் ரஸத்தில் ஜாரணம் செய்து

பஸ்மம் செய்ய அது உயர்ந்த ரஸ பஸ்மத்திற்குச் சமமாகி சிருங்கலா பந்தமெனப்படும். இதை உபயோகிக்க மிகுந்த குணம் கொடுக்கும். இதன் பெருமையை ஈசன்தான் வர்ணிக்க முடியும். (16) த்ருதிபந்தம்—பாஹ்யத்ருதிகளுடன் சேர்த்து ரஸத்தை பந்தம் செய்தாவது அல்லது பஸ்மம் செய்தாவது அதை கால் கடுகு அளவு உபயோகிக்க அஸாத்ய ரோகங்களையும் நிவர்த்தி செய்யும். இதற்கு த்ருதிபந்தமெனப் பெயர். குறிப்பு—த்ருதி என்பது இருவகைப்படும் கர்ப்பத்ருதி என்றும் பாஹ்யத்ருதி என்றும் அவைகளுக்குப் பெயர். இவை இரண்டும் ரஸத்தின் 19 ஸம்ஸ்காரங்களுள் சேர்ந்தவை. த்ருதி என்றால் உருகி இருத்தல் எனப்பொருளாகும். ரஸத்தில் தங்கம் முதலியவைகளை கிராஸம் கொடுக்கும் பொழுது அவை உருகியே ரஸத்தில் கலக்கவேண்டும். ரஸத்தின் கர்ப்பத்தில் அதாவது ரஸத்திற்குள் சுவர்ணம் முதலியவை உருகியபடியே (அக்னி சம்பந்தமில்லாமலிருக்கும் பொழுது கூட) இருந்தால் அது கர்ப்பத்ருதி எனப்படும். "வன்ஹி வ்யதிரேகேபி ரஸக்ராஸீ க்ருதாநாம் த்ரவத்வம் கர்ப்பத்ருதி:" என்று வசனம் கூறுகின்றது. இதன் பொருள்—ரஸத்தில் கிராஸம் கொடுக்கப்பட்ட தங்கம் அக்னி சம்பந்மில்லாமலிருக்கும்பொழுதும் த்ரவமாகவே அதாவது உருகியே இருந்தால் கர்ப்பத்ருதி எனப்படும். பாஹ்ய த்ருதியாவது—கர்ப்பத்ருதியில் போல ரஸத்தில் கிராஸம் கொடுக்கப்பட்ட தங்கம் முதலியவை ரஸத்தைச் சுற்றி உருகி இருத்தலாகும். "பாஹ்யத்ருதி ரதி விமலா ஸ்புரதி ஹி கேஷாஞ்சிதேவ ஸித்தாநாம்! தேப்யஸ்ஸம் யக்க்யாத்வா கலநா: கார்யாஸ் ததா த்ருதய:!!" இதன் பொருள்—பாஹ்யத்ருதி என்பது உயர்ந்த ஸம்ஸ்காரம். இம்முறை சித்தர்களில் கூட சில சித்தர்களுக்குத்தான் தெரியும். அந்த ஸித்தர்களிடம் நேரில் கேட்டு இம்முறையையும் செய்பாகத்தையும் தெரிந்துகொள்ள வேண்டும். (17) பாலம்—ரஸத்திற்குச் சமயிடை அப்பிரகஸத்வத்தை ஜாரணம் செய்வதால் அது பாலபந்தமாகும். தகுந்த அனுபானங்களுடன் இந்த பந்தத்தை உபயோகிக்க ரஸாயனமாவதுடன் சரீரத்தில் நோய் அணுகாமல் காத்து இருக்கும் நோய்களையும் விலக்கும். (18) குமாரம்—ரஸத்திற்கு இரு மடங்கு அப்பிரகஸத்வத்தை ஜாரணம் செய்தால் அது குமார பந்தமாகும் அரிசியிடை உபயோகிக்க 21 நாட்களில் பாப ரோகங்களெனப்படும் குஷ்டம் முதலியவைகளை விலக்கி ரஸாயனமுமாகும். (19) தருணம்—ரஸத்திற்கு நான்கு பங்கு அப்பிரகஸத்வத்தை ஜாரணம் செய்தால் அது தருணபந்தமாகும். ஏழு நாட்கள் உபயோகிக்க ஸகல நோய்களையும் விலக்கி பலம், வீர்யம் இவைகளைக் கொடுத்து ரஸாயனமுமாகும். (20) வ்ருத்தம் ரஸத்திற்கு ஆறுமடங்கு அப்பிரகஸத்வத்தை ஜாரணம் செய்து நெருப்புக்கு ஓடாமல் செய்துவிட்டால் அது விருத்தபந்தமாகும்.

ரஸவாதத்திலும் கல்பமுறையிலும் இது உபயோகமாகும் இதன் பெருமையை ஈசன்தான் வர்ணிக்க முடியும். (21) மூர்த்திபந்தம் அப்பிரகஜாரணம் செய்யாமலே தனி ரஸத்தை மாத்திரம் சில விசேஷ மூலிகைகளைக்கொண்டு அக்னியை ஜயிக்கும்படி செய்தால் அது மூர்த்திபந்தமாகும். அதாவது கந்தக ஜாரணம் வரையில் செய்துகொண்டு ரஸத்தை சில அபூர்வ மூலிகைகளின் பலத்தால் புடமிட்டு அக்னிக்கு ஜயிக்கும்படி செய்தால் அது மூர்த்திபந்தமெனப்படும் அபூர்வ மூலிகைகள் சில இருப்பதும் அவைகளால் ரஸம் கட்டுப்படுவதும் சித்தர்களே அறிவர் நெருப்புக்கு ஓடாமல் வைத்த இடை சரியாக இருந்தால் அது அக்னியை ஜயித்ததாகும். இந்த மூர்த்திபந்தம் அடைந்த ரஸத்தை எவ்வளவு தடவை புடமிட்டாலும் இடை குறையாது. எல்லா வியாதிகளிலும் உபயோகிக்கலாம். விசேஷித்த குணம் கொடுக்கும். (22) ஜலபந்தம்—சிலாதோயம் முதலிய ஜல விசேஷங்களால் ரஸம் பந்தப்பட்டால் அது ஜலபந்தமெனப்படும். இந்த பந்தம் ஜரை, ரோகங்கள் இவைகளை நீக்கும். கல்ப பலனையளிக்கும் குறிப்பு—சிலாதோயம் என்ற வட சொல்லுக்கு கல்லில் இருக்கும் நீர் என்பது பொருள். ஒரு வஸ்துவைக் கல்லாகச் செய்யும் நீர் என்பதும் பொருளாகும். அபூர்வமான சில நீர்களில் மரக்கட்டையை சில நாட்கள் போட்டு வைத்திருந்தால் அக்கட்டை கல்லாக ஆகி விடுகின்றது. இது சிலாதோய லக்ஷணமாகப் பெரியோர்களால் சொல்லப்படுகின்றது சில பைராகிகள் ஓர் மரக்கட்டையின் ஒரு பாகத்தைக் கல்லாகவும் மற்றொரு பாகத்தை மரமாகவும் வைத்திருந்ததை நாம் நேரில் பார்த்திருக்கின்றோம். ரஸரத்னாகரம் ரஸாயன கண்டத்தில் "உத்தரே தஸ்ய தேசஸ்ய விக்யாதோ லிங்கபர்வத ! தஸ்ய சோத்தர பார்சவே து நதீ ஸ்யாத் பூர்வவாஹினீ ! நத்யா: பச்சிமபாகே து லிங்கம் பிங்கள வர்ணகம் ! தத்ர சைலோதகை: பூர்ணம் குண்டம் ஸ்யாத் க்ஷண வேதகம்!" என்று வசனங்கள் காணப்படுகின்றன இவைகளின் பொருள்—ஸ்ரீசைல பர்வதத்தையும் அதில் இருக்கும் மல்லிகார்ஜுனஸ்வாமியையும் எல்லாரும் அறிவர். ஸ்ரீசைலபர்வதம் மிகவும் காடுகள் அடர்ந்த பிரதேசம் யாத்ரீகர்கள் அங்குசென்று வருகின்றனர். ஸ்ரீசைலம், காளஹஸ்தி, திருப்பதி ஆக இம் மூன்றும் ஒரே மலை தொடர்பில் இருக்கின்றன அந்த மல்லிகார்ஜுன ஸ்வாமியின் வடக்கு திக்கில் லிங்கபர்வதமென்று ஓர் ஸ்தலம் இருக்கின்றது. அதன் வடக்கு பக்கத்தில் கிழக்கு நோக்கிச் செல்லும் ஓர் நதி இருக்கின்றது அந்த நதியின் மேற்கு திக்கில் பிங்கள நிறமுள்ள ஓர் லிங்கம் இருக்கின்றது. அதன் சமீபத்தில் ஓர் குண்டம் இருக்கின்றது (குண்டம் என்றால் குட்டை அதாவது சிறிய ஜலத்தேக்கம் அல்லது குளம் என்பது பொருள்) அந்தக் குட்டை நீர் முழுவதும் சைலோதகம். அந்த நீர் ஓர் க்ஷணத்தில் வெள்ளி முதலியவைகளைத் தங்கமாக்கி

விடுகின்றது. அதே நூலில் மற்றொரு வசனம் காணப்படுகின்றது. அதாவது—மல்லிகார்ஜுன தேவஸ்ய புரதோகஜ ஸந்நிபா! சிலா திஷ்டதி யா ராத்ரௌ ஸ்ரவதேகுக்கலும் ஸதா! பாலாச சாடுநா க்ராஹ்யம் க்ஷிபேதலாபு பாத்ரகே! தத்குக்கலு ஸமம் கந்தே நிஷ்கைகம் பக்ஷயேந்நர:! மாஸாத் ம்ருத்யு ஜராம் ஹந்தி ஜீவேதா சந்திரதாரகம்!" இதன் பொருள்—ஷை ஸ்ரீ சைல பர்வதத்தில் நாகார்ஜுன ஸ்வாமிக்கு முன்பாக யானை போன்ற உருவத்துடன் ஓர் கற்பாறை நிற்கின்றது. அப்பாறை இராக்காலங்களில் எப்பொழுதும் குக்கில் போன்ற ஓர் திரவத்தைப் பெருக்குகின்றது. அத்திரவத்தைப் புரசம்பட்டை அல்லது கட்டையால் செய்யப்பட்ட ஓர் சாதனத்தால் எடுத்து சுரைக்காய் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும். கால் தோலாயிடை அதை உபயோகித்துவர ஒரு மாதத்தில் ரஸாயன குணமுண்டாம் இவ்விதமே இன்னும் பலவிதமாக சிலாதோயங்கள் ரஸார்ணவத்தில் காணப்படுகின்றன. ஸ்ரீசைலத்தில் சொன்ன விஷயங்களை தற்காலம் நேரில் பார்த்த சில நண்பர்கள் உண்மையென்றே சொல்லுகின்றனர். குருவின் உபதேசமின்றி அவைகளை ஸம்பாதிக்க இயலாமலிருப்பதும் கூறப்படுகின்றது.

23. அக்னிபந்தம்:—ரஸத்தை தனித்தோ அல்லது உலோகத்துடன் சேர்த்தோ மூசையிலிட்டு அக்னியில் ஊத அது குளிகை போன்று ஆகுமாகில் அது அக்னி பந்தமாகும் இடை குறையாமலும் இருக்கவேண்டும். இந்தப் பந்தம் ஆகாச கமந சக்தியைக் கொடுக்கும் குறிப்பு— இதை ரஸ குளிகை என்பார்கள். இதை வாயில் அடக்கிக்கொண்டால் ஆகாசத்தில் பக்ஷிகள் போன்று செல்லும் சக்தியுண்டாகுமென்று சொல்லப்படுகின்றது (24) ஸுஸம்ஸ்கிருதகிருதம்—ரஸத்தை நன்றாகச் சுத்திசெய்து அக்னிஜயம் ஆகும்படி செய்தால் ஸுஸம்ஸ்கிருதகிருத பந்தமாகும். குறிப்பு—இந்த பந்தத்தின் லக்ஷணம் வியக்தமாக நூல்களில் காணப்படவில்லை (25) மஹாபந்தம்—ரஸத்தை தங்கம் அல்லது வெள்ளியுடன் சேர்த்து குகையில் வைத்து அக்னியில் ஊத அது ஒன்றாக ரஸத்துடன் கலக்கவேண்டும் இடை குறைவு கூடாது கையில் எடுத்தால் கனமாகவும் குளிகை வடிவமாகவும் மிகுந்த பிரகாசத்துடனும் இருக்கவேண்டும். உடைத்தால் உப்புக்கட்டியை உடைப்பதுபோல பல பலவென்றும் குருணைமாதிரியும் உதிரவேண்டும் உரைத்தால் அழுக்கு ரேகை விழக்கூடாது. வாசனையற்றிருக்க வேண்டும். குகையில் வைத்து ஊதினால் க்ஷணத்தில் உருகவேண்டும். இந்த லக்ஷணங்கள் அமைந்திருந்தால் அது மஹாபந்தமாகும். இவ்விதம் 25 பந்தங்கள் சொல்லப்பட்டிருந்தபோதிலும் உண்மையில் மதாந்திரத்தில் சொல்லிய மூன்று பந்தங்களில் இவையனைத்தும் அடங்கிவிடுகின்றன.

ரஸபந்தம்—ரஸத்தை பந்தப்படுத்த பலவழிகள் அல்லது உபாயங்கள் கூறப்பட்டுள்ளன. அதாவது சில குறுக்கு வழிகள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் சுலபமான ஓர் வழியை உதாரணமாகக் காட்டுகின்றோம். மண் பூச்சி அதாவது பூமியை வெட்டினால் சில இடங்களில் உருண்டையாக சுமார் சாண் நீளமுள்ள பூச்சிகள் காணப்படும். சாதாரண ஜனங்கள் அதை மண் உண்ணிப் பாம்பு என்பர். அதில் இருவகையுண்டு ஒன்று வெளுத்த இனம். மற்றொன்று சிவந்த இனம். சிவந்த இனம் உயர்ந்தது. அது செம்மண் தரையில் கிடைக்கும். அவைகளை எடுத்துக் கழுவிப் பாலில் போட வயிற்றிலிருக்கும் மண்ணைக் கக்கிவிடும். பிறகு அதை எடுத்துக்கொள்ளவேண்டும். அதையும் நாயுருவி வேரையும் சமயிடையாக எடுத்து ஜலம் விட்டு அரைத்து அந்த விழுதை ஓர் குகையில் உள் பாகத்தில் நன்றாகப் பருமனை அழுத்தமாகப் பூசி அதில் $1\frac{1}{4}$ தோலாயிடை சுத்த ரஸத்தைவிட்டு அந்த குகையை மூடி தணலில் வைக்க ரஸம் பந்தப்படும். இனி ரஸ பஸ்மம் சொல்லப்படுகின்றது. ரஸபஸ்மம் என்பது இரு வகையாகும். பதங்கித்து எடுத்தல் ஓர் வழி இதற்கு பதங்கம் அல்லது ஊர்த்வ பஸ்மம் எனப்பெயர். அவ்விதமின்றி சட்டி அல்லது குப்பியின் அடிபாகத்தில் நின்றுவிட்டால் அதற்குத் தலபஸ்மம் எனப்பெயர்.

1. ரஸபஸ்மம்—இது ஊர்த்வ பஸ்மம், ரஸஸிந்தூரமெனப்படும் கந்தகஜாரணம் செய்த ரஸம் இருபது தோலா, சுத்தி செய்த கந்தகம் இருபது தோலா, நவாச்சாரம் தோலா அரை, சீனிக்காரம் (இதுவே படிகாரமெனப்படும்) தோலா ஒன்று, இவைகளை ஒன்று சேர்த்து அரைத்து சீலைமண் வலுவாகச்செய்த காசுக் குப்பியிலிட்டு மூன்று நாள் இடை விடாமல் வாலுகா யந்திரத்தில் எரித்து ஆறவிட்டு எடுக்க குப்பியின் கழுத்தில் சிந்தூரம் காணப்படும். குப்பியை மெதுவாக உடைத்து பத்திரப் படுத்தவும். குறிப்பு—ரஸபந்தங்கள் 25 முன்பு சொல்லப் பட்டன. இம்முறையில் பந்தம் செய்து புடமிட்டு பஸ்மம் செய்வதென்பது தற்காலம் யாருக்கும் சுலபமல்ல. அவ்விதம் செய்பவர்களை நாம் கண்டதில்லை, கேட்டதுமில்லை. வாலுகா யந்திரத்தில் குப்பி எரிப்புதான் சாத்தியம். குப்பியில்லாமல் எரிப்பதும் ஓர் முறை. அம்முறையும் சாத்தியந்தான் மேலே சொன்ன ரஸ ஸிந்தூர முறை பல தடவைகளில் செய்து பார்த்திருப்பதில் சரியாக சித்திக்கின்றது. (2) ரஸபஸ்மம்–இது மற்றொரு முறை. இதுவும் முன்போல எரிப்புதான். காசுக்குப்பிக்கு ஏழு சீலைமண் செய்து நன்றாகக் காயவைத்து அதில் ஜாரணம் செய்த ரஸம், கந்தகம் இவை சமயிடையாகவும், நவாச்சாரம் கால்பாகமாகவும் அதாவது ரஸயிடைக்குக் கால்பாகமாகவும் சேர்த்து நன்றாக அரைத்து (ஜலம் விடாமல்) அப்பொடியை குப்பிக்குள் போட்டு

குப்பியை வாய் மூடி சீலமன் செய்து பிறகு ஓர் மண் சட்டியின் அடியில் குப்பி பொருந்தும்படி ஓட்டை விட்டு அந்த ஓட்டையில் குப்பியைப் பொருத்தி சட்டி நிறைய மணல் நிரப்பி 36 மணி முத்தீயிட்டு எரித்து ஆறவிட்டு எடுத்து சிந்தூரத்தைப் பத்திரப் படுத்தவும். குறிப்பு—நவாச்சாரம் சேரும் குப்பி எரிப்புகளில் குப்பியின்வாயில் நவாச்சாரம் கெட்டியாக அடைத்துக்கொள்ளும். அதை விலக்குவதற்காக ஓர் இரும்புக் குச்சியைக் காயப்போட்டு குப்பியின் வாயில் செலுத்த நவாச்சாரம் விலகும் பிறகு குப்பியி லிருந்து சிந்தூரத்தை எடுத்துக்கொள்ளவேண்டும் காசுக்குப்பி கிடைக்காவிட்டால் அதிக கனமில்லாத வெளுப்பு சீசாவை உபயோகித்துக் கொள்ளலாம். இவ்விதம் எரித்து எடுத்த அந்த சிந்தூரத்தை மறுபடியும் முன்போல கந்தகமும் நவாச்சாரமும் சேர்த்து அரைத்து முன்போல எரித்து எடுக்கவும். இவ்விதம் பலதடவை செய்யச்செய்ய மிகவும் வீர்யமுள்ளதாகும் சில கிருதங்களையும் தைலங்களையும் சதபாகம் ஸஹஸ்ரபாகம் என்று தயாரிப்பதுபோல (இவ்விஷயம் ரஸாயனம் அல்லது கல்ப முறை என்ற பகுதியில் காணலாம்) இந்த சிந்தூரத்தையும் பல தடவைகள் எரித்து எடுக்க அதிக குணம் கொடுப்பதாகின்றது. (3) ரஸபஸ்மம்-இது மற்றொரு முறை ரஸம் 12 தோலா, கந்தகம் 36 தோலா நவாச்சாரம் 12 தோலா, இவை மூன்றையும் நன்றாக அரைத்து முன்போல சீலமண் செய்த ஓர் காசுக்குப்பி யிலிட்டு குப்பியின் வாய்க்கு மாக்கல் மூடி சீலமண் செய்து வாலுகாயந்திரத்தில் வைத்து மூன்று நாள் கிரமமாக முத்தீயிட்டு ஆறவிட்டு எடுக்க சிந்தூரமாகும். குறிப்பு—இம்முறையில் நவாச்சாரம் தோலா 12 சேர்க்கும்படி நூலில் கூறப்பட்டுள்ளது. சிலர் அந்த அளவு நவாச்சாரம் சேர்க்காமல் பாதியளவு சேர்க் கின்றனர். ஓர் சட்டியில் குப்பியை நிறுத்தி வைத்து சட்டி நிறைய மணல் கொட்டி எரிப்பது வாலுகாயந்திரமாகும். இதில் இரண்டுவிதமான கிரமங்கள் அனுஷ்டானத்தில் இருந்து வரு கின்றன. மருந்துபோட்ட காசுக்குப்பியை ஓர் சட்டியில் நிறுத்தி வைத்து காசுக்குப்பியின் வாய்க்குச் சீலமண் செய்யாமல் மாக் கல்லை மாத்திரம் மூடி காசுக்குப்பியின் கழுத்தளவு மணல்கொட்டி அடுப்பேற்றி முன் சொன்ன விதமாக முத்தீயிட்டு மூன்று நாள் எரிக்கும்பொழுது மாக்கல் மூடியை அடிக்கடி திறந்து மூட வேண்டுமென்பது சிலருடைய வாடிக்கை குப்பியின் வாய்க்கு மாக்கல் மூடி சீலமண் செய்து குப்பி முழுகும்படி மணல்கொட்டி எரிப்பது மற்றொரு வாடிக்கை. பிந்தின முறையில் சிந்தூரம் நன்கு சிவந்திருக்கும். (4 ரஸபஸ்மம்—இது மற்றொரு முறை. ஜாரணம் செய்த ரஸம் தோலா 8, கந்தகம் தோலா 4. இவை யிரண்டையும் கல்வத்திலிட்டு ஒரு நாள் அரைத்துப் பிறகு சீல மண் செய்து காய்ந்த காசுக்குப்பியில் போட்டு முன்போல வாலுகா யந்திரத்தில் கிரமாக்னியாக நான்கு நாள் எரித்து ஆற

விட்டு எடுக்கச் சிந்தூரமாகும். (5) ரஸபஸ்மம்—இது மற்ெருரு முறை நாகார்ஜுனீ என்றும் துக்திகா என்றும் பிரசித்தமான மூலிகையின் ரஸத்தால் ரஸத்தை ஒரு நாள் விடாமல் அரைத்து பிறகு மணத்தக்காளி ரஸத்தால் அரைத்து எடுத்துக்கொள்ளவும். இந்த ரஸம், கந்தகம், வகைக்குத் தோலா பத்து, நவாச்சாரம் தோலா $2\frac{1}{2}$, இவைகளை ஒன்று சேர்த்து அரைத்து முன்போல தயார் செய்த காசுக்குப்பியிலிட்டு அதன் வாயை மூடி சீலைமண் செய்து 24 மணி வாலுகாயந்திரத்தில் எரிக்கவும். சிந்தூரம் இளம் சூரியன் போன்று இருக்கும் (6) ரஸகர்ப்பூரம்-குறிப்பு ரஸகர்ப்பூரம் என்பதைத் தமிழில் கர்ப்பூர வைப்பு என்பர். தற்காலம் கடையில் கிடைக்கும் ரஸகர்ப்பூரம் (இதைப் பூரம் என்றும் சொல்லுவர்) என்பது ஓர் வைப்புச் சரக்கானபோதிலும் அதற்கும் இப்பொழுது சொல்லப்போகும் ரஸக்கர்ப்பூரத்திற்கும் மிகுந்த பேதமுண்டு. கடையில் கிடைக்கும் ரஸகர்ப்பூரம் சுமார் பத்து கிரெயின்சு அளவில் அல்லது குறைந்த அளவில் இரண்டொரு நாள் உள்ளுக்கு உபயோகிக்க வாய் பிடிக்கும். ரஸத்தைச் சாப்பிட்டு வாய் வயிறு புண்ணுவதற்கு வாய் பிடித்தல் எனப்பெயர். ஆனல் இனி சொல்லப்போகும் ரஸகர்ப்பூரம் என்பது எவ்வளவு உபயோகித்தபோதிலும் வாய் பிடிக்காது. ரஸத்தை கந்தகத்துடன் சேர்த்துச் செய்யும் முறைகளில் ரஸ சிந்தூரம் உண்டாகும். கந்தகம் சேர்க்காத முறைகளில் ரஸ கர்ப்பூரம் உண்டாகும். சிந்தூரம் என்பது சிவந்த நிறமுள்ளதாக இருக்கும். ரஸகர்ப்பூரமென்பது வெளுத்த நிறமுள்ளதாக இருக்கும். ரஸகர்ப்பூரம் ஊர்த்வ பஸ்மம் அல்லது மேல் பதங்க மாகவும் அல்லது தலபஸ்மம் அல்லது சட்டியின் அடியிலேயே நிற்கும் பஸ்மமாகவும் ஆக இருவிதமாக இருக்கும். காவிக்கல், படிக்காரம் (இதுவே சீனிக்காரம்) பலப்பம், இந்துப்பு, ஸாம்பரி லவணம், வகைக்குத் தோலா 16 எடுத்து இடித்து ஓர் கெட்டியான மண் சட்டியிலிட்டு அதைப் பரப்பி அதன்மேல் சுத்திசெய்து ஜாரணம் செய்த ரஸம் தோலா 16 வைத்து அடி சட்டியின் வாய் பொருந்தும்படி ஓர் மேல் சட்டியைக் கவிழ்த்து மூடி, சந்து வாய்க்குச் சீலைமண் வலுவாகச் செய்து நன்ருகக் காயவைத்து அடுப்பேற்றி இரண்டுநாள் விடாமல் எரிக்கவேண்டும். விறகு ஒரு ஜாதியாக இருக்கவேண்டும். அதிகப்பருமனும் அதிக சிருமனுமாக இராமல் விறகு ஒரே மாதிரி கனமுள்ளதாக இருக்கவேண்டும். 6144 தோலா இடையுள்ள விறகுகளால் எரிக்கவேண்டும். எரிப்பு முடிந்தவுடன் ஆறவிட்டு கர்ப்பூரம் போன்று இருக்கும் பதங்கத்தை எடுத்து நவாச்சாரம் நான்கு தோலா சேர்த்துப் பொடிசெய்து ஓர் சட்டியிலிட்டு வாய்மூடி சீலைமண் செய்து காயவைத்துப் பிறகு அடுப்பேற்றி 3074 தோலா இடையுள்ள முன்போன்ற விறகால் ஒருநாள் அதாவது 24 மணி எரித்து ஆறவிட்டு மேல் சட்டியிலிருக்கும் கர்ப்பூரம் போன்ற

பதங்கத்தைப் பத்திரப்படுத்தி ஒருகுன்றுமணி அதாவது இரண்டு கிரெயின்சு முதல் நான்கு கிரெயின்சு வரையில் பழைய வெல்லத்துடன் உள்ளுக்குக் கொடுக்கவும் இது பிரங்கம் என்கிற syphilis நோய்கள், மேக நோய்கள் முதலியவைகளையும் விலக்கும். மேலும் குஷ்டங்கள், புண்கள், புரைகள், குழிப்புண்கள் ஆகிய இவைகளைத் தீர்க்கும். குறிப்பு-பலப்பக்கல் என்பது மாக்கல் போன்றது. முன்காலத்தில் இதைக்கொண்டு பலகையில் எழுதுவது வாடிக்கை. பிறகுதான் அதன் ஸ்தானத்தில் தற்காலம் சாக்பீஸ் உபயோகப்படுகின்றது. பலப்பக்கல் கிடைக்காவிட்டால் மாக்கல்லை உபயோகிக்கலாம். ஸாம்பர லவணம் என்பது மண்ணிலிருந்து எடுக்கப்படும் ஓர் உப்பு. வடதேசத்தில் கிடைக்கின்றது. அதற்குப் பதிலாக வெடியுப்பு அல்லது பூரீர் இவைகளில் ஒன்றை எடுத்துக்கொள்ளலாம். அடுப்பின் அடிபாகத்திற்கும் அதன் மேலிருக்கும் சட்டியின் அடிபாகத்திற்கும் நடுவில் ஒரு சாணும் நான்கு அங்குலமும் உயரம் இருக்கும்படி அடுப்பைத் தயாரித்துக் கொள்ளவேண்டும். 130 தோலா இடையுள்ள விறகை ஒரு மணியில் எரிக்கவேண்டும். விறகை ஒரே மாதிரியாகப் பிளந்து வைத்துக்கொண்டு 130 தோலா நிறுத்துக்கொண்டு எவ்விதம் எரித்தால் ஒரு மணியில் அந்த இடையுள்ள விறகை எரிக்கலாமென்று நிதானம் பார்த்துக்கொண்டு எரிக்கவேண்டும். ஒரு விறகாக இருப்பது நலம். சவுக்கு விறகு கூடாது. இம்முறையைச் சாதாரணமாக எவ்வளவு காலம் உபயோகித்தாலும் தீங்கில்லை. வாய் பிடிக்காது. (7) மற்றொரு முறை ரஸகர்ப்பூரம்—ரஸம், காவிக்கல், செங்கல்பொடி, பலப்பக்கல், ஸ்படிகம், இந்துப்பு, புத்துமண், ஸாம்பரலவணம், செம்மண் இவைகளைச் சமயிடையாக எடுத்து ரஸம் நீங்கலாக மற்றவைகளை இடித்துப் பொடி செய்து வஸ்திரகாயம் செய்துகொண்டு பிறகு கல்வத்திலிட்டு ரஸத்தையும் சேர்த்து மூன்று மணி சாவகாசம் அரைத்து அப்படியே எடுத்து மண்பானையில் போட்டு பானையின் வாயில் மற்றொரு பானையைக் கவிழ்த்து மூடி வாய்க்குச் சீலைமண் செய்து காயவைத்து மறுபடியும் சீலைமண் செய்து காயவைத்து அந்தப் பானையை அடுப்பேற்றி இடைவிடாமல் நான்கு நாள் முத்தீயாக எரித்து ஆறவிட்டுப் பிறகு திறந்து மேல் சட்டியில் பதிந்திருக்கும் கர்ப்பூரம் போன்ற ரஸத்தைப் பத்திரப்படுத்தி முன்போல உபயோகிக்க முன்போல குணமுண்டாம். குறிப்பு—இம்முறையிலும் ரஸம் வாய் பிடிப்பதில்லை. இவைகளைப் பூரவைப்பு எனத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. (8) மற்றொரு முறை ரஸகர்ப்பூரம்: 16 அங்குலம் உயரம் அகலமுள்ள இரண்டு மண் சட்டி தயாரித்து இரண்டு சட்டிக்கும் வாய் பொருந்தும்படி செய்து ஓர் சட்டியில் நிறைய சற்று ஈரமான உப்பைக் கொட்டி மேல் சட்டி மூடி சந்துக்குச் சீலைமண் செய்து காயவைத்துப் பிறகு அடுப்பேற்றி நான்கு யாமம் அதாவது 12 மணி திருடாக்னியாக எரித்து ஆற

விட்டு எடுத்துச் சட்டியில் இருக்கும் உப்பைக் கொட்டிவிட்டு அந்தச் சட்டியை மேல் சட்டியாகவும் மற்றொரு சட்டியைக் கீழ் சட்டியாகவும் வைத்துக் கீழ் சட்டியில் சுத்திசெய்த ரஸத்தை விட்டு மேல் சட்டியைக் கவிழ்த்து மூடி சட்டிகளின் சந்துவாய்க்குச் சீலைமண் செய்து காயவைத்து அடுப்பேற்றி ஆறு மணி சாவகாசம் எரிக்கவேண்டும். அடுப்பு மூன்று வாசல் உள்ளதாக இருக்கவேண்டும். விறகு கனமுள்ளதாக இருக்கவேண்டும். முதல் 2 மணி ஒரு விறகும், பிறகு இரண்டு விறகும் மூன்றுவது இரண்டு மணி மூன்று விறகுகளும் உபயோகிக்கவேண்டும். இவ்விதம் மொத்தம் ஆறு மணி எரிக்கவேண்டும். இவ்விதம் எரிக்கும்பொழுது மேல் சட்டியின் உச்சியில் ஓர் சிறிய பாத்தி கட்டி அதில் குளிர்ந்த ஜலம் விடவேண்டும். ஜலம் உஷ்ணமாகி விட்டால் அதை விலக்கிப் புதிய ஜலம் விடவேண்டும். இவ்விதம் ஆறு மணி புதிது புதிதாகக் குளிர்ந்த ஜலம் விட்டுக்கொண்டிருக்க வேண்டும். ஆறு மணிக்குப் பிறகு அடுப்பில் தணல்களை அப்புறப்படுத்தி விட்டுப் பிறகு ஆறினவுடன் சட்டிகளை விலக்கி மேல் சட்டியிலிருக்கும் பதார்த்தத்தை எடுத்துக்கொள்ளவும். (9) மற்றொரு ரஸ பஸ்மம்—கந்தகம், புகைக்கூடு (இதை ஒட்டடை என்று சாதாரணயாகச் சொல்லுவார்கள்) சுத்தி செய்த ரஸம், இவைகளைச் சமயிடை எடுத்து மூன்று மணி சாவகாசம் கல்வத்திலிட்டு அரைத்துப் பிறகு காசுக்குப்பியிலிட்டு வாய்மூடி சீலைமண் செய்து அதை வாலுகா யந்திரத்தில் வைத்து 36 மணி சாவகாசம் முத்தீயாக கைவிடாமல் எரிக்கவும். ஆறின பிறகு குப்பியை எடுத்து குப்பியின் அடியில் இருக்கும் வெண்மையான பஸ்மத்தை எடுத்துக்கொள்ளவும். குப்பியின் மேல் பாகத்திலிருக்கும் கந்தகத்தை தள்ளிவிடவும். குறிப்பு—இது உயர்ந்த முறை. இதில் ஒட்டடை வேண்டியளவு கிடைப்பது கஷ்டமாகவிருக்கின்றது. (10) மற்றொரு முறை ரஸபஸ்மம்—உப்பு, நாமக்கட்டி, சீனிக்காரம் இவைகளைச் சமயிடை எடுத்து நொறுக்கி ஓர் சட்டியில் பாதி சட்டி வரையில் போட்டு நடுவில் குழித்து சுத்திசெய்த ரஸத்தை அதில் விட்டு அதற்குமேல் சட்டி கழுத்து வரையில் முன் நொறுக்கி வைத்த பொடிபோட்டு மேல் சட்டியைக் கவிழ்த்து மூடி சட்டிகளின் வாய்க்குச் சீலைமண் செகது காயவைத்துப் பிறகு அடுப்பேற்றி 12 மணி சாவகாசம் காடாக்னியாக எரித்து ஆற விட்டு மேல் சட்டியில் பதங்கித்திருக்கும் ரஸத்தை எடுத்து ஓர் காசுக்குப்பியிலிட்டு குப்பியின் வாய்க்கு மாக்கல் மூடி குப்பிக்கு உளுந்து மாவால் சீலைமண் செய்து நன்றாகக் காயவைத்து வாலுகா யந்திரத்தில் 12 மணி எரித்து ஆறவிட்டு சீசாவிலிருக்கும் ரஸக் கட்டியை எடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாகத் தூள் செய்து சீசாவில் பத்திரப்படுத்தி தினம் ஒருவேளை அரிசியிடை தகுந்த அனுபானத்தில் கொடுக்க மேக சம்பந்தமான நோய்கள் அனைத்தையும் தீர்க்கும். குறிப்பு—இம்முறை வாய் பிடிக்கும்

ஆதலால் ஜாக்கிரதையாக ஜன்னி முதலியவைகளில் உபயோகிக்கலாம். பார்சுவவாயுக்கு ஏற்றது. எந்த சமயத்திலும் மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு அதிகமாக உபயோகிக்கக்கூடாது. (11) மற்றொரு முறை ரஸபஸ்மம்—சுத்த ரஸம் தோலா 32, பலப்பக்கல், இந்துப்பு, சீனிக்காரம், இவை வகைக்குத் தோலா 16, ஸ்படிகம் தோலா 32 இவைகளில் ரஸம் நீங்கலாக மற்றவைகளை நன்ருகப் பொடி செய்து பிறகு கல்வத்திலிட்டு ரஸத்தையும் சேர்த்து சுத்த ஜலம் விட்டு மூன்று மணி அரைத்துப் பிறகு கடலைக்காடி சேர்த்து நன்ருகக் கலந்து காயவைத்து ஓர் சட்டியிலிட்டு மேல் சட்டி மூடி சந்துவாய்க்குச் சீலைமண்செய்து காயவைத்து அடுப்பேற்றி 36 மணி சாவகாசம் முத்தீயிட்டு எரித்து ஆறவிட்டு எடுத்து மேல் சட்டியிலுள்ள பதங்கத்தை எடுத்து பத்திரப்படுத்தவும். (12) மற்றொரு முறைரஸபஸ்மம்—சுத்தி செய்த ரஸம், கந்தகம் இவைகளைச் சமயிடையாக எடுத்துக் கொம்மட்டி மாதளைச் சார்விட்டு ஆறுமணி சாவகாசம் கல்வத்திலிட்டு வெய்யிலில் அரைத்துப் பிறகு காயவைத்துப் பொடிசெய்து காசுக்குப்பியிலிட்டு வாய்மூடி சீலைமண் செய்து பிறகு வாலுகா யந்திரத்தில் வைத்து மூன்று நாள் விடாமல் முத்தீயிட்டு எரித்து ஆறவிட்டு எடுக்கச் சிந்தூரமாகும். இதற்கு உதயபாஸ்கரம் எனப் பெயர். (13) மற்றொரு முறை ரஸபஸ்மம்—சுத்தி செய்த ரஸம் கந்தகம், சமயிடை எடுத்து கந்தகத்தை நன்ருகப் பொடிசெய்து ஓர் இரும்பு வாணயில் போட்டு அடுப்பேற்றி தீபாக்னியாக எரிக்க கந்தகம் உருகும் நன்ருக உருகினவுடன் ரசத்தை அதில் போட்டு ஓர் இரும்புக் கரண்டியால் மர்தித்துக் கொண்டு ஒன்பது மணி தீபாக்னியாக எரிக்கவேண்டும். பிறகு ஆறவிட்டு அதை ஓர் காசுக்குப்பியிலிட்டு வாய்மூடி சீலைமண் செய்து வாலுகா யந்திரத்தில் வைத்து 36 மணி முத்தீயிட்டு எரித்து ஆறவிட்டு எடுக்க குப்பியின் அடியில் சிந்தூரம் இருக்கும். பத்திரப்படுத்தவும்.

(14) மற்றொரு முறை ரஸபஸ்மம்—சுத்தி செய்த ரஸம், கந்தகம் இவைகளைச் சமயிடையாக எடுத்து கல்வத்திலிட்டு நன்ருக மர்தித்துப் பிறகு ஓர் வெண் பட்டில் கட்டி முடிந்து அதற்கு மேல் வெற்றிலைச்சார் தடவி காயவைத்துப் பிறகு ஊமத்தை ரஸம் தடவி காயவைத்து இவ்விதம் ஒவ்வொரு ரஸத்தையும் தனித்தனி ஏழு தடவை தடவி காயவைத்துப் பிறகு அதை பூமியில் சாண் அகல நீளமுள்ளதாயும் 12 அங்குலம் ஆழமுள்ளதுமான ஓர் குழி தோண்டி மணலைக்கொண்டு பாதி குழி நிரப்பி அதன்மேல் வைத்து மேல் மணல் கொட்டி குழியை மூடி அதன்மேல் சாணி எருவால் புடமிட்டு இவ்விதம் 36 மணி சாவகாசம் புடமிட்டுப் பிறகு ஆறவிட்டு எடுத்துப் பொடிசெய்து பத்திரப்படுத்தவும். இதற்கு ரஸபோடலீ எனப்பெயர், குறிப்பு

போடலீ என்ற வடசொல் தமிழில் பொட்டணம் எனப்படும். இம்முறையைத் தமிழில் பட்டுக்கருப்பு என்பர்.

(15) ரஸபஸ்மம்—பேயத்திப்பாலால் ரஸத்தை நன்ருக மர்த்தித்துப்பிறகு பேயத்திப்பாலே விட்டு வெள்ளைப் பெருங் காயத்தை அரைத்து குகை செய்து அந்தக்குகையில் முன் சொன்ன ரஸத்தை விட்டு மேலுக்கு முன் போன்ற குகைசெய்து மூடி நன்ருக ஏழு சீலேமண் செய்து காயவைத்துப் பிறகு ஓர் மண் அகலில் வைத்து மேல் அகல் மூடி சீலேமண் செய்து காய வைத்துப் புடமிட ரஸ பஸ்மமாகும். குறிப்பு—அப்பிரகஜாரணம் செய்த ரஸ்த்தை எடுத்துக்கொள்ளவேண்டும். ரஸத்தைச் சுத்தி செய்துவிட்டு இம்முறைப்படி புடமிட்டால் அது நிற்பதில்லே. பேயத்தி என்ற மரம் சாதாரணமாக எல்லாரும் அறிந்ததே. பெருங்காயம் சுத்தமானதாக இருக்கவேண்டும். இம்முறை தற்காலம் சித்திப்பது கஷ்டம். (16) ரஸபஸ்மம்—நாயுருவி விதைகளே இலேசாக இடித்துப் புடைத்து உள்ளிருக்கும் அரிசியை எடுத்து நீர் விட்டு அரைத்து இரண்டு குகைகள் செய்து காய வைத்துக் கொள்ளவும். பிறகு அப்பிரகஜாரணம் செய்த ரஸத்தை பேயத்திப்பாலால் மர்தித்து முன் சொன்ன குகையில் தும்பைப்பூ, வாய்விளங்கம், சுருவேலம்பட்டை இவைகளேச் சமயிடையாக எடுத்துப் பொடிசெய்து அந்தப் பொடியை குகைக்குள் ரஸத்திற்குக் கீழும் மேலும் போட்டு மேல் குகை யைப்பொருத்தி முன்போல சீலேமண் செய்து அதை ஓர் மண் அகலில் வைத்து மேல் அகல் மூடி சீலேமண் செய்து அதை காய வைத்து கஜபுடமிட பஸ்பமாகும். குறிப்பு இம்முறை பஸ்மமும் தற்காலம் சித்திப்பதில்லே. (17) ரஸபஸ்மம்—அப்பிரகஜாரணம் செய்த ரஸத்தை வெற்றிலேச்சாரால் அரைத்து உருட்டி காய வைத்து பழுபாகல் கிழங்கை நடுவில் குழி தோண்டி அதில் வைத்து அக்கிழங்கைக்கொண்டே வாய்க்குச் சில்லு மூடி சீலே மண் யெய்து காயவைத்துப் பிறகு முன்போல அகலில் வைத்து சீலேமண் செய்து காயவைத்துப் புடமிட பஸ்மமாகும். குறிப்பு—இப்பொழுது சொன்ன மூன்று முறைகளும் அப்பிரகஜாரணம் செய்த பிறகு புடமிட வேண்டியதாகையால் சுலபமல்ல. ஆகவே இம்முறைகள் பலிக்கமாட்டா. (18) ரஸபஸ்மம்—சுத்தி செய்த ரஸம் தோலா 16, சுத்தி செய்த கந்தகம் தோலா 16, புகைக்கூடு (ஒட்டடை) தோலா ஒன்று, எடுத்து முதலில் கல்வத்தில் ரஸத்தை விட்டுப் பிறகு கந்தகத்தைச் சேர்த்து இரணடையும் நன்ருக மர்தித்து ஒன்ருகச் சேர்ந்த பிறகு புகைக்கூட்டையும் சேர்த்து அரைத்துப்பிறகு மாதளேப் புஷ்பத்தின் ரஸத்தை விட்டு ஒரு நாள் கைவிடாமல் அரைத்துப் பிறகு வெள்ளைப் பாஷாணம் $\frac{1}{16}$ தோலா சேர்த்து முன்போல அரைத்து ஜல யந்திரத்தில் வைத்து வாய்க்குச் சீலேமண் செய்து காயவைத்து

யந்திரம் நிறைய நீர் விட்டு அடுப்பேற்றி எட்டு நாள் எரித்து ஆற விட்டு யந்திரத்தின் நீரை நீக்கி அடியிலிருக்கும் பஸ்மத்தை எடுத்துக்கொள்ளவும். குறிப்பு-ஓர் கெட்டியான மண் சட்டியில் முன்சொன்ன ரஸத்தைப் போட்டு அதற்குமேல் ஓர் மண் சட்டியை நிமிர்த்து வைத்து சந்து வாய்க்கு நன்றாகச் சீலமண் செய்து மேல் சட்டியில் நிறைய ஜலத்தை விட்டுஎரிப்பது ஜலயந்திரம். (19) ரஸபஸ்மம்—சுத்தி செய்த ரஸம் ஒருபங்கு, சுத்தி செய்த கந்தகம் இருமடங்கு, (கந்தகத்தை நன்றாகப் பொடி செய்து கொள்ளவேண்டும்) நான்கு அல்லது ஐந்து அங்குல உயரத்தில் ஓர் சிறிய அடுப்பு வைத்து அதன் மேல் ஓர் இலேசான இரும்பு வாணலியை வைத்து அடுப்பில் ஓர் பெரிய தீபத்தை ஏற்றி வைத்து வாணலியில் ஷை ரஸத்தைப் போட்டு கந்தகப்பொடியை கொஞ்சம் கொஞ்சமாக ரஸத்தின்மேல் போட்டு வேப்பம் குச்சியால் மர்தித்துக்கொண்டு இவ்விதம் 36 மணி எரிக்க ரஸம் மஞ்சள் நிறமான பஸ்மமாகும். குறிப்பு—அடுப்புக்குள் பெரிய தீபமாக வைத்து தீபத்தின் ஜ்வாலை மேலிருக்கும் இருப்பு வாணலியின் அடிபாகத்தில் நன்றாகப் பட்டுக்கொண்டிருக்குப்படி செய்யவேண்டும். கந்தகப் பொடியை தென்னையின் ஓலை போன்ற சாதனத்தால் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து 36 மணி வரையில் காணும்படி தூவிக் கொண்டு வேப்பம் குச்சியால் மர்தித்து வரவேண்டும். அதாவது கந்தகப்பொடியைக் கொஞ்சம் தூவி கிளரிவிட்டுப் பிறகு கொஞ்சம் நாழிகை விட்டு மறுபடியும் பொடி தூவவேண்டும். இவ்விதம் விட்டு விட்டுப் பொடியைத் தூவிக்கொண்டு 36 மணி எரிக்கவேண்டும். வேப்பம்குச்சி சற்று பருமனாக இருக்க வேண்டும் (20) ரஸபஸ்மம்—ஓர் மண் ஓட்டில் சுத்தி செய்த கந்தகப்பொடியைப் போட்டு அடுப்பேற்றி தீபாக்னியாக எரிக்க வேண்டும். ஓட்டிலிருக்கும் கந்தகம் உருக ஆரம்பிக்கும் நன்றாக உருகி தைலம்போல ஆன பிறகு கந்தகயிடை சுத்தி செய்த ரஸத்தைப் போடவும். இரும்புக் கரண்டியால் அப்படியே மர்திக்கவும். கந்தகம் தீப்பிடித்து எரிய ஆரம்பிக்கும். நன்றாக எரிய ஆரம்பித்தவுடன் அடுப்புத்தீயை சற்று குறைக்கவும். அதாவது முன்னிருந்த அளவுக்குப் பாதியளவு தீயிட்டுக் கொண்டே இரும்புக்கரண்டியால் மர்திக்கவும். ஸ்படிக நிறமான பஸ்மமாகும். அந்தச்சமயத்தில் அடுப்பை விட்டு இறக்கி வேறு பாத்திரத்தில் கொட்டி ஆறினவுடன் பத்திரப்படுத்தவும். குறிப்பு-இம்முறை மிகவும் சுலபம். இம்முறையை நாம் பலதடவைகளில் செய்து அனுபவித்துள்ளோம். மண் ஓடு சுத்தமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் மருந்தின் நிறம் கறுத்து விடும். நன்றாக முடிந்த பஸ்மம் தூய்ய வெள்ளையாக இருப்பதில்லை. சாதாரணமாக வெளுப்பாக இருக்கும். ஓடு அசுத்தமானாலும் இரும்புக்கரண்டி வெளுப்பாக இல்லாவிட்டாலும் மருந்து நிறம் மாத்திரம் கறுத்துவிடும் அவ்விதம் நிறம் இருந்தாலும் குணம்

குறைவதில்லை. இம்முறை யோகரத்நாகரத்தில் சொல்லப் பட்டிருக்கின்றது. கந்தகம் நன்ருக உருகினவுடன் ரஸத்தைப் போடும்பொழுது சில சமயங்களில் ரஸம் சீறி சில துளி வெளியில் தெளிக்கின்றது. ஆகவே சற்று தூரத்தில் இருந்துகொண்டு ரஸத்தைப் போடவேண்டும். ஒரு நிமிஷத்தில் சேர்விட்டால் பிறகு சீறுவது கிடையாது. கந்தகம் முதலில் உருகி சில நிமிஷங் களில் தீ பிடித்து எரிகின்றது. அவ்விதம் எரியும்பொழுது சில சமயங்களில் நெல் பொரி போன்ற ரஸம் சிறு சிறு துளிகளாக பொரி போன்று ஆகின்றது. இரும்புக்கரண்டியால் இலேசாக அடுப்பு எரிந்துகொண்டிருக்கும் பொழுதே இலேசாக மர்திக்க வேண்டும். அப்பொழுது ரஸமும் கந்தகஜ்வாலையும் ஒன்ருகக் கலந்துகொண்டு கந்தகம் எரியும்பொழுதே ரஸத்தை பஸ்மம் செய்துவிடுகின்றது பஸ்மம் ஆனவுடன் அடுப்பைவிட்டு இறக்கி வேறு பாத்திரம் அல்லது கல்வத்தில் கொட்டிக்கொள்ளவும். ரஸயிடைக்கு மேல் சற்று அதிகமாக இடை இருக்கும். இம் முறை பல தடவைகளில் செய்யும்பொழுது ஒரே மாதிரியாக இடை இருப்பதில்லை. ஏனெனில் கந்தகம் நன்ருக எரிந்து போனல் இடை குறைந்து காணும். நன்ருக எரிந்து போகாமல் இருந்தால் அதற்குத் தக்கபடி இடை அதிகம் காணும். இது வாய் பிடிப்பதில்லை. ரஸபஸ்மம் சேர்க்கவேண்டிய இடங்களி லெல்லாம் இப்பஸ்மத்தைச் சேர்க்கலாம். சில நிமிஷங்களில் மருந்து பூர்த்தியாகிவிடுகின்றது. (21) ரஸபஸ்மம்—இம்முறையும் சுலபமானது சுத்தி செய்த ரஸம் ஒரு பங்கு, சுத்தி செய்த கந்தகம் இருமடங்கு இவைகளில் கந்தகத்தைப் பொடி செய்து ஓர் இரும்பு வாணலியில் போட்டு அடுப்பேற்றி தீபாக்னியாக எரிக்க தைலம்போல உருகும் அந்தச்சமயத்தில் ரஸத்தைச் சேர்த்து பச்சை ஆலம் விழுதால் மர்திக்க கந்தகம் எரிந்து ரஸ பஸ்மமாகும் குறிப்பு—கீழ் சொன்ன இரண்டு முறைகளிலும் ரஸத்தைச் சாதாரணமாகச் சுத்தி செய்தால் போதுமானது. கந்தகஜாரணம் செய்தால் நிரம்ப குணம் கொடுக்கும். இம் முறையும் பலதடவைகளில் செய்து பார்க்கப்பட்டிருக்கின்றது.

குறிப்பு—இப்பொழுது சொல்லப்பட்ட 21 விதமான முறை களில் அசாத்யமான சில முறைகள் நீங்கலாக மற்றவைகளில் எதையும் செய்யலாம். கந்தக சம்பந்தமுள்ள முறைகள் குற்ற மற்றவை. எவ்வளவு காலம் உபயோகித்தாலும் அவை துர்குணம் செய்வதில்லை. கந்தக சம்பந்தமில்லாத முறைகள் வாய் பிடிக்கும் குணமுள்ளவை. ஆகவே அம்முறைகளை ஜாக்கிரதையாகக் கையாளவேண்டும். ரஸம், வீரம், பூரம் இந்த மூன்று சரக்கு களும் விஷத்தன்மை வாய்ந்தவை, ஒரே இனத்தைச் சேர்ந்தவை. இவைகளைச் சமயினை கந்தகத்துடன் சேர்த்துவிட்டால் துர் குணம் மாறிவிடுகின்றது. ஆகவே இவைகளை உபயோகிக்கும்

பொழுது இதை கவனத்தில் கொள்ளவேண்டும். ரஸபந்தம் என்பது நான்கு வழிகளால் செய்யப்படுகின்றது. (1) மூலிகைகள் (2) மணிகள் (3) தாதுக்கள் (4) கருவங்கம் வெள்வங்கம் என நான்கு வழிகளால் செய்யப்படுகின்றன. அவற்றுள் மூலிகைகளால் செய்யப்படும் ரஸபந்தங்கள் மிகவும் உயர்ந்தவை. மணிகள் அல்லது நவரத்னங்களால் செய்யப்படும் பந்தங்கள் நடுத்தரமானவை. ஸ்வர்ணம் முதலிய தாதுக்களால் செய்யப்படும் ரஸ பந்தங்கள் அதமமானவை. வங்கங்களால் செய்யப்படும் ரஸ பந்தங்கள் அதமத்திலும் அதமமானவை. இவற்றுள் மூலிகா பந்தம் என்ற உத்தம முறைக்குப் பல ரஸ மூலிகைகள் நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அம்மூலிகைகளில் பல நமக்கு தற்காலம் துர்லபமாகவிருக்கின்றன. இம் மூலிகைகள் 64 என நூல்கள் கூறுகின்றன. "சதுஷ்ஷஷ்டி ஸ்ஸமாக்யதா ஒஷத்யஸ்ஸ்யு: ஸாபூஜிதா" என்று ரஸமூலிகைகள் 64 எனப்படுகின்றன. அவற்றுள் சில திருணங்கள் அதாவது புல் இனத்தைச் சேர்ந்தவை சில செடி இனத்தைச் சேர்ந்தவை சில பூமியில் படர்ந்து கொடி இனத்தைச் சேர்ந்தவை. அதாவது அதிகம் படராமல் இருக்கும் கொடி வகையைச் சேர்ந்தவை சில நடுத்தரமாகப் படரும் கொடியினத்தைச் சேர்ந்தவை. சில மரத்தில் முளைத்திருக்கும் புல்லுருவி யினத்தைச் சேர்ந்தவை. சில பூமியில் மிகவும் படரும் கொடியினத்தைச் சேர்ந்தவை இவ்விதம் ஆறு வகையாக இவைகள் காணப்படுகின்றன இனி இந்த 64 மூலிகைகளின் பெயர்களையும் லக்ஷணங்களையும் சொல்லுவோம்

1. ஸோமவல்லீ—இது ஸோமலதை யெனப்படும். இதன் லக்ஷணங்கள் ஏற்கனவே காயகல்பம் என்ற பகுதியில் சொல்லியுள்ளோம். இது கொடியினத்தைச் சேர்ந்தது. இது வெளுப்பு சிகப்பு என இரு விதமாகவும் கிழங்குடன் கூடியதாகவுமிருக்கும். இக்கொடியின் ரஸம் சிகப்பாகவிருக்கும். 2. பத்மினீ-இது நிலத்தில் முளைத்துத் தாமரைபோலிருக்கும். 3. அஜகரீ—இதன் லக்ஷணம் ஏற்கனவே காயகல்ப பகுதியில் சொல்லியுள்ளோம். 4. கோநஸி—இதன் லக்ஷணமும் ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கின்றது. 5. த்ரிஜடா—இது கிளி போன்ற நிறமுள்ளது. 6. ஈசுவரீ-இது கொடியினத்தைச் சேர்ந்தது. இதன் பால் சிகப்பு நிறமுள்ளதாகவிருக்கும். (7) பூதகேசி—வேப்பம் இலை போன்ற இலைகள் உள்ளதாகவிருக்கும். 8 கிருஷ்ணவல்லீ—இதன் வேர் கருப்பாகவிருக்கும். இதற்குப் பால் உண்டு. 9. ருதந்தீ—இது கடலை (கொத்துக்கடலை யெனப்படும்)ச் செடி போன்றும் நீர் பிந்துக்களை ஒழுகிக்கொண்டும் இருக்கும், குறிப்பு—இதைத் தமிழில் அழுகண்ணி என்கின்றனர். 11. விருத்தமுண்டீ—இது நிலக்கடம்பு போன்று இருக்கும் 12 லசுனீ—இது உள்ளிப்

பூண்டு போன்று இருக்கும். 13. சம்பரா--இது சதுரக்கள்ளியின் இலைபோன்ற இலையுடன் இருக்கும் 14. ஊர்த்வாங்கா—இது பாறையில் முளைக்கும். கொஞ்சம் பாலுள்ளதாகவிருக்கும். 15. வாராஹீ—இதன் கிழங்கில் மயிர்கள் அடர்ந்திருக்கும். குறிப்பு—இதற்குப் பன்றி மோந்தான் கிழங்கு என்று தமிழ்ப் பெயர். இது வடதேசத்தில் கிடைக்கின்றது. 16. ஜாதகீ-இது அரசம் இலை போன்ற இலையுடனும் சுவல்ப பாலுள்ளதாகவு மிருக்கும். 17. அல்பபத்ரீ—இது சிறிய கொடியினத்தைச் சேர்ந்தது 18. கசோரம்-இதற்குத் தண்டும் கிழங்கும் இருக்கும் மூன்று இலையுள்ளதாகவும் பாலுள்ளதாகவும் இருக்கும். 19. அசோகம்—அசோக மரத்தின் இலை போன்ற இலைகளுடன் பாலுள்ள கொடியினத்தைச் சேர்ந்ததாகவும் இருக்கும். 20. புந்நாகபத்ரிகா—இது வாசனையுடன் கூடிய பாலுள்ளதாகவும் கொடியினத்தைச் சேர்ந்ததாகவும் இருக்கும் 21. நாகினீ-கணுக் களுடனும் பாம்பு உருவத்துடனும் கூடியதாக இருக்கும். 22. விருக்ஷரோஹா—இது கொடியினத்தைச் சேர்ந்தது. 23. சத்ரீ-கொடை போன்ற உருவத்துடனும், பாலுள்ளதாகவும், கிழங் குடனும் கூடியதாகவும் ஓர் இலையுள்ளதாகவும் இருக்கும். 24. சம்பரீ--இது மஞ்சள் நிறமான பாலுடன் கூடியது. செடி இனத்தைச் சேர்ந்தது இதன் கிழங்கு பால், பழம், புஷ்பம் ஆகிய இவை ரஸத்தை பந்தப்படுத்தும் 25. தேவீ—மஞ்சள் நிறமான பாலுடனிருக்கும். 26 வஜ்ரவல்லீ—கள்ளியின் இலை போன்ற இலையுடனும், பாலுள்ளதாகவும் இருக்கும் 27. கோபணம்—இது ஓர் கொடுவேலி யினத்தைச் சேர்ந்தது இது கறுப்பு நிறமானது. இதன் ரஸத்தைப் பசும்பாலில் விட்டால் பசும்பால் கறுப்பாக ஆகிவிடும். 28. சிகப்பு கொடுவேலி—இது கொடுவேலி யினத்தைச் சேர்ந்தது. 29. பாலாசலதிகா—இது புரசமரத்தின் இலை போன்ற இலைகளுடனும் மஞ்சள் பால் வரும் கிழங்குடனும் கூடியது.

30. கிருஷ்ணபுஷ்பி—இது சற்று சிகப்பான இலைகளுடன் கூடிய கொடியினத்தைச் சேர்ந்தது. 31. குமுதீ-இது ஸ்நூல பர்வதம் என்ற இடத்தில் உண்டாகின்றது 32. நீலோத்பலா—இது கருநெய்தல் இலைபோன்ற இலையுள்ளது. இது பர்வதத்தில் உண்டாகின்றது. 33. ரஜனீ—இது பச்சை நிறமுள்ள இலையுட னும் பாலுடனும் கூடியது கற்றாழைக்கிழங்கு போன்ற கிழங் குள்ளது. 34. ஸிம்ஹிகா-இது வெளுப்பு நிறமுள்ள இலையுடன் கூடியது. 35. பேதிநீ—கொள்ளுச்செடியின் இலை போன்ற இலை யுள்ளது பாலுடன் கூடிய கிழங்குள்ளது. 36 க்ஷிப்நா—யானை தந்தம் போன்ற உருவமுள்ள கிழங்குடன் கூடியது இதன் கொடியில் பால் இருக்கும் 37 மஹௌஷதி—செம்பரத்தம்பூ போன்ற பூவுள்ளது. கள்ளியிலை போன்ற இலையுள்ளது. நான்கு

தளமுள்ள இலையுடன் கூடியது. 38. கோசிருங்கா—பசுவின் காது போன்ற இலைகளுடனும், பாலுள்ள கிழங்குடனும் கூடி மலையில் உண்டாகும். 39. கதிரபத்ரிகா—முக்கொடியுள்ளதாக விருக்கும். 40 பீதா—இது மஞ்சள் போன்றும் சிகப்பு நிற முள்ளதாகவும் இருக்கும். 41 ஜ்யோதி—புல், கிழங்கு, கொடி, மரம் ஆகிய இவைகள் இராக்காலங்களில் ஜ்யோதி போலத் தோற்றும். அவைகளுக்கு ஜோதிப்புல் எனப்பெயர். குறிப்பு—இதைத் தமிழ் நாட்டில் ஜ்யோதிப்புல் என்று சொல்லுகின்றனர். இதைப்பற்றி பல கதைகள் சொல்லுவதுண்டு. இது மலைகளில் கிடைப்பதாகச் சொல்லப்படுகின்றது. 42. மஞ்சிஷ்டி—இது படர்ந்த சிகப்பான கொடியினம். 43 பிரம்மதண்டீ—இதன் கிழங்கில் பால் இருக்கும். குறிப்பு—சாதாரணமாகக் குறுக்கு என்ற செடியின் இனத்தைச் சேர்ந்தது பிரம்மதண்டு என்று உலகப்பிரசித்தம். இந்தக் குறுக்குச் செடியை திருச்சி ஜில்லாவில் நாய்க்கடுகு என்று அழைக்கின்றனர். ஆனால் மதுரையில் நாய்க்கடுகு என்பது வேறு செடியாக இருக்கின்றது. குறுக்குச் செடியில் இரண்டு வகையுண்டு. ஒன்று வெளுப்பு புஷ்பமுள்ளது. மற்றொன்று மஞ்சள் நிறமான புஷ்பமுள்ளது. இரண்டு வகையும் சுலபமாகக் கிடைக்கும். இவற்றின் சாரஸத்தை மணிபோல கட்டுகின்றது. இப்பொழுது சொல்லப் பட்ட பிரம்மதண்டீ இந்த இனங்களைச் சேர்ந்ததல்ல, 44. மது திருணம்—இதற்குக் கிளைச்செடி இருக்காது. தேன் வாசனை யுள்ளதாக இருக்கும். 45. பத்மதண்டீ—தாமரையிலைபோன்ற இலைகளுடனும், தாமரைக்கிழங்கு போன்ற கிழங்குகளுடனும், பாலுள்ளதாகவும் இருக்கும். 46. ஸோமதண்டீ-மஞ்சள் நிற மாகவும் மஞ்சள் நிறமான புஷ்பமுள்ளதாகவும், பாலுள்ளதாகவும் இருக்கும். 47. விஜயா—பலவித நிறமுள்ள இலைகளுடன் கூடியதாக இருக்கும். 48—ஜயா—துவரையிலை போன்ற இலைகளுடனும் வெளுப்பு நிறமுள்ளதாகவும் மிகவும் படர்ந்தும் இருக்கும். 49. கடுதிக்ரா—ஜயா போன்ற இலைகளுடனும் முப்பட்டையான கொடியுடனும் இருக்கும். 50 சந்தனகந்திகா—மயில் கழுத்து நிறமுள்ள இலைகளுடன் கூடியதாகும். 51. ஸ்ரீ-கசப்பு ருசியுள்ள வேருடனும், வெண்ணெயின் வாசனையுடனும், பாலுடனும் சிவந்த புஷ்பங்களுள்ளதாகவும் இருக்கும். இதன் வேரை மூன்று உலோஹங்களால் (தங்கம், வெள்ளி, தாமிரம் என்பன மூன்று உலோஹங்கள்) சுற்றி வாயில் அடக்கிக் கொண்டால் பிறர் கண்களுக்குத் தெரியாமல் மறைந்து நிற்கலாம். குறிப்பு—பிறர் கண்களுக்குத் தெரியாமல் மறைந்து நிற்பதற்கு அந்தர்தானம் என்று பெயர். அது யோகத்தால் கிடைக்கக் கூடிய சக்தி. இம்மூலிகையின் பிரபாவத்தால் அந்த சக்தி கிடைக்கும், 52, கீடமாரீ—முருங்கையிலை போன்ற இலைகளுடனும் பாலுள்ளதாகவும் இருக்கும். 53. வியாக்ரீ—நீல நிறமான

புஷ்பங்களுடனும் பாலுள்ளதாகவும் இருக்கும். 54. கருடீ—மஞ்சள் நிறமான புஷ்பங்களுடனும் வேப்பம் இலைபோன்ற இலைகளுடனும் பாலுள்ளதாகவும் இருக்கும். 55. தும்பீ—கோவை இலை போன்ற இலைகளுடன் பாலுள்ளதாகவும் மாத்தைப் பற்றியும் இருக்கும். 56. கடுதும்பீ—பாலுள்ளதாகவும் பூமியில் முளைத்தும் இருக்கும். 57. மயூரசிகா—இது பிரசித்தமானது. குறிப்பு-வெகு நாளாகப்பாழடைந்த மதில்கள் அல்லது பிராகாரங்களில் பாசி படர்ந்துள்ள பிரதேசங்களில் ஈச்சம் இலை போன்ற இலைகளுடன் இருக்கும். இது மிகவும் சுலபமானது. 58. ஹேமலதா—முள்ளங்கியின் இலை போன்ற இலைகளுடனும் சிவந்த பாலுடனும் மஞ்சள் நிறமான கொடியுடனும், மஞ்சள் நிறமான புஷ்பங்களுடனும் இருக்கும். 59. ஆஸுரீ - கோவை புஷ்பம் போன்ற புஷ்பத்துடனும் கொன்றையிலைபோன்ற இலைகளுடனும் மஞ்சள் நிறமான பாலுடனும் கூடியதாக இருக்கும். 60. வியாக்ரபாதலதா—பாலுடனும் சிவந்த புஷ்பங்களுடனும் கூடியதாக இருக்கும். 61. ஸப்தபர்ணீ—ஏழிலைப்பாலையிலை போன்ற இலைகளுடன் இருக்கும். 62. கோமாரீ-பாலுள்ளதாக இருக்கும். 63. க்ஷீரிணீ—இது கொத்தமல்லிச் செடி போன்று இருக்கும். மஞ்சள் நிறமான புஷ்பத்துடன் கூடியது. குறிப்பு—இதற்கு துக்திகா என்றும் நாகார்ஜுனீ என்றும் இரண்டு பெயர்களுண்டு. வடதேசத்தில் கிடைக்கின்றது. 64. திரிதண்டி-சிவந்த இலைகளுடையது. இவ்விதம் 64 ரஸ மூலிகைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. சில நூல்களில் வேறு சில ரஸ மூலிகைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன:—

(1) ஸாதலா-மூன்று இலைகளுடனும் (2) பிருங்கா—கரிப்பான் போன்ற இலைகளுடனும் மஞ்சள் நிறமான புஷ்பங்களுடனும் (3) ஸமரீ-பாலுள்ளதாகவும் கிழங்குள்ளதாகவும் (4) வஜ்ரீ-பாலுள்ளதாகவும் கிழங்குள்ளதாகவும் (5) மஹாபலா—சிவந்த இலைகளுடனும் வெளுப்பான தண்டுகளுடனும் (6) கரவீரலதா—அலரி போன்ற இலைகளுடனும், புஷ்பமின்றியும், சிவந்த பாலுள்ளதாகவும் (7) சூரண்டபத்ரா-மருதோன்றியிலை போன்ற இலையுடனும், பாலுள்ளதாகவும் (8) பீதமுஸ்தகந்தா—கோரைக்கிழங்கு போன்றும் (9) வீரா—சிவந்த பாலுடனும், பில்வயிலை போன்ற இலைகளுடனும் (10) ரோஹிணீ—சணல் போன்ற இலைகளுடனும் (11) பில்வாதகீ—பாலுள்ளதாகவும் விளக்கு போல தரகாசிக்கும் இலைகளுடனும் (12) கோரோசநா—கோரோசனம் போன்ற நிறத்துடனும் (13) சல்யா—புஷ்பம் கிழங்குகளுடன் கூடியதாகவும் (14) விசல்யா—மூன்று இலைகளுடனும் கிழங்கில்லாததாகவும் (15) கந்தக்ஷீரா—சரீரத்தில் பாய்ந்திருக்கும் துப்பாக்கி குண்டு முதலியவைகளை உடனே வெளிப்படுத்துவதாகவும் (16) கந்தகக்ஷீரா-சரீரத்தில் துப்பாக்கி

குண்டு முதலியவைகளை உடனே வெளிப்படுத்துவதாகவும் இவ் விதம் 15 மூலிகைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இது மாத்திர மின்றி இன்னும் சில நூல்களில் வேறு மூலிகைகளும் காணப்படு கின்றன. "யா: காச்சித் முனிபி: ப்ரோக்தா: ஒஷத்யஸ்து ஸஹஸ்ரச: I தாபிர் யுக்தி வசாத் க்யேயம் தத்வக்யை: ரஸ பந்தனம் II". ஆயிரக்கணக்கான ரஸமூலிகைகள் பெரியோர் களால் சொல்லப்பட்டிருக்கின்றன. தத்வம் தெரிந்தவர்கள் அவைகளைக்கொண்டு ரஸபந்தம் செய்யவேண்டுமென்பது மேற்படி வசனத்தின் பொருள். இந்த மூலிகைகளைக்கொண்டு ரஸபந்தம் செய்யும் விதம் குருமூலமாக அறியப்படவேண்டும். இந்த மூலிகைகளில் பல நமக்குக் கிடைப்பதில்லை கிடைத்தவற் றுள் ரஸத்தை பந்தம் செய்யும் விதத்தை யறிந்தவருமில்லை. இனி மஹாரஸங்கள், உபரஸங்கள், சாதாரண ரஸங்கள், உலோஹங்கள், ரத்னங்கள் என முன்பு சொன்ன வஸ்துக்களை நிரூபிப்போம்.

மஹாரஸங்கள் எட்டு எனச் சொன்னோம். அவையாவன:– அப்பிரகம், வைக்ராந்தம், மாக்ஷிகம், விமலா, சிலாஜது, துத்தம், சபலம் ரஸகம் ஆகிய இவைகளே. இவற்றின் லக்ஷணங்களையும் சுத்திக்கிரமங்களையும், பஸ்மசிந்தூர வழிகளையும் கிரமமாகச் சொல்லுவோம். அப்பிரகம்–ரஸத்திற்கு அடுத்தபடியாக உயர்ந்த வஸ்து அப்பிரகமாகும். பரமசிவனுடைய தேஜஸ் ரஸமாகும். அவ்விதமே பார்வதியின் தேஜஸ் அப்பிரகமாகும். ஆகவே ரஸத்திற்கு அடுத்தபடியாக பெருமை வாய்ந்தது அப்பிரகமாகும், சரீரத்தில் சற்றும பாதகம் செய்யாமல் உள் உறுப்புகளை பலப் படுத்துவதிலும் தளர்ந்த நரம்புகளுக்கு (Nerves) முறுக்கு ஏற்றுவதிலும் அப்பிரகம் சிறந்ததாகும். தவிர ரஸத்தை பந்தப்படுத்தி அதன் பூர்ண குணங்களையும் நாம் அனுபவிக்க முடியாமல் இருப்பதால் சாஸ்திரப்பெருமையைத் தவிர்த்து அனுபவப் பெருமை ரஸத்திற்கு வாய்க்க அவகாசம் இல்லாமல் போய்விட்டது. அவ்விதமின்றி அப்பிரகப் பெருமையைப் பூர்ணமாக அனுபவிக்க இயலுமாதலால் இதை ஓர் அமிருதச் சாரக்கெனச் சொல்லவேண்டும். ஔஷதங்களைச் சிரமப்பட்டுத் தயார் செய்யும் வாடிக்கை தற்காலம் குறைந்திருப்பதால் சிலர் சில புடங்கள் அதாவது ஓரிரண்டு புடங்களில் மருந்து முடிப்பதை விரும்புகின்றனர். இது சரியல்ல அப்பிரகம் போன்ற சில வஸ்துக்களை அதிகம் புடமிட்டே அதன் குணங்களைப் பூர்ணமாக அனுபவிக்க முடியும் இந்த மஹாரஸங்கள் எட்டில் அப்பிரகம் ஒன்றை மாத்திரம் அதிகம் புடம் போட்டே தயாரிக்கவேண்டும். வைக்ராந்தம், மாக்ஷிகம், விமலா, இம்மூன்று வகைகளுக்கும் எட்டு புடங்கள் போதுமானது சிலாஜது, துத்தம், சபலம், ரஸகம் ஆக இந்நான்கு வகைகளுக்கும் ஒரு புடம் போதுமானது.

அப்பிரகத்திற்கு ஒரு புடம் போதுமானதாக சில நூல்களில் கூறப்பட்டபோதிலும் அது சத்ருமித்ரங்களால் தளுக்கற்று பஸ்மமாகி விடுவதாகக் காணுகிறதேயன்றி பூர்ண குணம் கொடுப்பதாகவில்லை. அனுபவத்தில் அவ்விதமே காணு கின்றோம். முப்பது புடத்திற்குக் குறையாமல் புடமிட்ட அப்பிரகத்தை நோய்களுக்குரிய மருந்துகளில் சேர்க்கலாம். நூறு புடங்களுக்குக் குறையாமல் புடமிட்ட அப்பிரகத்தை ரஸாயனம் அல்லது கல்பமுறைகளில் சொல்லப்பட்ட மருந்து களில் சேர்க்கலாம். சிலர் அப்பிரக பஸ்மம் மிகக்கொடிய தென்றும் அதை உபயோகிக்கக் கூடாதென்றும் சொல்லியிருக் கின்றனர். இது மிகப் பேதமையாகும். நன்றாகப் புடமிட்டு முடிந்த அப்பிரக பஸ்மம் அமிருதம் போன்ற குணத்தையளிக்கக் கூடியதாக விருக்கின்றது. தமிழ் வைத்ய நூல்களில் அப்பிரகம் புகழப்பட்ட போதிலும் அதன் உபயோகம் நன்கு மதிக்கப்பட வில்லை. நீரிழிவு வியாதிகளில் அப்பிரகம் குணம் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றதே யன்றி அதன் பூர்ண உபயோகம் நன்கு விவரிக்கப்படவில்லை தமிழ் வைத்யர்களும் அப்பிரகத்தின் முக்கியத் தன்மையை நன்கு உணர்ந்திருப்பதாக அனுபவத்தில் காணப்படவில்லை ஸம்ஸ்கிருத நூல்களில் அப்பிரகம் விசேஷ மாகப் புகழப்பட்டிருக்கின்றது அனேகமாக எல்லா மருந்து களிலும் அப்பிரகம் சேர்ந்திருப்பதைக் காணலாம். சுருக்கமாகச் சொல்லுமிடத்து அப்பிரகம் சேராத மருந்துகளே ஸம்ஸ்கிருத வைத்ய நூல்களில் கிடையாதெனச் சொல்லலாம்.

அப்பிரகத்தின் குணங்கள்-- அப்பிரகத்தின் குணங்கள் சாஸ் திரங்களில் வெகுவாகப் புகழப்பட்ட போதிலும் நாம் அனுபவத் தில் அறிந்த நிச்சயமான குணங்களை மாத்திரம் குறிப்பிடு கின்றோம். காய்ச்சல்களில் இது ஒப்பற்ற நன்மையை யளிக் கின்றது. டைபாயிடு, நிமோனியா போன்ற விஷக்காய்ச்சல் களில் இதன் குணம் போற்றத்தக்கது. க்ஷயம் கிரஹணீ போன்ற நோய்களிலும் காய்ச்சலைத் தணிக்கும் சக்தி இதற்குண்டு காய்ச்சல்களில் பாஷாணம் போன்ற வேறு மருந்துகள் அல்லது மாத்திரைகளைக் கொடுத்தபோதிலும், அதோடு அப்பிரகத்தையும் சேர்த்துக்கொடுப்பதால் குணம் மிகுந்து காணுகின்றது. தாதுபுஷ்டிக்கு இது இணையற்ற திவ்ய ஔஷதமாகும் தாது புஷ்டிக்கு மூலகாரணங்களாகிய உறுப்புகளை உறுதிப்படுத்து வதில் இது நிகரற்றது. Nerve என்கிற நரம்புகளுக்கு மிகவும் வலிமை கொடுக்கின்றது. ஸ்திரீகளுக்கு மாதவிடாய் காலங் களில் காணும் குற்றங்களை பரிஹரிக்கின்றது. பொதுவாக ஓர் டானிக்காக இதைக் கொள்ளலாம். இவ்வளவு குணங்கள் மற்ற எந்த சரக்குகளுக்கும் இருப்பதாக அனுபவத்தில் காணப்பட வில்லை.

அப்பிரகத்தில் பல பேதங்கள் காணப்படுகின்றன. அவைகளுள் கருப்பு நிறமான அப்பிரகம் உயர்ந்தது. அதிலும் நெருப்பில் போட்டால் சீறுமலும், சிதாமலும் இருக்குமது வஜ்ராப்பிரகமெனப்படும். இந்த வஜ்ராப்பிரகத்தைப் பொறுக்கி எடுக்கவேண்டும். அது இதழ் இதழாகப் பிரிக்கக்கூடியதாக இருக்கவேண்டும். அதுதான் ஔஷதத்திற்குச் சிறந்தது. அதைப் பலவிதமாகச் சுத்தி செய்யும்படி சாஸ்திரங்கள் கூறுகின்றன. சிலர் சுத்தி செய்வதில் அசிரத்தை காட்டுகின்றனர். கஜபுடமிடும் வஸ்துக்களுக்குச் சுத்தி எதற்காகவென்றும் நினைக்கின்றனர். அது சரியல்ல. ஆயிரம் புடமிடுவதாகிலும் அதைப் பூர்ணமாகச் சுத்தி செய்தே புடமிடவேண்டும். இல்லாவிடில் அதற்குத் துர்குணமும் உண்டெனலாம். அப்பிரகசுத்தி—வஜ்ராப்பிரகத்தை உலையில் வைத்து ஊதிக்காய்ச்சி திரிபலை கஷாயத்திலும், பசும்பாலிலும், கோமூத்திரத்திலும் மூன்று தடவை தோய்க்க சுத்தியாகும். அல்லது இலந்தைவற்றல் கஷாயத்தில் மூன்று தடவை காய்ச்சி தோய்க்க சுத்தியாகும். இவ்விதம் சுத்தி செய்துகொண்டு பிறகு அதை தான்யாப்பிரகம் செய்யவேண்டும். சுத்தி செய்த அப்பிரகத்தை நன்றாகப் பொடி செய்து பிறகு அப்பிரகத்தின் இடையில் நான்கில் ஒரு பங்கு நெல் சேர்த்து இரண்டையும் ஓர் கம்பளியில் கட்டி முடிந்து மூன்று நாள் தண்ணீரில் ஊறவைத்து நன்றாக ஊறினபிறகு இரண்டு கைகளாலும் கம்பளியை கசக்கக் கம்பளியின் சிறிய சந்துக்கள் வழியாக அப்பிரகப்பொடி பாத்திரத்திலுள்ள நீரில் இறங்கும். இதில் விசேஷமென்னவெனில் அப்பிரகத்தை மாத்திரம் கம்பளியில் கட்டி ஓர் வாயகன்ற பாத்திரத்திலுள்ள தண்ணீரில் மூன்று நாள் ஊறவைத்துப் பிறகு அளவுப்படி நெல்லையும் கம்பளியில் போட்டு இறுக்கிக் கட்டாமல் தளர்த்தியாகக் கட்டி அதே நீரில் தோய்த்துத் தோய்த்து இரண்டுகைகளாலும் கம்பளியைப் பிசையவேண்டும். கம்பளி சாதாரணமான விரிப்பு கம்பளியாக இருக்கவேண்டும். அதாவது கம்பளியில் கண்கள் நிறைய இருக்கும்படி பார்த்து எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்விடத்தில் நீருக்குப் பதிலாக வடித்த கஞ்சியை எடுத்துக் கொள்ளும்படி நூல்கள் கூறுகின்றன. நீரைவிட கஞ்சியில் சில சௌகரியங்கள் இருக்கின்றன. கஞ்சியில் வழவழப்பு இருப்பதால் ஊறவைத்துக் கைகளால் தேய்த்தால் அப்பிரகப்பொடி சுலபமாக வெளி வருகின்றது. இவ்விரண்டு முறைகளிலும் வித்தியாசமில்லை யாதலால் எந்த முறையிலும் தயாரிக்கலாம். பிறகு நீரில் அல்லது கஞ்சியில் இருக்கும் அப்பிரகப்பொடியை நெல் இல்லாமல் சுத்தம் செய்து இரண்டொரு தடவை நீரிலும் கழுவி வெய்யிலில் காயவைத்துக்கொள்ளவும். இதற்கு தான்யா அப்பிரகமெனவும், அப்பிரக நவநீதமெனவும் பெயர். இனி இதைப் புடமிடவேண்டும். புடங்களில் பல பேதங்கள் இருக்

கின்றன. அப்பிரகத்தில் கஜபுடம் தான் சொல்லப்பட்டிருக்கின்றது. கஜபுடம் என்பது ஒரு கஜம் அகலம் நீளம் ஆழமுள்ள குழிவெட்டி அதில் எருக்களை மிதித்து மிதித்து அடுக்கி குழியின் மேல் ஒரு சாண் உயரம் இருக்கும்படி அடுக்கி வைப்பது கஜபுடமாகும். பாதி குழி நிறைந்த பிறகு நடுவில் புடமிடவேண்டிய சாமான்களை வைத்து மேல் எருக்களை அடுக்கவேண்டும். வடமொழி நூல்களைத் தமிழ் செய்த ஒரு புத்திமான் கஜபுடமென்பது 23 முழம் நீளம் அகலம் ஆழமுள்ள குழிதோண்டி அதில் நிறைய எருக்களையடுக்கிச் செய்வதென எழுதியுள்ளார்கள். கஜபுடம் என்ற பெயரைப் பார்த்து கஜம் என்றால் யானை யென்பது பொருள் ஆனதால் யானை முழுகும்படி ஆழம் இருக்கவேண்டுமென்று நினைத்து பிரமையால் எழுதிவிட்டார். இது அசாத்தியமும் ஆதாரமற்றதுமாகும். (1) அப்பிரகபஸ்மம்—தான்யாப்ரகம் ஒரு பங்கு சுத்தி செய்த வெங்காரம் இரு பங்கு இவ்விரண்டையும் ஒன்று சேர்த்து அரைத்து கஜபுடமிட்டு ஆறவிட்டு எடுக்க பஸ்மமாகும். இதற்கு ஏகபுடி எனப்பெயர். இந்த பஸ்மம் வெண்மையாக இருக்கும். இதில் வெங்காரம் கலந்து இருக்கும். புடத்தில் வெங்காரம் முழுவதும் நசிப்பதில்லை. ஆகவே அப்பிரகத்தின் இடைக்கு அதிகமாகவே பஸ்மத்தின் இடை இருக்கும். இந்த பஸ்மத்தின் குணம் சாதாரணமாக இருக்கும். (2) அப்பிரக பஸ்மம்—ஓர் மண்பாத்திரத்தில் சமயிடை அப்பிரகத்தையும், வெங்காரத்தையும் சேர்த்து உலையில் வைத்து ஊதி உருகும் சமயத்தில் அதைப் பாலில் சாய்த்துக் கழுவி உலர்த்திப் பொடித்துக்கொள்ள பஸ்மமாகும். இதற்கும் ஏகபுடி எனப்பெயர். (3) அப்பிரக பஸ்மம்—தான்யாப்பிரகத்தை வேண்டிய அளவு எடுத்துக் கல்வத்திலிட்டு எருக்கம் பாலால் ஒரு நாளும், எருக்கம் வேர் கஷாயத்தால் ஒருநாளும் அரைத்து பில்லை தட்டி வெய்யிலில் காயவைத்துப் பிறகு அந்த பில்லைகளை எடுத்துக் கல்வத்திலிட்டு முன்போல் அரைத்து முன்போல புடமிடவும். இவ்விதம் ஏழு தடவை செய்யவும் பிறகு ஆலம் விழுதின் கஷாயத்தால் மூன்று புடமிடவும். இவ்விதம் மொத்தம் பத்து புடமிட அப்பிரகம் பஸ்மமாகும். குறிப்பு—இம்முறை பஸ்மம் ரோகங்களில் குணம் கொடுக்கின்றது. (4) அப்பிரக பஸ்மம்—தான்யாப்பிரகத்தை கோரைக்கிழங்கின் கஷாயத்தால் பத்து கஜபுடமிட பஸ்மமாகும். (5) அப்பிரகபஸ்மம்—சிறுக்கீரை ரஸத்தால் அப்பிரகத்தை அரைத்துப் பத்து புடமிட பஸ்மமாகும். (6) அப்பிரகபஸ்மம்—தான்யாப்ரகத்தை கோரைக்கிழங்கின் கஷாயத்தால் மூன்று புடமிடவும். பிறகு சாரணத்தி கஷாயத்தாலும், சிருகாஞ்சொரி கஷாயத்தாலும், வெற்றிலைச் சாறாலும், எருக்கம் பாலாலும், ஆலம்விழுது கஷாயத்தாலும், நிலப்பனைக் கிழங்கு கஷாயத்தாலும் சிருநெருஞ்சி கஷாயத்தாலும், பூனைக்காலி விதை கஷாயத்தாலும், வாழைக்கிழங்கின்

ரஸத்தாலும், நீர்முள்ளிச் சாற்றாலும், வெள்ளொலொத்தி கஷாயத்தாலும் முறையே தனித்தனி மும்மூன்று புடங்களும் பசும்பால், தயிர், நெய், சர்க்கரை நீர், இவைகளால் முறையே தனித்தனி ஒரு புடமும் போட்டு எடுக்க மஸ்மமாகும். (7) அப்பிரக பஸ்மம்—ஆலமரத்தின் பால், கள்ளிப்பால, எருக்கம்பால், கோரைக்கிழங்கு கஷாயம், ஆலம் விழுதின் கஷாயம், இவைகளால் நூறு புடமிட பத்மராகம்போன்று சிந்தூரமாகும். (8) அப்பிரக பஸ்மம்—எருக்கம்பால், ஆலம்பால், சதுரக்கள்ளிப்பால், சோற்றுக்கற்றாழை, ஆமணக்கின் வேர் அல்லது இலை, மணத்தக்காளி கோரைக்கிழங்கு, ஆலம்விழுது, ஆட்டு ரக்தம், பில்வத்தின் வேர் அல்லது இலை, முன்னை, பெருவாகை பாதிரி, கண்டங்கத்திரி, கடம்பு, முள்ளி, சிறுநெருஞ்சி, திலபர்ணீ, நாயுருவி, வெல்லநீர், வெள்ளைக்கடுகு குருந்தொட்டி, முல்லை, கோமூத்திரம் கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், தாளிசபத்திரி, கொடுவேலிவேர் அல்லது இலை ஜலகும்பி, நிலப்பனைக்கிழங்கு, ஆடாதோடை, அமுக்கரா, அகத்தி, கரிப்பான், வாழைக்கிழங்கின்ரஸம் ஏழிலைப்பாலை, தேவதாரு, சீந்தில், ஊமத்தை, காசமர்தம், கொம்மட்டி மாதளை, வெள்ளொலொத்தி, துளசி, அருகம்புல், எலிக்காதுக்கொடி, மாதளைத்துளிர், பாக்கு, காக்கணட்டான், வெற்றிலை, தகரை, வெள்ளைச்சாரணத்தி, வல்லாரை, மருக்காரை ஆகிய இந்த மூலிகைகள் அப்பிரகத்தை பஸ்மம் செய்ய உதவுகின்றன. இம்மூலிகைகள் எல்லாவற்றிலும், அப்பிரகத்தை அரைத்துப் புடமிட பஸ்மமாகும். இம்மூலிகைகளுள் ஏதாவது ஒன்றில் அப்பிரகத்தை அரைத்து நூறு தடவை அல்லது ஆயிரம் தடவை புடமிட பஸ்மமாகும். கிடைத்த மட்டில் ஒன்றுக்கு அதிகமான மூலிகைகளில் அரைத்து நூறு அல்லது ஆயிரம் புடமிட பஸ்மமாகும். ஒவ்வொரு மூலிகையிலும் 18 தடவை அரைத்துப் புடமிட ஸஹஸ்ர புடபஸ்மமாகும் (9) அப்பிரகம் இரண்டு பங்கு, கந்தகம் ஒரு பங்கு, இவைகளை ஆலம் பாலில் அரைத்து பில்லை தட்டிக் காயவைத்து ஒரு கஜபுடமிட பஸ்மமாகும். (10) ஆமணக்கு இலைச் சாற்றில் வெல்லத்தைக்கரைத்து அந்த நீரால் அப்பிரகத்தை அரைத்து பில்லை தட்டிக் காயவைத்துப் பிறகு அகலில் அடியில் ஆலையிலை சருகுகளை வைத்து அதன் நடுவில் பில்லைகளை வைத்து மேலும் ஆலையிலைகளைப் பரப்பி மேல் அகல் மூடி சீலைமண் செய்து கஜபுடமிடவும். இவ்விதம் மூன்று புடமிட பஸ்மமாகும். (11) அப்பிரகம், வெங்காரம், இவைகளைச் சமயிடை யெடுத்து அதை துளசியிலை, வாலுளுவையரிசி, கருணைக்கிழங்கு இவைகளைச் சமயிடை எடுத்து, ஊரப்போட்டு வடிகட்டிய கோமூத்திரத்தால் அரைத்து பில்லை தட்டிக் காயவைத்து கஜபுடமிடவும். பிறகு அதை எடுத்து முன்னை கஷாயத்தால் அரைத்து மூன்று கஜபுடமிட பஸ்மமாகும். (12) பேய்ச்சுரை சாற்றிலும், கோரைக்கிழங்கு கஷாயத்தாலும்,

ஆலம்பால் அல்லது ஆலம்விழுது கஷாயத்தாலும், மஞ்சள் ரஸத்தாலும், மஞ்சிஷ்டி கஷாயத்தாலும் அப்பிரகத்தை அரைத்து தனித்தனி ஒரு புடமிட சிவந்த பஸ்மமாகும். (13) சீனிக்காரம் (இதுவே படிகாரமெனப்படும்) ஒரு பங்கு, அப்பிரகம் எட்டு பங்கு இவைகளை நீரில் அரைத்து பில்லை தட்டிக் காயவைத்து கஜபுடமிடவும். இவ்விதம் ஏழு புடமிட பஸ்மமாகும். (14) அப்பிரகத்தை எருக்கம்பால் அல்லது எருக்கம் வேர் கஷாயத்தால் அரைத்து பில்லை தட்டி காயவைத்து கஜபுடமிடவும். இவ்விதம் ஏழு புடமிட்டுப் பிறகு ஆலம்விழுது கஷாயத்தால் மூன்று புடமிடவும். பஸ்மமாகும் (15) அப்பிரகத்தை காஞ்சொரி கஷாயத்தால் அரைத்து பில்லை தட்டிக் காயவைத்து கஜபுடமிடவும். இவ்விதம் பத்து புடமிட பஸ்மமாகும். (13 கோரைக் கிழங்கு கஷாயத்தால் பத்து புடமிட பஸ்மமாகும் (17) அப்பிரகத்தை துளசி, நீர்முள்ளி, சோத்துக்கற்றாழை, வெளுத்த அருகம்புல், கண்டங்கத்திரி, சாரணத்தி ஆக இந்த ஏழு சரக்குகளால் ஒரு நாள் தனித்தனி அரைத்து தனித்தனி புடமிடவும். பிறகு பஞ்சாமிருதத்தால் ஏழு புடமிட பஸ்மமாகும். (18) அப்பிரகம் ஆறு பங்கு, கோரைக்கிழங்கு. சுக்கு இவை வகைக்கு ஒரு பங்கு, இவைகளைச் சேர்த்துக் கல்வத்திலிட்டு காடிவிட்டு ஒரு நாள் அரைத்து பில்லை தட்டிக் காயவைத்து கஜபுடமிடவும். பிறகு கொடுவேலி கஷாயத்தால் ஒரு புடமும், திரிபலை கஷாயத்தால் மூன்று புடமும், குருந்தொட்டி கஷாயத்தால் மூன்று புடமும், கோமூத்திரத்தால் மூன்று புடமும் நிலப்பனை கஷாயத்தால் மூன்று புடமும் துளசியில் மூன்று புடமும், கருனைக் கிழங்கு கஷாயத்தால் மூன்று புடமும் இட பஸ்மமாகும். (19) அப்பிரகத்தைப் பொன்னாங்கண்ணி ரஸத்தால் அரைத்து ஆறு வாரக புடமிடவும். பிறகு அப்பிரகத்தின் இடைக்கு 16-ல் ஒரு பங்கு வெங்காரம் சேர்த்து சாரணத்தி கஷாயத்தால் அரைத்து ஏழு புடம் இடவும். பிறகு 16-ல் ஒரு பங்கு வெங்காரம் சேர்த்து ஆடாதோடை கஷாயத்தால் அரைத்து ஏழு புடமிடவும். பிறகு முன்போல வெங்காரம் சேர்த்து சிறுக்கீரை ரஸத்தால் அரைத்து ஏழு புடமிடவும். பஸ்மமாகும். குறிப்பு—இம்முறையில் புடமனைத்தும் வராஹ புடமாகப் போடவேண்டும். வராஹபுடமென்பது கஜபுடத்திற்குக் குறைவானது. கஜபுடத்தின் அளவுக்கு முக்கால் பங்காகக் கொள்ளலாம். (20) அப்பிரகத்தை ஆலம் வேர்ப்பட்டை கஷாயத்தில் அரைத்து இருபது கஜபுடமிட பஸ்மமாகும். (21) வெற்றிலை ரஸத்தில் அரைத்து இருபது கஜபுடமிட பஸ்மமாகும். (22) ஆடாதோடை ரஸம் பொன்னாங்கண்ணி ரஸம் இவைகளைச் சம அளவாக எடுத்து ஒன்று சேர்த்து அதில் அப்பிரகத்தை அரைத்து இருபது புடமிட பஸ்மமாகும். (23) பொன்னாங்கண்ணி, பழுபாகல் இவைகளைத் தனித்தனி இடித்து எடுத்த ரஸத்தை சம அளவாக

எடுத்து ஒன்று சேர்த்து அதால் அப்பிரகத்தை அரைத்து இருபது புடமிட பஸ்மமாகும். (24) அப்பிரகம் மூன்று பலம் எடுத்து 12 பலம் புளி ரசத்தில் ஊரப்போட்டு 40 நாள் வைத்திருந்து பிறகு வாலை ரஸம் இரண்டு தோலா, கருவேலமரத்தின் புஷ்பம் நான்கு தோலா இவைகளைக் கல்வத்திலிட்டு கொஞ்சம் ஜலம் விட்டரைத்து அதை குளிகை போல உருட்டிக்கொண்டு அதை ஏற்கனவே ஊர வைத்திருக்கும் அப்பிரகத்துடன் சேர்த்து ஓர் குச்சியால் கிளரிக்கொடுக்கவும். மூன்று நாள் அடிக்கடி கிளரிக் கொடுக்கவேண்டும். பிறகு எல்லாவற்றையும் கல்வத்தில் போட்டு அரைத்து பதத்தில் பில்லை தட்டிக் காயவைத்து கஜ புடமிடவும். மறுபடி புளி ரஸத்தில் அரைத்து மூன்று புடமிட பஸ்மமாகும். (25) அப்பிரகத்தை காடியில் போட்டு ஒரு நாள் வெய்யிலில் வைத்து பிறகு காடியை விட்டு அரைத்து பில்லை தட்டிக் காயவைத்து கஜபுடமிடவும், பிறகு பருத்தி கஷாயம் அல்லது ரஸத்தில் போட்டு ஒரு நாள் வெய்யிலில் வைத்துப் பிறகு பருத்தி கஷாயம் அல்லது ரஸத்தில் அரைத்து பில்லை தட்டி உலர்த்தி கஜபுடமிடவும். பிறகு பசும் பாலில் போட்டு ஒரு நாள் வெய்யிலில் வைத்துப் பிறகு பசும்பாலில் அரைத்து பில்லை தட்டி உலர்த்தி கஜபுடமிடவும். இதே முறையில் ஏழு தடவைகள் அதாவது மொத்தம் 21 புடமிட பஸ்மமாகும்.

குறிப்பு—அப்பிரகம் வெளுப்பு அல்லது சிகப்பு நிறமான பஸ்மமாக ஆகக்கூடிய முறைகள் சாஸ்திரப்படி இங்கு வெளியிடப் பட்டது. தளுக்கற்று இருக்கும் பஸ்மத்தைத் தான் உபயோகிக்க வேண்டும். முறைப்படி செய்தும் சில சமயங்களில் தளுக்கு இருப்பதும் உண்டு. அதற்குக் காரணங்கள் இரண்டு எருக் குறைவு ஒரு காரணம். அரைப்பது சரியாக இராமல் குறைவது மற்றொரு காரணம். நன்றாக அரைத்து சரியான அளவு எரு அடுக்கிப் புடமிட்டால், பஸ்மம் தளுக்கற்று இருக்கும். ஆகவே புடமிடுவதை மாத்திரம் கணக்கிடாமல் பஸ்மத்தைப் பரீக்ஷித்து கிரமமாக இல்லாவிட்டால் அதே முறையில் அதிக புடமிட்டுக் கொள்ளவேண்டும். மழை காற்று இவைகளாலும் பஸ்மம் ஒழுங்காக ஆகாமல் போவதுமுண்டு. ஆகவே மழை படாமலும் காற்று வீசாமலுமிருக்கும் அடக்கமான இடத்தில் புடம் இட வேண்டும். இனி வைக்ராந்த லக்ஷணம் சொல்லுகிறோம். (2)

வைக்ராந்தம்—வைக்ராந்தமென்பது ஓர்வித கல்லின் இனத்தைச் சேர்ந்தது. சற்றேறக்குறைய வைரத்தின் குணங்களையுடையது. எல்லா உலோஹங்களையும் இது அறுத்து விடுவதால் வைக்ராந்தமெனப்படுகின்றது. வெளுப்பு மஞ்சள் முதலிய நிறங்களால் இது எட்டு வகையாகக் காணப்படுகின்றது. அவற்றுள் கறுப்பு நிறமான வைக்ராந்தம் மிகவும் உயர்ந்தது. சாஸ்திரங்களில் இவ்விதம் கூறப்பட்டபோதிலும் தற்காலம் நமக்கு வெண்மையான வைக்ராந்தம் தான் சுலபமாகக் கிடைக்கின்றது.

2. **வைக்ராந்தம்**- இது பூமியிலிருந்து எடுக்கப்படும் ஓர் கல் இனத்தைச் சேர்ந்தது. சாஸ்திரங்களில் வைரம் என்ற திரவ்யத்தின் குணங்கள் இதில் இருப்பதாகவும் ஆகவே வைரம் உபயோகிக்க வேண்டிய இடங்களில் அதற்குப்பதிலாக இதை உபயோகித்தால் அக்குணங்கள் கிடைக்குமென்றும் கூறப்பட்டுள்ளது. இது நமது தென் தேசத்திலும் கிடைக்கக்கூடுமென்று சிலர் ஊகிக்கின்றனர். தென் நாட்டு வைத்தியர்களில் பெரும்பாலோர் இத்திரவியத்தைக் கையாளுவது கிடையாது ஆகவே தென்நாட்டில் இதைப்பற்றி அறிந்துகொள்ள விருப்பமுள்ளவரே துர்லபம். இது அனுபவத்தில் பார்க்கும்பொழுது மிகுந்த குணமுள்ள வஸ்துக்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. காய்ச்சல் முதலிய சகல ரோகங்களிலும் இது நன்மையை யளிக்கின்றது. இதைத் தனித்தும் கொடுக்கலாம். கூட்டு மருந்துகளுடன் சேர்த்தும் கொடுக்கலாம். வடதேசத்தில் இது சாதாரணமாகக் கிடைக்கின்றது. வடதேசத்தில் இதைப்பற்றி அபிப்பிராய பேதம் காணப்படுகின்றது. சிலர் ஒரு விதத்தை வைக்ராந்தமென்கின்றனர் இவர்கள் அபிப்பிராயப்படி வைக்ராந்த வஸ்து அல்ப விலையில் கிடைக்கின்றது. மற்றொரு வகுப்பார் வேறொரு விதத்தை வைக்ராந்தமென்கின்றனர் இந்த வகை மிகுந்த விலையில் கிடைக்கின்றது. ஒரு தோலாயிடை 15 ரூபாய் விலையுள்ளதாக விருக்கின்றது. காசி ஹிந்து யூனிவர்சிடி முதலிய இடங்களிலுள்ள வைத்திய நிபுணர்கள் இந்த அதிக விலையுள்ள வகையையே வைக்கிராந்தமெனக் கூறுவதுடன் அல்ப விலையுள்ள மற்றொரு வகையை வைக்ராந்தமல்ல வெனவும், வைக்ராந்தம் போன்ற ஓர் சாதாரண வஸ்து வெனவும் கூறுகின்றனர். இந்த அபிப்பிராயம் சரியென நமக்கு அனுபவத்தில் தெரிகின்றது. வைக்ராந்தத்தை நூல்கள் புகழுகின்றன. அவ்வளவு குணங்கள் இந்த உயர்ந்த விலை வைக்கிராந்தத்தில் தான் காணப்படுகின்றன. இருவித வைக்ராந்தங்களைப் பார்க்கும்பொழுது பார்வையில் பேதம் நன்கு தெரிவதில்லை. அனுபவத்தைக்கொண்டுதான் நிர்ணயிக்கவேண்டி யிருக்கின்றது. தென்னாட்டில் கிடைப்பதாக கூறப்படும் வஸ்து போலியினத்தைச் சேர்ந்ததா அல்லது உண்மையினத்தைச் சேர்ந்ததா வென்பதை அனுபவித்துப் பார்த்துத் தான் உறுதி கூறலாகும். வெறும் பார்வையில் ஊர்ஜிதம் செய்ய வழியில்லை. பூமிக்கு அடியில் 5-6 அடி ஆழம் வெட்டி அதில் கிடைக்கும் வைக்ராந்தம் உத்தமமென நூல்கள் கூறுகின்றன. இருவகை வைக்ராந்தமும் பார்வைக்கு வெள்ளைக் கல்போல் இருக்கின்றது. உலோகங்களை அறுப்பதால் வைக்ராந்தமெனப் பெயர் அதற்குக் கிடைத்தன. வைக்ராந்தக்கல்லில் கோடு கிழிப்பதானால் வைரம் என்ற வஸ்துவால் மாத்திரம் சாத்தியமாகின்றது. இரும்பு முதலிய உலோகங்களால் கோடு கிழிக்க முடிவதில்லை. ஆறு கோணங்களுள்ளவைதான் சுலபமாகக்

கிடைக்கின்றது. இந்த சரக்கை பரீக்ஷை செய்து எடுத்து கல் உரலில் போட்டு நன்றாக இரும்பு கடப்பாரையால் இடித்துத் தவிடுபோல நொறுக்கிக்கொண்டு பிறகு அதைச் சுத்தி செய்ய வேண்டும். வைக்ராந்த சுத்தி—கொள்ளு கஷாயத்தில் ஷை வைக்ராந்தத்தை ஓர் துணியில் கட்டிப்போட்டு அடுப்பேற்றி நான்கு மணி வேகவைத்து எடுத்துக்கொள்ளவும். சுத்தியாகும். அல்லது எலுமிச்சம் பழ ரசம், வாழைக்கிழங்கு ரசம், இவை களில் ஏதாவது ஒன்றில் கொஞ்சம் இந்துப்பைப் போட்டு அதில் முன்போல வைக்ராந்தத்தை ஓர் துணியில் மூட்டை கட்டிப் போட்டு முன்போல எரித்து எடுத்துக்கொள்ள சுத்தியாகும். தமிழ் நூல்களில் இந்த வஸ்துவைப்பற்றி பிரஸ்தாபம் காணப்பட வில்லை. கூட்டு மருந்துகளிலும் இது சேர்ந்திருப்பதாகத் தெரிய வில்லை. வைக்ராந்த பஸ்மம்—முன் சொல்லியவிதமாக சுத்தி செய்துகொண்டு வைக்ராந்தத்தைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழ ரசம் விட்டு ஒரு யாமம் அரைத்து பில்லை தட்டி காயவைத்து கஜபுடமிடவும். இவ்விதம் எட்டு புடமிட வைக்ராந்தம் சிந்தூர மாகும். மற்றொரு விதம்—முன்சொன்னவிதமாக சுத்தி செய்த வைக்ராந்தத்திற்குச் சமயிடை கந்தகம் சேர்த்து எலுமிச்சம்பழ ரஸம் விட்டு முன்போல அரைத்து பில்லை தட்டி காயவைத்து அகலில் வைத்து சீலைமண் செய்து கஜபுடமிடவும். இவ்விதம் எட்டு புடமிட சிந்தூரமாகும். குறிப்பு—கீழே சொன்ன இரு முறைகளில் ஏதாவது ஒரு முறைப்படி தளுக்கு இல்லாமல் தயாரித்துக்கொள்ளவும் அப்பிரகம், வைக்ராந்தம், போன்ற தாதுக்களை ஒவ்வொரு தடவை புடமிடும்பொழுதும் ஒரு யாமத் திற்குக் குறையாமல் அரைக்கவேண்டும் வைக்ராந்தத்தைத் தனித்து அனுபானங்களில் கொடுக்கலாம். காய்ச்சல் டைபாயிட் முதலிய சகல ரோகங்களிலும் அதற்குரிய மருந்துகளுடன் ஒவ்வொரு வேளையும் வைக்ராந்தத்தையும் சேர்த்துக் கொடுப்ப தில் மிகுந்த குணம் காணப்படுகின்றது.

3. **மாக்ஷிகம்**—இது ஓர் கல்லின் இனத்தைச் சேர்ந்தது. இதைப்பற்றிச் சொல்லும் பொழுது வாக்படாசார் ரஸரத்ன ஸமுச்சயத்தில் "தாப்யாம் கிராத சீநேஷு யவநேஷு ச நிர்மித:" மாக்ஷிகம், தாபி, கிராதம் சீனம் யவனம், என்ற தேசங்களில் கிடைக்கின்றது என்றார். சீனம் என்பது தற்காலம் சைனா என்றழைக்கப்படும் தேசம். யவனதேசம் என்பது கிரீஸ் தேசம் இந்த தேசங்களில் மாக்ஷிகம் கிடைப்பதாகக் கூறப்படுவ தால் இந்தியாவுக்கு வெளியிலுள்ள தேசங்களிலிருந்தும் சரக்கு கள் இந்தியாவுக்கு முற்காலத்திலிருந்தே வந்துகொண்டிருந்த தென்பது விளங்குகின்றது. 'கான்யகுப்ஜாக்ய விஷயே ஜாய தேஸ்வர்ண மாக்ஷிகம் I தபதீ தீரதோபிஸ்யாத் இத்யேவம்தக் வியோகிகம் II என்று கான்யகுப்ஜம் என்ற தேசத்திலும் தபதீ நதிக்கரையிலும் ஆக இந்த இரண்டு இடங்களிலும் உண்டாவதாக

நூல்கள் கூறுகின்றன இவற்றுள் கான்யகுப்ஜம் என்ற தேசத்தில் அதாவது தற்காலம் காஞ்ஜ் என்றழைக்கப்படும் வட தேசத்தில் கிடைப்பது உயர்ந்த தினுசு என்றும் தபதீ நதிக்கரையில் கிடைப்பது மட்டமென்றும் நூல்கள் கூறுகின்றன. தென்னாட்டிலும் சில இடங்களில் மாக்ஷிகம் கிடைப்பதாகச் சிலர் சொல்லுகின்றனர் அது சரியான சரக்குதான் என்று பரீக்ஷித்துப் பார்த்து நிச்சயிக்க வேண்டியிருக்கின்றது மாக்ஷிகம் ஓர் உயர்ந்த சரக்கு. இதன் மேன்மையான குணங்களை நாம் பல தடவைகளில் பார்த்திருக்கிறோம். இதைச் சிந்தூரம் செய்து தனித்தும் கூட்டு மருந்துகளுடன் சேர்த்தும் பார்த்திருக்கிறோம் இது ஓர் அமிருத சரக்கு என்பதில் ஆக்ஷேபமில்லை. அயம், காந்தம், இவைகளைவிடப் பண்மடங்கு குணம் இதற்கு இருப்பதால் அவைகளுக்குப் பதிலாகவும் உபயோகிக்கலாம். இதில் சுவர்ணசத்தும் இருப்பதால் தங்கத்தின் குணங்களையும் இது கொடுக்கிறது. இது தங்க நிறமாயும் சற்றுகருத்தும் பளுவாக இருக்கும். இதில் சுவர்ணமாக்ஷிகம், வெள்ளிமாக்ஷிகம்; வெங்கலமாக்ஷிகம், என மூன்று வகை இருப்பதாக சில நூல்கள் கூறுகின்றன. வாக்படாசார் சுவர்ணமாக்ஷிகம் என்ற ஒரு பேதமும் வெள்ளிமாக்ஷிகம் என்ற ஒரு பேதமும் தான் உண்டென்றும் மற்ற பேதம் மாக்ஷிகத்தில் கிடையாதென்றும் இனி சொல்லப்போகும் விமலா என்ற சரக்கில் மூன்று பேதங்களுண்டென்றும் கூறுகிறார். மாக்ஷிகம் என்ற வடமொழிக்கு நிமிளை என்று தமிழில் சிலர் பொருள் கூறுகின்றனர். இது தவறு. விமலா என்ற வடமொழியே தமிழில் நிமிளை என அழைக்கப்படுகின்றது. ஆகவே நிமிளையைப்பற்றியும் மாக்ஷிகத்தைப்பற்றியும் தமிழ் நூல்கள் அதிகம் கூறவில்லை. வடமொழியில் மாக்ஷிகம் சேராத மருந்துகள் கொஞ்சமே அனேகமாக எல்லா மருந்துகளிலும் மாக்ஷிகம் சேருகின்றது. இது ஓர் உயர்ந்த டானிக்காகவும் சகல நோய்களையும் விலக்கக் கூடியதாயுமிருப்பதால் இதற்கு அதிக பெருமையை நூல்கள் கூறுகின்றன அயம் முதலான உலோஹங்களை சடுதியில் மாக்ஷிகம் பஸ்மம் செய்து விடுகின்றது. உதாஹரணமாக அரப்பொடியை ஓர் இரும்பு சட்டியிலிட்டு அப்பொடிக்கு சமயிடை அல்லது பாதியிடை மாக்ஷிகத்தைப் பொடி செய்து இரும்பு சட்டியை அடுப்பேற்றி மாக்ஷிகப்பொடியை கொஞ்சம் கொஞ்சமாகக்கொடுத்து அரப்பொடியை ஓர் இரும்புக் கரண்டியால் கிளரிக்கொடுக்க அயம் சிந்தூரமாகின்றது இந்தச் சிந்தூரத்தை அப்படியே உபயோகிக்கலாம். அல்லது சில புடங்கள் போட்டும் உபயோகிக்கலாம். வெள்ளியைத் தகடு தட்டி மாக்ஷிகப்பொடியை தகட்டின் மேல் தடவி புடமிட ஒரே புடத்தில் பஸ்மமாகின்றது. இவ்விதமே எல்லா உலோஹங்களையும் மாக்ஷிகம் கொன்று விடுகின்றது வெள்ளி முதலியவைகள் கறுப்பான பஸ்மம் ஆகின்றன. மற்றவை நல்ல சிகப்பான சிந்தூரமாகின்றன.

மாக்ஷிக சுத்தி:— (1) ஆமணக்கு எண்ணெயையும் கொம்மட்டி மாதளை ரஸத்தையும் சேர்த்து ஓர் பாண்டத்திலிட்டு அதில் சுவர்ணமாக்ஷீகப் பொடியை தோலா யந்திரமாகக் கட்டி இரண்டு நாழிகை எரிக்கச் சுத்தியாகும். (2) வாழைக்கிழங்கு ரஸத்தில் முன்போல தோலா யந்திரமாகக்கட்டி எரிக்க சுத்தியாகும். (3) திரிபலை கஷாயத்தில் மாக்ஷிகத்தைக் காய்ச்சித் தோய்க்க சுத்தியாகும். (4) மாக்ஷிகப்பொடி மூன்று பங்கு, இந்துப்பு ஒரு பங்கு எடுத்து ஓர் இரும்பு பாத்திரத்தில் எலுமிச்சம்பழ ரஸம் விட்டு அதில் இந்துப்பைப் போட்டு மாக்ஷிகப்பொடியை தோலா யந்திரமாகக்கட்டி எரிக்க சுத்தியாகும். மாக்ஷிக பஸ்மம்— (1) ஸுவர்ண மாக்ஷிகத்திற்குச் சமயிடை கந்தகம் சேர்த்து கொம்மட்டி மாதளை ரஸத்தால் அரைத்து பில்லை தட்டி காய வைத்து ஓட்டில் வைத்து ஓடு மூடி சீலைமண் செய்து காயவைத்து வாராஹ புடமிட்டு ஆறவிட்டு எடுத்து முன்போல செய்து முன் புடமிடவும். இவ்விதம் மொத்தம் ஐந்து புடமிட சிந்தூரமாகும். குறிப்பு — சுவர்ணமாக்ஷிகத்தைச் சுத்தி செய்யும்பொழுதே உரலில் இடித்துப் பொடிசெய்து வஸ்திரகாயம் செய்து விடுவது நலம். அவ்விதம் செய்த பொடியைப் பிறகு சுத்தி செய்து புடமிடும்பொழுது ஒரு மணி சாவகாசம் திரவத்தால் அரைக்க வேண்டும். அனேகமாக எல்லா வஸ்துக்களையும் ஒரு மணி சாவகாசம் அரைத்து பில்லை தட்டுவதுதான் உத்தமம். சுவர்ண மாக்ஷிக சிந்தூரம் அருணன்போன்று சிவந்த நிறமாக இருக்க வேண்டும் சில சமயங்களில் நல்ல சிகப்பு நிறம் இல்லாமல் போகின்றது. காரணமென்னவெனில் மாக்ஷிகக்கல் நல்ல விளைந்த தாக விருந்தால் சிந்தூரம் நல்ல சிகப்பாகும். அவ்விதமின்றி கல்லாகவிருந்தால் நிறமும் சற்று குறைகின்றது. 4, 5 புடங்களுக்குப் பிறகே சிந்தூர நிறம் ஆரம்பிக்கின்றது. மாக்ஷிகத்தில் ஓர் கலும்பு இருக்கின்றது. அது நிவுருத்தியாக ஒவ்வொரு புடத்திலும் அதை ஜலத்தில் கரைத்துக் கரைத்து நீர் சுத்தமாக ஆகும் வரையில் கலும்பு ஜலத்தை வடித்துப் புது ஜலம் விட்டு மறுபடியும் புடம் போடவேண்டும் புடங்களில் ஏராளமான இடையைப் போடுவதால் சிந்தூரம் நன்றாக சித்திப்பதில்லை. ஆகவே சாமான்களை ஓர் அளவு இடைக்கு மேல் போடக்கூடாது. பத்து தோலா இடையை எடுத்து அதைப் புடம் போடவேண்டும். அப்பொழுது அது நல்ல நிறமாகவிருக்கும் அதிக இடை போட்டால் நிறம் நன்றாகவிருப்பதில்லை. புடம் போட்டு முடிந்த பிறகு ஸுவர்ணமாக்ஷிகம் போட்ட இடை குறைகின்றது. அதாவது நான்கில் ஓர் பங்கு இடை குறைந்துவிடுகின்றது. சுவர்ணமாக்ஷிக சிந்தூரம்—(2) முன்போல சுத்தி செய்த சுவர்ண மாக்ஷிகத்தைக் கொள்ளு கஷாயத்தால் அரைத்து பில்லை தட்டி காயவைத்து கஜபுடமிடவும். இவ்விதம் எட்டு புடமிட சிந்தூரமாகும். குறிப்பு-இம்முறையே நாம் உபயோகித்து வருகிறோம்.

இது நல்ல நிறமுள்ள சிந்தூரமாகின்றது. வெள்ளிமாக்ஷிகத்தையும் இவ்விதமே சுத்திசெய்தும் புடமிட்டும் சிந்தூரம் செய்து கொள்ளலாம் வெள்ளி பஸ்மம் சேருமிடங்களில் அதற்குப் பதிலாக வெள்ளிமாக்ஷீகத்தைச் சேர்த்துக்கொள்ளலாம்.

4. விமலம்—இது ஓர் கல் இனத்தைச் சேர்ந்தது இதைத் தமிழில் நிமிளை என்பர். இது சுவர்ண நிமிளை, வெள்ளிநிமிளை, வெங்கலநிமிளையென மூவகைப்படும். இவைகளில் சுவர்ணநிமிளை உத்தமம். வெள்ளிநிமிளை மத்தியமம். வெங்கலநிமிளை அதமம். மூவகையும் மருந்துகளில் சேருகின்றது விமலசுத்தி—இதை நன்றாக இடித்துப் பொடி செய்துகொண்டு பிறகு சுத்தி செய்ய வேண்டும். ஆடாதோடை கஷாயத்திலாவது எலுமிச்சம்பழ ரஸத்திலாவது தோலா யந்திரம் கட்டி நான்கு நாழிகை எரிக்க சுத்தியாகும். குறிப்பு—எலுமிச்சம்பழ ரஸத்தில் சுத்தி செய்வதாகில் இந்துப்பையும் சேர்த்துக்கொள்ளவேண்டும், விமலத்தின் இடையில் நான்கில் ஒரு பங்கு இந்துப்பை எடுத்துக்கொள்ள வேண்டும். விமலசிந்தூரம் (1) நிமிளைக்குச் சமயிடை கந்தகம் சேர்த்து எலுமிச்சம்பழ ரசத்தில் அரைத்து பில்லைதட்டி காய வைத்து கஜபுடமிடவும் இவ்விதம் பத்து புடமிட சிந்தூரமாகும். விமலசிந்தூரம் (2) நிமிளைக்கு $\frac{1}{8}$ பங்கு தாளகத்தையும் அவ்விதமே கந்தகத்தையும் சேர்த்து எலுமிச்சம்பழ ரசத்தில் மூன்று பாவனை செய்து பிறகு அரைத்து பில்லைதட்டிக் காயவைத்து கஜபுடம் பத்து போட சிந்தூரமாகும்.

5. சிலாஜது–இது இருவகைப்படும் கோமூத்திர சிலாஜது என்றும் கர்ப்பூர சிலாஜது என்றும் இவ்விருவகையும் அழைக்கப்படுகின்றது. உண்மையில் இவ்விரண்டும் வெவ்வேறு வஸ்துக்கள். குணத்திலும் மிகுந்த வேறுபாடு உண்டு. கர்ப்பூர சிலாஜது என்பது ஓர் கல்வகை. இது சாதாரணமாக எங்கும் கிடைக்கும் கோமூத்திர சிலாஜது என்பது வடதேசத்தில் கிடைக்கும் ஓர் பிசின். இதைக் கல்மதமெனவும் அழைக்கின்றனர் பொதுவில் சிலாஜது என்ற பெயர் கோமூத்திர சிலாஜதுவையே குறிக்கும். இது ஓர் ரஸாயன வஸ்து. இவ்வஸ்துவால் சௌக்கியமாகாத நோய்கள் கிடையாதென நூல்கள் கூறுகின்றன தென் இந்தியாவில் இது துர்பலமாகவிருப்பதால் இதன் உபயோகமறிந்த வைத்யர்களும் மிகக்குறைவு. உயரமான மலைகளின் பாறைகள் வெய்யில் காலங்களில் கொதித்து மெழுகு போன்ற ஓர் வஸ்துவைக் கக்குகின்றன. அந்த மெழுகுதான் சிலாஜது அதை வழித்து எடுக்கும்பொழுது கல்லும் மண்ணும் கலந்துவிடுவதால் அவைகளை விட்டு அதைத் தனிப்படுத்திக்கொள்ள வேண்டும். அந்த வஸ்து கோமூத்திர வாசனையுடனும், கருப்பு நிறத்துடனும் குக்கில்போல பசையுள்ளதாகவும், கல்லும் மண்ணும் கலந்தும்

இருக்கும். வாய்க்குக் கசப்பு ருசியுள்ளதாகவிருக்கும் கல் மண் முதலியவைகளை விலக்கி சிலாஜதுவைத் தனிப்படுத்த வழி— சுத்த ஜலத்தை கொதிக்க வைத்து அதில் சிலாஜதுவைப் போட்டு சில மணி வைத்திருந்து பிறகு கையால் நன்ருகக் கரைக்க வேண்டும். பிறகு தெளிந்த ஜலத்தை ஓர் இரும்பு பாத்திரத்தில் எடுத்துக்கொண்டு மறுபடியும் முன் பாத்திரத்தில் கொஞ்ச ஜலத்தை விட்டு கையால் நன்ருகப் பிசைந்து பிறகு தெளிவு ஜலத்தை முன் தெளிந்த ஜலத்துடன் சேர்த்து இவ்விதம் கருப்பு நிறமுள்ள ஜலம் வரும் வரையில் செய்யவும் அதாவது கருப்பு நிற ஜலம்தான் சிலாஜது இருப்பதாகக் கொள்ளவேண்டும். ஜலத்தில் கருப்பு நிறம் இல்லாவிட்டால் நிறுத்திவிடவும். அந்த தெளிவு ஜலம் இருக்கும் பாத்திரத்தைக் கடும் வெய்யிலில் அசையாமல் வைத்தால் ஜலத்தின்மேல் கருப்பு ஆடை புடைக்கும். அதுதான் சுயமான சிலாஜது ஆகும். அதை வழித்து ஓர் சீசா அல்லது பீங்காணில் பத்திரப்படுத்தவும். மறுபடியும் அந்த ஜலத்தை வெய்யிலில் வைக்க முன்போல ஆடை உண்டாகும். இவ்விதம் உண்டாகும் ஆடைகளை வழித்து வைத்துக்கொள்வது தான் சிலாஜது. ஆடை புடைக்காவிட்டால் அந்த ஜலத்தைக் கொட்டிவிடவும் அதாவது சத்தெல்லாம் ஆடையாக வந்து விடுவதால் ஆடையில்லாவிட்டால் சத்தில்லாத ஜலம் என்று கொள்ளவேண்டும். கல் மண் கலந்த சிலாஜது வடதேசங்களில் கிடைக்கின்றது. அதை வரவழைத்து இவ்விதம் தயாரித்துக் கொள்ளலாம். ஒரு வீசை அல்லது இரண்டு வீசை ஒரே தடவையில் எடுத்துக்கொண்டால் தெளிவை வைக்கும் இரும்பு பாத்திரம் வாயகலமாக இருக்கவேண்டும் வாயகலமாக விருந்தால் ஆடை பரந்து புடைக்கின்றது. நல்ல வெய்யில் அடிக்கும் இடத்தில் அப்பாத்திரத்தை வைத்து அசையாமல் இருக்கும்படி செய்ய வேண்டும். இராக்காலங்களில் அப்படியே அந்த இடத்திலேயே மூடிவைத்து விடவேண்டும். இரண்டு அல்லது மூன்று வாரங்களில் வெய்யிலின் கடுமைக்குத் தகுந்தபடி சேகரிக்கப்படுகின்றது இவ்விதம் செய்வதுதான் உத்தம முறை இதற்கு சூர்யதாபி சிலாஜது என்பெயர் அதாவது சூர்யவெப்பத்திலேயே தயார் செய்யப்பட்டது என்பது பொருள். அவசரங்களுக்கு இவ்விதம் தயார் செய்வது சாத்தியமல்ல முன்போல தெளிவை எடுத்து அதை அடுப்பில் வைத்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் எடுப்பது ஓர் முறை. இதை அக்நிதாபி என்பர். அதாவது நெருப்பில் காய்ச்சி தயாரிக்கப்பட்டது என்பது பொருள். இது மத்தியம பக்ஷமாகும். இதில் பூர்ண குணமிராது. இது சில சமயங்களில் பொடியாகவும் அதாவது மெழுகு போன்று இராமல் பொடியாகவும் ஆகிவிடும். சற்று தீ அதிகமாகிவிட்டால் சூர்ணம் அல்லது திரவமின்றி கல்போல் ஆகிவிடுகின்றது சூர்யதாபி வகையும் சில வருஷங்கள் வைத்திருந்தால் இறுகி கட்டியாகிவிடும். அவ்வித

மாகிவிட்டாலும் அதில் குணக்குறைவு இராது. இதை சுத்தி செய்து உபயோகிப்பது நலம். கஷாயங்களால் பாவனை செய்து எடுப்பதுதான் சுத்தி. திரிபலா கஷாயத்தால் பாவனைசெய்யலாம். ஒரு தோலாயிடை சிலாஜதுவை சுத்திசெய்ய வேண்டுமானால் திரிபலா மொத்தம் ஒரு தோலா எடுத்து இடித்து எட்டு மடங்கு ஜலம் விட்டு அடுப்பேற்றி எட்டில் ஒன்றாக வற்றவைத்து வடிகட்டி அதை அந்த சிலாஜதுவில் விட்டு கலக்கி வெய்யிலில் வைத்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் அந்தந்த நோய்களுக்குத் தகுந்த விதமாக நூல்களில் சொல்லப்பட்டுள்ள கஷாயங்களில் ஒரு தடவை அல்லது பல தடவை பாவனை செய்து எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த சிலாஜது இரண்டு விதமென நூல்கள் கூறுகின்றன. நிஸ்ஸத்வம், ஸஸத்வம் என அவைகளின் பெயர். இயற்கையிலேயே சிலாஜது சத்துடன் கூடியதாகவிருக்கின்றது. சில இயற்கையிலேயே ஸத்தற்று இருக்கின்றன. இவற்றுள் ஸத்துடன் கூடிய சிலாஜதுதான் சிலாக்யம். சிலாஜது உண்டாகும் கற்பாறைகளில் தங்கம், வெள்ளி, தாமிரம், அயம் இவைகளின் சம்பந்தமிருப்பதால் சிலாஜதுவும் அவைகளின் சம்பந்தம்பெற்று தங்க சிலாஜது வெள்ளி சிலாஜது, தாமிர சிலாஜது, அயசிலாஜது என நான்கு வகையாக ஆகின்றதென நூல்கள் கூறியபோதிலும் தற்காலம் நமக்குக் கிடைப்பனவற்றில் இப்பேதத்தைக் காண்பது அரிதாகவிருக்கின்றது. சத்துள்ளதா அல்லவா என்பதையும் பார்வையில் அறிய முடிவதில்லை. குணத்தைக்கொண்டு தான் ஊகிக்க முடிகின்றது. இது தமிழ் நூல்களில் விரிவாகச் சொல்லப்படவில்லை. இது பல ரோகங்களில் உபயோகப்பட்டாலும் முக்கியமாக பாண்டு, சோகை, காமாலை நோய்களில் நிகரற்ற குணம் காட்டுகின்றது. அவ்விதமே Kidney ரோகங்களிலும் Bladder ரோகங்களிலும் (மூத்ராசய ரோகங்களிலும்) விசேஷ குணம் கொடுக்கின்றது. இது பல கூட்டு மருந்துகளிலும் சேருகின்றது. இதன் பரீக்ஷை—சுத்தமான கோமூத்திர சிலாஜதுவுக்குப் பரீக்ஷை நூல்களில் காணப்படுகின்றது. "வஹ்நௌ க்ஷிப்தம் பவேத்யத்து லிங்காகாரம் அதூமகம்" சுத்தமான கோமூத்திர சிலாஜதுவை ஓர் தணலில் வைத்தால் லிங்கம்போன்ற வடிவுடன் ஆகும். அதாவது அரைக்கால் தோலா சிலாஜதுவை புகையில்லாத ஓர் அகலமான தணலில் வைத்தால் அது பொரிந்து லிங்கம் (அதாவது பூஜை செய்யும் லிங்கக்கல்) போன்ற உருவத்தையடையும். அதோடு 'அதூமகம்' அல்பப் புகையுடன் இருக்கும். இவ்விடத்தில் அதூமகம் என்ற பதத்திற்குப் புகையில்லாதது என்று பொருள் கொள்ளுவது அநுபவத்திற்குப் பொருந்தாது. அ என்பதற்கு அல்பம் என்று அர்த்தம் இருப்பதால் அதைத்தான் கொள்ளவேண்டும். திரவ வஸ்துவை நெருப்பில் போட்டால் புகையாமலிருக்குமென்று யாரும் நினைக்க முடியாது. ஆகவே அல்பப்புகையுடன் லிங்கம்போன்று உருவம்

மடைந்தால் அது சரியான சரக்காகும். சிலாஜது பஸ்மம்-இதை பஸ்மம் செய்தால் குணம் குறையும். ஆகவே திரவமாக அதாவது மெழுகாகவே கூட்டுச்சரக்குகளில் சேர்ப்பது நியாயம். ஆனால் சில சௌகரியங்களை உத்தேசித்து பஸ்மம் செய்து கொள்ளலாம்.

கோமூத்திர சிலாஜது பஸ்மம்—ஷை சுத்தி செய்த சிலாஜதுவை ஓர் அகலில் வைத்து மேல் அகல் மூடி சீலமண் செய்து காயவைத்து 5—6 எருவில் புடமிட பஸ்மமாகும். குறிப்பு—இந்த பஸ்மம் கறுப்பாகவிருக்கும். கர்ப்பூர சிலாஜது—இது தென் நாட்டில் மிக சுலபம். இதைத் துண்டுகளாக்கி இளநீரில் போட்டு ஒரு நாழிகை கொதிக்க வைத்தால் சுத்தியாகும். பிறகு இளநீரை விட்டு அரைத்து பில்லை தட்டிக்காயவைத்து அகலில் வைத்து சீலமண் செய்து வராஹ புடமிட பஸ்மமாகும். அரைக் கால் தோலாவளவு தேன், வெண்ணெய் இவைகளில் கொள்ள உஷ்ணம், நீர் எரிச்சல் முதலியன சமனமாகும். குறிப்பு—இது தமிழ் நூல்களிலும் காணப்படுகிறது.

6. **மயில்துத்தம் :**— இதைத் தனித்துக் கொடுப்பதில்லை. பல கூட்டு மருந்துகளில் சேருகின்றது. துஷ்டவிரணங்களில் களிம்பு முறைகளில் சேருகின்றது. மலேரியா முதலிய சில சீத ஜ்வரங்களில் விசேஷித்துக் கூட்டு மருந்துகளில் சேர்ந்து உள்ளுக்கு உபயோகப்படுகின்றது. இதற்குத் தனியாக குண பாடம் இருந்தபோதிலும் தனித்து உள்ளுக்குக் கொடுக்கும்படி நூல்களில் பிரயோகங்கள் காணப்படவில்லை. அவ்விதம் அனுபவமுமில்லை. இது வாந்தி விரேசனங்களை யுண்டுபண்ணும். (இதைச் சுத்திசெய்து அடியில் காணுமாறு புடமிட்டு கூட்டு மருந்துகளில் சேர்க்கவேண்டும்.) இதன் சுத்தி—பசு மூத்திரம் அல்லது வெள்ளாட்டு மூத்திரத்தில் தோலா யந்திரமாகக்கட்டி 12 மணி எரித்து எடுக்கச் சுத்தியாகும். குறிப்பு—ஷை துத்தம் நீரில் பட்டுக்கொண்டிருந்தால் கரைந்துவிடும் அப்பொழுது சட்டியின் அடியில் இருக்கும் கரைந்த துத்தத்தை எடுத்து வெய்யிலில் உலர்த்திக்கொள்ளவும். இதன் பஸ்மம்—(1) சுத்தி செய்த துத்தத்திற்குச் சமயிடை கந்தகம், வெண்காரம் இவைகளை சேர்த்து எலுமிச்சம்பழ ரசத்தால் அரைத்து பில்லை தட்டிக் காயவைத்து ஓர் அகலில் வைத்து மூடி சீலமண் செய்து காய வைத்துக் குக்குடபுடமிட பஸ்மமாகும். (2) மற்றொரு முறை—நன்றாக விளைந்த மாங்காயை எடுத்து (பழமாக இருக்கக்கூடாது) நடுவில் குடைந்து உள் ஓட்டிலிருக்கும் விதையை வெளியிலெடுத்து எறிந்துவிட்டு அந்த ஸ்தானத்தில் துத்தத்தைச் செலுத்தி வாய்க்கு மாங்காய் சில்லு மூடி அப்படியே முழுவதற்கும் சீலமண் செய்து அப்படியே குக்குடபுடமிட மாங்காய்

வெந்து சாம்பலாகி உள்ளிருக்கும் துத்தம் உருகி கட்டிப்போகும். குறிப்பு—இது நம்முடைய அனுபவமுறை. (3) துத்தபஸ்மம்—சுத்தி செய்த துத்தத்திற்குச் சமயிடை பூனையின் மலம் அல்லது மாடப்புறா மலத்தைச் சேர்த்து துத்தத்தின் இடையில் பத்தில் ஒரு பங்கு வெங்காரம் சேர்த்து அரைத்து ஓர் அகலில் வைத்து மூடி சீலைமண் செய்து லகுபுடமிட பஸ்மமாகும். (4) துத்த பஸ்மம் - துத்தத்தின் இடைக்குப் பத்தில் ஒரு பங்கு இந்துப்பு சேர்த்து சற்று தேன் விட்டு அரைத்து முன்போல லகுபுடமிட பஸ்மமாகும்.

7. **சபலம்:**—இதைப்பற்றி நூல்கள் விரிவாகக் கூறுகின்றன. ஆனால் இது என்ன வஸ்து என்பதை அறிய முடியவில்லை. இந்த வஸ்துவைத் தணலில் இட்டால் உருகும். இது பல நிறமாக விருக்கும். ஆறு பட்டையுடன் கூடியது என நூல்கள் கூறுகின்றன. இது கூட்டு மருந்துகளில் எங்கும் காணப்படவில்லை. தனித்த உபயோகமும் சொல்லப்படவில்லை

8. **ரஸகம்:**— இது துத்தம் போன்ற ஓர் வஸ்து. இதைப் பால் துத்தம் எனச்சிலர் நினைக்கின்றனர் ஆனால் வைத்ய சிந்தாமணியில் ரஸகத்தைத் தனித்துச் சொல்லிப் பிறது க்ஷீர துத்தம் என்று கூறப்பட்டிருப்பதால் இது பால் துத்தத்தைக் காட்டிலும் வேறுபட்டதெனத் தெரிகிறது 'ரஸகோ ஜஸதாத் ஜாத:' என்று வசனம் இருப்பதால் ஆங்கிலத்தில் சொல்லப்படும் Zinc Sulphate எனக் கூறப்படுகின்றது. ஜஸதம் அல்லது யஸதம் என்ற வடமொழிக்குத் துத்தநாகம் என்பது பொருள். ஆனால் காசி பக்கத்தில் ரஸகம் என்பது ஓர் கல்லினத்தைச் சேர்ந்ததாகக் காணப்படுகின்றது. அது இருவிதமாகக் கடைகளில் கிடைக்கின்றது. பச்சை நிறமாக இருப்பது ஓர் விதம். இது விலை உயர்ந்த தினுசு சற்று அழுக்கான வெளுப்பாக விருப்பது மற்றொரு விதம். இது விலை மட்டமானது. நம் கடைகளில் கிடைக்கும். பால் துத்தத்தைக் காட்டிலும் இவ்விரு வகையும் வேறானது. ரஸகம் என்பது தனித்தும் பல கூட்டு மருந்துகளிலும் உபயோகப்படுகின்றது. இது நாட்பட்ட காய்ச்சல்களிலும், ரக்தாதிசாரம், ரக்தக்கடுப்பு, ரக்தப்பெருக்கு, முதலிய ஸ்திரீ நோய்களிலும், குணம் கொடுக்கின்றது. வட தேசத்து ரஸகங்களிலும் நம் தேசத்துப் பால் துத்தத்திலும் இக்குணங்கள் இருக்கின்றன. ரஸகசுத்தி-பேய்ச்சுரை ரஸத்தில் அரைத்துப் பிறகு அதே ரஸத்தில் டோலா யந்திரமாகக் கட்டி எரிக்கச் சுத்தியாகும் மறுமுறை சுத்தி—ரஸத்தைக் காய்ச்சிக் கொம்மட்டி மாதளை ரஸம் அல்லது எலுமிச்சம்பழ ரஸம் இவற்றுள் ஏழு தடவை தோய்க்கச் சுத்தியாகும். மறுமுறை சுத்தி — சிறுநீர், குதிரை மூத்திரம், மோர் அல்லது காடி இவற்றுள்-

ஏதாவதொன்றில் ரஸகத்தைக் காய்ச்சித் தோய்க்க சுத்தியாகும். ஷை பஸ்மம்—(1) சமயிடை சுத்தி செய்த தாளகத்தைப் பொடி செய்து சேர்த்து ஓர் இரும்பு வாணுயில் வைத்து அடுப்பேற்றி இரும்பு காண்டியில் மர்தித்துக் கொடுக்க தீப்பற்றி எரிந்து பஸ்மமாகும். ஷை பஸ்மம் (2) சுத்தி செய்த ரஸகத்திற்குச் சம யிடை சுத்தி செய்த பாதரஸம் சேர்த்து கல்வத்தில் மர்தித்து ஓர் குப்பியில் போட்டு வாய் மூடி சீலைமண் செய்து உலர்த்தி வாலுகா யந்திரத்தில் ஒரு நாள்பூர்ணமாக எரிக்க பஸ்மமாகும். குறிப்பு—ரஸங்கள் எட்டும் கீழ்கண்ட விதமாக முடிந்து விட்டது. இனி உபரஸங்கள் எட்டும் சொல்லப்படுகின்றன.

1 கந்தகம்—இது பூமியில் விளையும் வஸ்து. இது பல விதமாக இருக்கிறது. நெல்லிக்காய் கந்தகம் என்ற தினுசு மருந்துக்கு உபயோகமாகின்றது. வடதேசத்தில் 'அமலஸாரம்' என்ற ஓர்வித கந்தகம் மிகவும் புகழப்படுகின்றது. நமது நாட்டில் கிடைக்கும் நெல்லிக்காய் கந்தகத்தைவிட அமலஸாரம் என்ற வகுப்பு குணத்தில் மேம்பட்டதாக விருக்கின்றது. சிறிய துண்டு களாகவும் இலகுவில் பொடியாகக் கூடியதாகவும் இருக்கின்றது. ஆகவே கந்தகங்களில் அமலஸாரம் முதன்மையானது. அது கிடைக்காத பக்ஷத்தில் நம் நாட்டில் கிடைக்கும் முற்கூறிய தினுசை உபயோகிக்கலாம். இது தனியாகவும் கூட்டு மருந்து களிலும் சேருகின்றது ரஸம் சேரும் மருந்துகளில் நிச்சயமாக சேர்ந்திருக்கும். ஏனெனில் ரஸத்தின் துர்குணங்களை நீக்குவதில் கந்தகம் தலை சிறந்து விளங்குகின்றது. ரஸம், வீரம், பூரம் இந்த மூன்று சரக்குகளும் தனித்து உபயோகித்தால் வாய்பிடித்தல் முதலிய துர்குணங்களைக் கட்டாயம் செய்யும். ஆகவே அவை களுள் சமயிடையாகக் கந்தகத்தைச் சேர்த்துவிட்டால் அந்த துர்குணம் முழுவதும் விலகி விடுகின்றது. ஆகவே நூல்களில் ரஸம் சேரும் இடங்களில் கந்தகமும் சேர்த்துச் சொல்லப்படு கிறது நூல்களில் கந்தகம் கிளி மூக்கு நிறமுள்ளதென்றும், மஞ்சள் நிறம் உள்ளதென்றும், வெளுப்பு நிறம் உள்ளதென்றும் இவை முறையே உத்மம், மத்யமம், அதமமென்றும் சொல்லப் பட்டிருக்கின்றது அவற்றுள் கிளிமூக்கு நிறமுள்ளதெனச் சொல்லப்படும் உத்தம வகையாக நெல்லிக்காய் கந்தகத்தைக் கொள்ளலாம் மற்ற இனங்கள் நமக்குக் கிடைப்பதில்லை. சரும ரோகங்கள், குஷ்டம் முதலிய நோய்களை நிவிருத்தி செய்வதுடன் தாது புஷ்டிக்கும் ஏற்றதென இதன் குணங்களில் காணப்படு கின்றது சொரி, சிரங்கு முதலிய சருமரோமங்களிலும் மேகப் பத்துகளிலும் உள்ளுக்குத் தனித்துக் கொடுப்பதில் நாம் குணம் கண்டிருக்கிறோம். சிலருக்கு மதுமேகம் என்கிற டயபிடீஸ் நோயில் குணம் கொடுத்திருப்பதைக் கண்டிருக்கிறோம். தாது க்ஷீணமான வர்களுக்கு ஓரளவு இது தாதுவிருத்தியைக் கொடுத்திருக்கின்றது.

ரக்தத்தில் இருக்கும் கெடுதல்களை விலக்கி ரக்தத்தை சுத்தி செய்கின்றது. இதைத் தவிர மற்ற குணங்கள் நமது அனுபவத்தில் விளங்கவில்லை. இதைச் சுத்தி செய்யாமல் அப்படியே உபயோகித்தால் மிகுந்த துர்குணம் செய்யும். நன்றாக சுத்தி செய்துவிட்டால் துர்குணமே யிருப்பதில்லை. அதோடு அதன் சகிக்கமுடியாத வாடையும் மிகக் குறைந்துவிடுகின்றது. கல்கத்தா பக்கங்களில் இதை ஓர்வித சுத்தி செய்கின்றனர். அது அறவே அதன் வாடையைப்போக்கிவிடுகின்றது அவ்விதம் முழுவாடையும் போகும்படி செய்ய முடியாவிட்டாலும் அடியில் கண்ட விதமாகச் சுத்தி செய்வதில் பெரும்பாலும் வாடை போய்விடுகின்றது ரசத்துடன் சேரும் இடங்களில் இவ்விதம் சுத்தி செய்தே உபயோகிக்க வேண்டும். மகாத்வஜம் முதலியவைகளில் ரசத்துடன் சேர்த்து எரிக்கும் பொழுதும் இவ்விதம் சுத்தி செய்தே சேர்த்துக் கொள்வது நலம் ஷை சுத்தி—(1) ஓர் இருப்பு பாத்திரத்தில் கந்தகத்திற்குச் சமயிடை நெய்யை உருக்கி அதில் கந்தகப் பொடியைப் போட்டு கந்தகம் சற்று உருகினவுடன் ஏற்கனவே தயாராக வைத்திருக்கும் துணியால் வாய் கட்டின ஓர் பால் சட்டியில் துணியின் மேல் விட கந்தகம் துணி வழியாகப் பால் பாத்திரத்தில் இறங்கிக் கட்டியாகிவிடும் தண்ணீரில் கழுவி எடுத்துக் கொள்ளவும் குறிப்பு—இந்த சுத்தி சுலபமானது. ஆனால் சற்று வாடிக்கை வேண்டும். பாத்திரத்தில் நெய் உருகின பிறகு அடுப்புத்தீயைக் குறைத்துவிட வேண்டும் கந்தகப்பொடியை நெய்யில் போட்டவுடன் சில விநாடிகளில் உருக ஆரம்பிக்கும். அதிகமாக உருகினால் நெய்யுடன் கலந்து போகும் பிறகு பாலில் விட்டால் உறைந்து கட்டியாகாது ஆகவே கந்தகம் முறுகிப் போகாமல் பார்த்து உடனே துணியில் விடவேண்டும் கந்தகத்தை உருக்கிவிடும்படி சொல்லப்படும் முறைகளிலனைத்திலும் இவ்விதமே கவனமாகச் செய்யவேண்டும்.

2. கந்தக சுத்தி–ஓர் மண் பாத்திரத்தில் பசும்பால் முக்கால் பாகம் விட்டு அதன் வாயில் சிறு துவாரமுள்ள ஓர் அகலால் மூடி அதன் மேல் கந்தகத்தைப் பொடித்து வைத்து அந்த கந்தகம் மறையும்படி ஓர் மண் வாணலியைக் கவிழ்த்து மூடி சந்து வாய்க்குச் சீலைமண் செய்து பால் பாத்திரம் முழுவதும் மறையும்படி பூமியில் ஓர் குழி தோண்டி அதில் வைத்து மண் மூடி பிறகு மேல் கவிழ்ந்திருக்கும் வாணலியின்பேரில் 5—6 எரு அடுக்கித் தீயிட அத்தீ மேல் வாணலியில் தாக்கிப் பிறகு கந்தகம் உருகி சிறு துவாரங்களின் வழியாகக் கீழுள்ள பாலில் விழுந்து கட்டியாகும். அதை நீரில் கழுவி எடுத்துக் கொள்ளவும் சுத்தியாகும். கந்தக சுத்தி–(3) கந்தகத்தைப் பொடித்து ஓர் இரும்புக் கரண்டியில் வைத்துத் தணலில் வைக்கக் கந்தகம் உருகும். அச்சமயம் பார்த்து அதை கரிப்பான் ரஸத்தில் சாய்க்க கட்டியாகும். குறிப்பு—கூட்டு

மருந்துகளில் சேர்க்க இந்த ஒரு சுத்தி போதுமானது. தனித்துச் சாப்பிட இவ்விதம் ஏழு தடவை செய்தால் மிகவும் உத்தமம். குறிப்பு—இந்த முறை நல்ல சுத்தி முறை. நம் அனுபவத்தில் இருப்பது இம்முறை. கந்தக வாடை நீங்க—கந்தகத்தைப் பொடி செய்து பாலில் போட்டு கெட்டியாகி பால் வற்றும் வரை எரிக்கவும். பிறகு திரிபலா கஷாயத்திலும் இவ்விதம் செய்து முன்போல திரிபலை கஷாயத்தில் உருக்கிவிட வாடை நீங்கும். கந்தக வாடை நீங்க—கந்தகத்தை நன்றாகத் தூள் செய்து எலுமிச்சம் பழ ரசம், கரிப்பான் ரஸம், திரிபலை கஷாயம் இவைகளில் பாவனை செய்ய பெரும்பாலும் வாடை நீங்கும். குறிப்பு—இம்முறையும் நமது அனுபவத்தில் வந்த முறை கந்தக பஸ்மம் செய்யும் முறை—இது நூல்களில் காணப்படாவிட்டாலும் நமது அனுபவத்தை யொட்டிய முறையாகும். கந்தகத்தை கஜபுடமிடுவதும் பஸ்மம் செய்வதும் அசாத்தியமல்ல ஆனால் அவ்விதம் செய்வதில் குணம் கொஞ்சமுமின்றி போய்விடுவதால் நூல்களில் பஸ்மமுறை சொல்லப்படவில்லை. தமிழ் நூல்களிலும் பஸ்மமுறை காணப்படவில்லை. சிலர் அறியாமையால் கந்தக பஸ்மத்தை மெச்சுகின்றனர். கந்தகத்தை சுத்தி செய்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி. தேவையான கந்தகத்தை எடுத்து கடலை போல உடைத்து வைத்துக் கொள்ளவும். மருத மரத்தின் பட்டையை உலர்த்தி அதைச் சுட்டு சாம்பல் செய்ய இச்சாம்பல் மிகுந்த வெண்மையுடன் இருக்கும். அச்சாம்பலை ஓர் மண் சட்டியில் பாதிபோட்டு கைகளால் அமுக்கிப் பிறகு அதன்பேரில் முன் தயாரித்திருக்கும் கந்தகப்பொடியை வைத்துப் பரப்பி அதன் மேல் மிகுதி சாம்பலை சட்டி நிறையக் கொட்டி கையால் அமுக்கிப் பிறகு அப்படியே அடுப்பேற்றி நடுத்தரமான தீயிட்டு எரிக்க சுமார் இரண்டு மணிக்குள் சாம்பலின் மேல் புகை கிளம்பும். தீயின் தாரதம்யத்தை ஒட்டி புகை உண்டாக மணியில் வித்தியாசம் உண்டாகலாம். தீ தாக்கி கந்தகம் உருகுவதால் அப்புகை காணுகின்றது. அப்பொழுது ஓர் தென்னை ஓலையிலுள்ள கெட்டி ஈர்க்கால் சாம்பல் நடுவில் குத்தினால் கந்தகம் முழுவதும் உருகியிருப்பதும் உருகாததும் ஊகிக்கலாம். ஈர்க்கு கந்தகத்தில் நுழையும்போது கந்தகம் முழுவதும் உருகியிருந்தால் கைக்கு ஒன்றும் உணர்ச்சியிராது. உருகாமலிருந்தால் ஈர்க்கு அதில் நுழையும்பொழுது பெரும் மணலில் ஈர்க்கைக் குத்தினால் உண்டாகும் சப்தம்போல கைக்குத் தோன்றும். நன்றாக உருகினதாகத் தோன்றினவுடன் தீயை நிறுத்திவிட்டு மறுநாள் சாம்பல் நன்றாக ஆறினபிறகு கீழே கொட்டிப் பார்க்க கந்தகம் உருகிக் கட்டியாயிருக்கும் சாம்பலை நீக்கி கந்தகக்கட்டியை அப்படியே வைத்துக்கொள்ளவும். சித்ர மூலம் என்ற கொடுவேலியைப் பச்சையாகக் கொண்டுவந்து அதன் வேரைத் தனியாக எடுத்து அரைத்து அந்த விழுதுக்குள் மிகுதி கட்டிகளை வைத்துப் பிறகு கொடுவேலியின் மேல் குச்சி,

தழை முதலியவைகளை அரைத்து விழுது செய்து அந்த விழுதால் பூசி வெய்யிலில் உலர்த்திப் பிறகு ஓர் தகுந்த அளவுள்ள மண் சட்டியில் வைத்து வாய் மூடி வாய்க்குச் சீலைமண் செய்து காய வைத்து வராஹ புடமிடவும். வெண்மையான பஸ்மமாகும். குறிப்பு—இதுபோன்ற பல வழிகள் கந்தக பஸ்மத்திற்கு உண்டு. அவைகளை வளர்ப்பதில் பலனில்லையென இம்முறையுடன் நிறுத்துகிறோம் ஏனெனில் இப்பஸ்மம் பார்வைக்கு அழகேயன்றி உண்மை கூறுமிடத்துச் சற்றும் குணம் கொடுப்பதில்லை. ஷை சாம்பலில் உருகின பிறகு ஆறவிட்டு எடுத்து அந்தக் கட்டியை அப்படியே பொடி செய்து உபயோகிப்பதில் பலனுண்டு. கந்தகத்திற்குச் சொல்லப்பட்ட மற்ற சுத்திகளைப் போல இச்சாம்பலில் உருக்கி எடுப்பதும் ஓர் உயர்ந்த சுத்தியாகும். ஆகவே இந்த சுத்தியைச் செய்துகொண்டு அதை அப்படியே தகுந்த அனுபானங்களில் உபயோகிக்கலாம். இது மதுமேகத்தையும் ஓரளவு குணப்படுத்துகின்றது. இனி கந்தகத்தை உள்ளுக்கு உபயோகிக்கச் சில அனுபவ முறைகளை எழுதுகிறோம். (1) முன்சொன்ன வழிகளில் ஏதாவது ஒரு விதமாகச் சுத்திசெய்த கந்தகத்தைப் பொடிசெய்து அரைக்கால் தோலா முதல் கால் தோலா வரை எடுத்து திரிபலை சூர்ணத்துடன் சேர்த்து தேன், நெய் விட்டு குழைத்து உபயோகிக்கலாம். (2) சுத்தி செய்த கந்தகத்தைக் கால் தோலா அளவு பால் அனுபானத்தில் உபயோகிக்கலாம். (3) ஒரு பங்கு கந்தகப்பொடியை மூன்று பங்கு கரிப்பான் ரஸத்தில் போட்டு கலக்கி நிழலில் வைத்து ரஸம் முழுவதும் வற்றினவுடன் பொடி செய்து கால் தோலாவளவு பொடியை திரிபலை சூர்ணத்துடன் சேர்த்து தேன், நெய்விட்டு குழைத்துச் சாப்பிடவும். (4) திரிகடு வகைக்குத் தோலா ஒன்று பொடி செய்து 48 தோலா கந்தகத்துடன் சேர்த்து கலந்து ஓர் சாண் நீள அகலமுள்ள வஸ்திரத்தில் பரப்பி அப்படியே அந்த வஸ்திரத்தைச் சுருட்டி நுனிகள், நடுபாகம் இவைகளை நூலால் கட்டி முடிந்து அதாவது உள்ளிருக்கும் தூள் கீழே விழாமல் இருக்கும்படி ஜாக்கிரதையாக முடிந்து நல்லெண்ணெயில் முழுகும்படி அந்தச் சுருளை ஒரு யாமம் வைத்திருந்து பிறகு எடுத்து ஓர் இரும்பு இடுக்கியில் பிடித்துக் கொண்டு சுருளின் நடுவில் தீ பிடிக்கும்படி செய்ய சுருளுக்குள் இருக்கும் கந்தகம் உருகி சொட்டு சொட்டாக விழும். அந்த திரவத்தை ஓர் சீசாவில் பிடித்து வைத்துக்கொள்ளவும். ஓர் வெற்றிலையில் அந்த திராவகத்தில் மூன்று சொட்டு விட்டு இரண்டு குன்றுமணியிடையுள்ள சுத்த ரஸத்தையும் சேர்த்து அப்படியே விரலால் தேய்க்க இரண்டும் கலந்து போகும். பிறகு வெற்றிலையுடன் அப்படியே மென்று தின்ன நல்ல பசியுண்டாகும். வயிற்று வலி நீங்கும். (5) சுத்தி செய்த கந்தகத்தைத் தேவையான அளவு எடுத்து ஓர் பீங்கானில்போட்டு பசும்பால் சதுர்ஜாத கஷாயம், சீந்தில்

கஷாயம், திருபலை கஷாயம், சுக்கு கஷாயம், கரிப்பான் ரஸம் இஞ்சி ரஸம், இவைகளில் முறையே எட்டு தடவை பாவனை செய்து பிறகு உலர்த்திப் பொடிசெய்து சரியிடை ஜீனியைச் சேர்த்து தினம் வேளைக்கு அரைத்தோலா வீதம் இருவேளையும் பால் அனுபானத்தில் சாப்பிட ஸகல ரோகங்களும் நிவிருத்தி, யாகும். இது உத்தமமான முறை. (6) திரிபலை, குக்கில், ரஸம், கந்தகம் இவைகளை ஸமயிடை எடுத்து விளக்கெண்ணை சேர்த்து அரைத்து தினம் வேளைக்கு கால் தோலா வீதம் இரு வேளை சாப்பிட மூலம் முதலிய நோய்கள் தீரும். (7) கந்தகம் 4 தோலா ரஸம் தோலா 2, இவைகளை ஒன்றுசேர்த்து குமரி ரஸம் விட்டு ஒரு நாள் முழுவதும் அரைத்து உருட்டி உலர்த்தி குகையில் வைத்து கந்தகம் உருகும்படி ஊதி எடுத்து ஆறவிட்டுப் பொடி செய்து தேன், நெய், அனுபானங்களில் கொள்ளவும். (8) திரிபலை, கந்தகம், கரிப்பான் தூள், இவைகளைச் சமயிடை எடுத்து நன்றாகக் கலந்து சாப்பிட பிணிகள் நீங்கும். (9) ஓர் சுத்தமான வஸ்திரத்தை எருக்கம்பால், சதுரக்கள்ளிப்பால் இவைகளில் வகைக்கு ஏழு தடவை தோய்த்து உலர்த்தவும் பிறகு கந்தகத்தைச் சமயிடையுள்ள வெண்ணை சேர்த்து கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து அந்த வஸ்திரத்தில் தடவவும். முழுவதையும் தடவிய பிறகு அந்த வஸ்திரத்தைச் சுருட்டி சுருளாகச் செய்து ஓர் இடுக்கியால் அந்தச் சுருளைத் தலைகீழாகப் பிடித்துக்கொண்டு நுனி பாகத்தில் தீயிட கந்தகம் உருகி தைலம் வரும். அதை ஓர் பீங்கானில் அல்லது சீசாவில் பிடித்துக்கொண்டு பத்திரப் படுத்தி வேளைக்கு இரண்டு அல்லது மூன்று சொட்டு தகுந்த அனுபானங்களில் சாப்பிடவும். (10) கந்தகம் தோலா ஒன்று மிளகுப்பொடி தோலா ஒன்று, திரிபலைப்பொடி வகைக்குத் தோலா இரண்டு இவைகளைக் கல்வத்திலிட்டு சரக்கொன்னை வேரின் கஷாயத்தால் அரைத்து உலர்த்திப் பொடி செய்து வேளைக்கு அரைத்தோலா முதல் ஒரு தோலா வரை தகுந்த அனுபானத்தில் சாப்பிட சகல ரோகங்களும் தீரும். (11) சரக்கொன்னை வேரின் கஷாயத்தால் கந்தகத்தை அரைத்துச் சந்தண விழுதுபோல செய்து உடப்பில் தடவ (பத்துப்போட) சொரி, சிரங்கு, குஷ்டம் தீரும்.

2. கைரிகம்—கைரிகம் என்ற வடமொழி காவிக்கல்லைக் குறிப்பகாகும். அதில் பல பேதங்கள் இருக்கின்றன. அவற்றுள் பூங்காவி என்பது உத்தமம். இது உள்ளுக்கும் வெளிக்கும் உபயோகமாகின்றது. தனித்தும் கூட்டு மருந்துகளிலும் சேருகின்றது. சொரி, சிரங்கு, அரிப்பு, முதலியவைகளில் மேலுக்கு உபயோகமாகின்றது. ரக்தப்பெருக்கு, ரக்தமூலம், ரக்தாதிசாரம், இவவகளில் உள்ளுக்கு உபயோகப்படுகின்றது. இதற்கு சுத்தி நூல்களில் கூறப்படுகின்றது. ஆனால் வெளி உபயோகங்

களுக்கு சுத்தியில்லாமலே உபயோகிக்கலாம். உள்ளுக்கும் சுத்தி அவசியமென அனுபவத்தில் தோன்றவில்லை. சுத்தியில்லாமலே பலதடவை நாம் உபயோகித்திருக்கிறோம். கைரிக சுத்தி—கொஞ்சம் நெய்விட்டு ஓர் இரும்பு பாத்திரத்தில் கைரிகத்தைப் போட்டு அடுப்பேற்றி சற்று சூடு வரும்படி வறுத்து எடுக்கவும். கைரிக சுத்தி—பசும்பாலில் பாவனை செய்து உலர்த்திக்கொள்ளவும் குறிப்பு—பசும்பாலில் பாவனை செய்த வஸ்துக்கள் எல்லாம் சில நாள் வைத்திருந்தால் ஓர் வித அழுகநாற்றம் உண்டாகிறது. ஆகவே தேவைக்குத் தகுந்தபடி அவ்வப்பொழுது சுத்திசெய்து கொள்வது நலம். நாற்றம் உண்டானபோதிலும் குணம் குறைவதில்லை. உள்ளுக்கு உபயோகிக்க ஓர் முறை—பூங்காவி, மாதளம்பூ, இவைகளைச் சமயிடையாக எடுத்துப் பொடிசெய்து வஸ்திரகாயம் செய்து கொள்ளவும். கால் தோலா உட்கொள்ள ரக்தப்பெருக்கு முதலியவை விலகும். மாதளம்பூ என்பது கடைகளில் கிடைக்கும். மாதளை மரங்களில் இருவகையுண்டு. ஓர் வகைக்குப் பூவும் பழமுமுண்டு மற்றொரு வகையில் புஷ்பம் மாத்திரம் இருக்கும் காய் இருக்காது. இந்த வகைப் பூ கடைகளில் கிடைக்கின்றது.

3. காஸீஸம்—இதைத் தமிழில் அன்னபேதி என்பர். இதை அப்படியே உபயோகிப்பது கிடையாது. இது சில இடங்களில் கூட்டு மருந்துகளுடன் சேருகின்றது. உள்ளுக்கு உபயோகமாகின்றது. இது இருவகையென நூல்கள் கூறுகின்றன. ஆனால் நமக்குத் தற்காலம் ஒரே மாதிரியில்தான் கிடைக்கின்றது. இதைப் புடம் போட்டால் சிந்தூரமாகும். அயச்சிந்தூரத்திற்குப் பதிலாக உபயோகிக்கலாம் ஆனால் உண்மையான அயச்சிந்தூரத்திற்கும் இதற்கும் குணத்தில் மிகுந்த மாறுபாடு உண்டு. சுவல்ப குணம் இருப்பதுபற்றி இதை அதற்குப் பதிலாக உபயோகிக்கலாம் சிந்தூர முறை—தேவையான அன்னபேதியைக் கல்வத்திலிட்டு பொடித்து கரிப்பான் ரஸம் விட்டு அரைத்து பில்லை தட்டி காயவைத்து கஜபுடமிட சிந்தூரமாகும். இவ்விதம் இரண்டு அல்லது மூன்று புடமிட துவர்ப்பு நீங்கும்.

4. துவரிகா—இதைப் படிக்காரம் என்றும் சீனிக்காரம் என்றும் தமிழில் சொல்லுவார்கள். இது வடதேசத்துச் சரக்கு ஜயசீர் செய்வதில் இது மிகவும் உபயோகப்படுகின்றது தமிழ் நூல்களிலும் இதன் உபயோகம் மிகுந்து காணப்படுகின்றது. சங்கத்திராவக முறைகளில் இது சேருகின்றது. இது தனித்தும் கூட்டு மருந்துகளிலும் சேருகின்றது. ரக்தப்பெருக்கு முதலியவைகளில் இது குணம் கொடுக்கும். நமது தேசத்தில் கடைகளில் வெளுப்பான ஒரு விதமே கிடைக்கின்றது. வடதேசத்தில் சிகப்பு நிறமுள்ள இனமும் கிடைக்கின்றது. சுத்தி—

சீனிக்காரத்தை நெருப்பில் பொரித்து எடுத்துக்கொள்ளுவது சுத்தியென நூல்களில் கூறப்படாவிட்டாலும் பெரியோர்களின் வாடிக்கையென ஆயுர்வேதப்பிரகாசம் என்ற நூலில் கூறப்பட்டிருக்கின்றது.

5. தாளகம்—இது ஓர் பிரசித்தமான விஷவு சரக்கு. நமது கடைகளில் இருவித தாளகம் கிடைக்கின்றது. கட்டி தாளகம் இவற்றுள் ஓர் விதம் இது குணத்தில் இளப்பமானது. பத்ரதாளகம் அல்லது அடுக்கு தாளகம் என்பது மற்றொரு விதம். இது பொன்னிறமாகவும் அப்பிரகத் தகடு போல தகடுகள் அமைந்ததாகவும் இருக்கும். இதுவே உயர்ந்த இனம். இவ்வகை சில வருஷங்களுக்கு முன் நமது கடைகளில் சுலபமாகக் கிடைத்தது. தற்காலம் கிடைப்பவை அவ்வளவு சிலாக்கியமானவையல்ல. நீளத் தகடுகளாக பெயர்க்கக் கூடியதும் பொன்னிறமானதும்தான் சிரேஷ்டம். தற்காலம் கிடைப்பவைகள் தகடுகளாக பெயர்க்கக் கூடியவையல்ல இருந்தபோதிலும் இதைத்தான் உபயோகிக்க வேண்டியிருக்கிறது. கோதந்த தாளகம் என்பது மூன்றாவது வகை இது மங்கலான வெண்மையுடைய கட்டிகளாகவிருக்கின்றது. பத்ர தாளகம் போல இது தகடுகள் அமைந்ததல்ல. இதைப் பத்ரதாளகத்திற்கு அடுத்த படியாகப் பெருமைப்படுத்தி நூல்கள் கூறுகின்றன. ரஸரத்ன ஸமுச்சயம் போன்ற முன் நூல்களில் இதைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை ஆயுர்வேதப் பிரகாசம் போன்ற பின் நூல்களில் கோதந்த தாளகம் கூறப்பட்டிருக்கின்றது அதாவது—சித்தர்கள் அபிப்பிராயப்படி தாளகத்தில் பத்ரதாளகம் மிகவும் உயர்ந்தது அதற்கு அடுத்தது கோதந்த தாளகம் என்பதே. ஆகவே பத்ரதாளகம் அல்லது கோதந்த தாளகம் ஆகிய இரு வகைகளில் ஏதாவது ஒன்றை எடுத்துக்கொள்ளலாம் இந்த வஸ்துவுக்குப் பல குணங்கள் இருப்பதாக நூல்கள் கூறுகின்றன. நாம் அனுபவித்த மட்டில் இதன் பல குணங்களைப் பூர்ணமாக ஒப்புக்கொள்ளவேண்டியதே நூல்களில் கூறப்பட்டுள்ள ரஸம் முதலிய வஸ்துக்களில் தாளகத்திற்குச் சமமான வஸ்து கிடையாதெனவே சொல்லலாம். அப்பிரகத்தின் பெருமையை நாம் குறைத்துப் பேசமுடியாது. இருந்தபோதிலும் தாளகத்தின் ஒப்பற்ற மேன்மையை மறைக்க முடியாது. க்ஷயம், குஷ்டம், நிமோனியா காய்ச்சல், மேகத்தை யொட்டிய வியாதிகள், ஆகிய இவைகளில் இது நிகரற்று விளங்குகின்றது ஷை வியாதிகளில் வேறு எந்த மருந்தும் தாளகத்திற்கு நிகராக முடியாது. நுரையீரல்களில் காணும் புண் (Inflamation) இவைகளை மிகச் சீக்கிரமாக குணப்படுத்துகின்றது. சரீரத்தில் காணும் மேகப் பற்றுகள் முதலியவைகளை நன்கு குணப்படுத்துகின்றது. இருமல்களில் நன்கு குணம் கொடுக்கின்றது, ஆனால் ஆஸ்த்மா

வில் இது பலனையளிப்பதில்லை. ரக்தவாந்தி மிகுந்து இருக்கும் க்ஷய நோய்களில் இது மாத்திரம் தனித்து குணம் கொடுப்ப தில்லை. அந்த வகை நீங்கலாக மற்ற க்ஷய நோய்களின் வகை யனைத்திலும் இது வியாதியைப் பூர்ணமாகக் குணப்படுத்து கின்றது. ஆகவே க்ஷய நோய்களில் இது முக்கிய மருந்தா கின்றது. இம்மருந்தால் குணமாகிய பிறகு அந்த நோய் திரும்பி வருவதில்லை க்ஷய நோய்களில் சில சந்தர்ப்பங்களை யொட்டி வேறு மருந்துகளையும் இதோடு சேர்த்துக் கொடுக்கவேண்டும். இதைத் தனித்தும் அல்லது கூட்டு மருந்துகளுடன் சேர்த்தும் கொடுக்கலாம் நூல்களில் சொல்லப்படும் எல்லா மருந்துகளிலும் அனேகமாகத் தாளகம் சேருகின்றது. தமிழ் நூல்களிலும் இது விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது. தமிழ் நூல்களில் தாளகம் சேர்ந்த கூட்டு மருந்துகள் மிகச் சுவல்பமே. இதில் களிம்பு இருப்பதால் நன்றாகச் சுத்தி செய்யவேண்டும். சுத்தி செய்து பச்சையாக அப்படியே கூட்டு மருந்துகளில் சேர்க்கின்றனர். அவ்விதம் சேரும் கூட்டு மருந்துகள் இருவகைப்படும். எரிப்பு வகை ஒன்று அதாவது தாளகத்தையும் மற்ற மருந்துகளையும் சேர்த்துக் குப்பியில் அடைத்துச் சீலைமண் செய்து சில யாமம அல்லது நாள் வாலுகாயந்திரத்தில் எரித்து எடுப்பதாகும். இந்த வகை ஆயுர்வேத நூல்களிலும் தமிழ் நூல்களிலும் காணப்படு கின்றது. இவ்வகையைப் பலரும் செய்து வருகின்றனர் மற்ற மருந்துகளுடன் சேர்த்து அரைத்து உபயோகிப்பது இரண்டா வது வகையாகும். இந்த இரண்டாவது வகையும் பலர் செய்து உபயோகிக்கின்றனர். ஆனால் இந்த இரண்டாவது வகையில் தாளகம் நல்ல குணம் கொடுப்பதில்லை தாளகபஸ்மம் கொடுக் கும் குணத்தில் சிறியளவு குணம்கூட பச்சை தாளகம் கொடுப்ப தில்லை. ஆனால் துர்குணம் மாத்திரம் செய்கின்றது. நன்றாகச் சுத்தி செய்துவிட்ட போதிலும்கூட பச்சைத்தாளகம் வாந்தி முதலிய துர்குணங்களைக் கட்டாயம் கொடுக்கின்றது. ஆகவே பச்சைத் தாளகத்தில் குணமில்லாமலும் துர்குணம் மிகுந்தும் இருப்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். இதைக் கண்டுதான் பலர் தாளகம் என்றால் பயப்படுகின்றனர். உண்மையில் தாளகத் தைக்கண்டு பயப்பட வேண்டியதில்லை. அதைப் பஸ்மமாகச் செய்துவிட்டால் துர்குணம் மிகவும் குறைந்துவிடுகின்றது. இரண்டு மாதக் குழந்தை முதல் 70 வயதானவர்கள் வரை நாம் பலதடவைகளில் பல நோய்களில் மாதக்கணக்காய் கொடுத்தும் துர்குணமே கிடையாதென்றும், எதிர்பார்க்கும் குணங்கள் குறை வின்றியிருப்பதையும் அனுபவத்தில் அறிந்திருக்கிறோம். சில சமயங்களில் சற்று துர்குணம் காணப்படுமாகில் இரண்டு நாட் களுக்கு மருந்தை நிறுத்தினால் துர்குணம் மறைந்துவிடுகின்றது. மறுபடியும் முன்போலவே கொடுக்கலாம். தாளக பஸ்மத்தை நாம் பல வருஷங்களாக உபயோகித்ததில் காணப்பட்ட துர்

குணங்களைக் குறிப்பிடுகிறோம். சுமார் 60 வயதுள்ள ஒருவர் ஆஸ்த்மா நோயால் வருந்தி வந்தார் சுமார் முப்பது வருஷங்களாக அவருக்கு அந்த நோய் துன்பம் அளித்துவந்தது. அவருக்குத் தாளக பஸ்மம் கொடுக்கப்பட்டது. ஒரு வாரத்திற்குப் பிறகு அவருடைய இரண்டு கால்களிலும் சற்று வீக்கம் ஏற்பட்டது. வேறு துர்குணங்கள் ஒன்றும் காணப்படவில்லை. இந்த வீக்கம் தாளக பஸ்மத்தால் இருக்கலாமோ என்று சந்தேகித்து மருந்தை நிறுத்தியதில் 2, 3 நாளில் வீக்கம் பூர்ணமாகத் தானே மறைந்து விட்டது. இந்த ஒரு நபரைத் தவிர மற்றெவருக்கும் இம்மாதிரி துர்குணம் உண்டாகவில்லை. ஆகவே இந்த துர்குணத்திற்கு வேறு ஏதாவது காரணமிருக்கலாமோ என்று நினைக்கும்படி யிருந்தது. மற்ற கேசுகளில் சிலருக்குக் குமட்டல் இருந்தது. சாதாரணக் குமட்டல்களில் மருந்தை நிறுத்தாமலே கொடுத்து வந்ததில் சில நாட்களில் மருந்து உடம்புக்கு ஒத்துப்போய் துர்குணமின்றி யிருந்தது. Leprosy என்ற குஷ்ட நோயில் கொடுத்தபொழுது ஆரம்பத்தில் சில நாட்களில் உள்ளங்கால்களில் எரிச்சல் கண்டு உள்ளங்கால்களில் ஓர் தோல் கழண்டு விட்டது. வியாதி பூராவும் குணமடைந்தது மேற்படி நோயாளிக்கு ஆங்கில சிகிச்சையில் நூறு இன்ஜக்ஷன் கொடுத்தும் குணமின்றி சில வருஷங்கள் கழித்துப் பிறகு தாளக பஸ்ம சிகிச்சை கொடுக்கப்பட்டது. ஓர் க்ஷய நோயில் தாளக பஸ்மம் கொடுத்து வந்ததில் மலம் இளகி, பேதியாக தினம் மூன்று அல்லது நான்கு தடவை கழிந்தது. இரண்டு நாள் மருந்தை நிறுத்தினவுடன் அத்துர்க்குணம் விலகிவிட்டது. பல வருஷங்களாக நாம் உபயோகித்து வந்ததில் மேலே சொன்ன துர்க்குணங்களே காணப்பட்டன. பலருக்கு ஒருவித துர்க்குணமும் காணப்படவில்லை. குஷ்ட நோய்களில் முதல் மாதத்திலேயே குணம் ஆரம்பிக்கின்றது. நோய்க்குத் தக்கபடி ஆறு மாதம் முதல் ஒரு வருஷம் வரை உபயோகிக்கவேண்டியதாகின்றது. சாதாரண இருமல்களில் 15 நாள் முதல் ஒரு மண்டலம் வரை உபயோகிக்க வேண்டியதாகின்றது. தாளக சுத்தி — தாளகத்தைக் கடலை போல நறுக்கி ஓர் துணியில் கட்டி காடியில் சுண்ணாம்புக்கல் கலந்து அதில் தோலா யந்திரமாகத் தொங்கவிட்டு ஒரு யாமம் எரிக்கவும். பிறகு பூசணிக்காய் ரஸத்திலும், திரிபலை கஷாயத்திலும், நல்லெண்ணெயிலும் ஒரு யாமம் எரிக்கவும். நல்லெண்ணெயில் எரிக்கும்பொழுது ஜலத்தைக் கலந்து எரிக்கவும். இல்லாவிட்டால் நல்லெண்ணெயில் தீப்பற்றி தாளகம் எரிந்துவிடும்.

குறிப்பு — நூல்களில் இவ்விதம் கூறப்பட்ட போதிலும் நாம் அனுபவத்தில் செய்துவரும் முறையாவது — சுண்ணாம்புக்கல்லை ஓர் சட்டியில் சுமார் அரைப்படி போட்டு அதில் முன் சொன்னபடி தாளகத்தை ஓர் துணியில் முடிந்து இரண்டுபடி பச்சை ஜலம் விட கொதிக்கும். கொதி ஆறின பிறகு அடுப்பேற்றி இரண்டு

மணி எரித்து ஆறவிட்டு துணிக்குள்ளிருக்கும் தாளகத்தை நீரில் கழுவி எடுத்துக் கொள்ளவும் தாளக பஸ்மம்—(1) புரசம் வேர் கஷாயம் செய்து அந்தக் கஷாயத்தை வடிகட்டி ஓர் பாண்டம் அல்லது இரும்பு சட்டியிலிட்டு அடுப்பேற்றி எரித்து தேன் போல கெட்டியாக ஆகும் பதத்தில் எடுத்துக்கொண்டு அதால் தாளகத்தை மூன்று தடவை பாவனை செய்து பிறகு அந்த தாளகத்தை எருமை மூத்திரத்தில் அரைத்து வில்லைதட்டி அகலில் வைத்து முழுவதும் சீலைமண் செய்து பத்து எருவில் புடமிடவும். இவ்விதம் பத்து புடமிட பஸ்மமாகும். குறிப்பு — இந்தமாதிரியான லகுபுடங்களில் முடியும் பஸ்மங்கள் நெருப்பில் போட்டால் புகையும். தாளக பஸ்மத்திற்கு லக்ஷணம் ஆயுர்வேத பிரகாசத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "தாளகம் ம்ருதம் ததா க்யேயம் வஹ்நிஸ்தம் தூமவர்ஜிதம் | ஸதூமம் நம்ருதம் ப்ராஹு: விருத்த வைத்ய இதி ஸ்திதி; ||" தாளக பஸ்மத்தைத் தணலில் போட்டால் புகை வராமலிருந்தால் அது உயர்ந்த பஸ்மமாகும். புகை வருமாகில் அது சரியான பஸ்மமல்ல என்பது பெரியோர்களின் கொள்கை என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

தாளக பஸ்மம்:— (2) சுத்தி செய்த தாளகத்தைக் குதிரைலத்திச் சாற்றில் ஏழு பாவனை செய்து பிறகு பில்லைதட்டி ஓர் மண் சட்டியில் பாதியளவு குதிரை லத்தியை யடைத்து அதில் அந்த பில்லையை வைத்துப் பிறகு மேலும் குதிரை லத்தியைப் போட்டு வாய்க்கு அகல் மூடி சந்து வாய்க்குச் சீலைமண் செய்து காயவைத்து கஜபுடமிடவும் ஆறவிட்டு எடுக்க பஸ்மமாகும். குறிப்பு:—தாளகக்கட்டியின் அடியில் ஓர் அப்பிரகத்தகட்டையும் கட்டிக்கு மேல் ஓர் அப்பிரகத் தகட்டையும் வைத்துக்கொண்டு குதிரை லத்தியாலடைத்துப் புடமிட்டால் லத்திச்சாம்பல் கலக்காமல் தாளக பஸ்மத்தை எடுத்துக்கொள்ளலாம். கஜபுடமென நூல்களில் கூறப்பட்டாலும் வாராஹபுடம் போடுவது சரியாகவிருக்கின்றது. முன் சொன்ன பஸ்ம முறையை விட இது உத்தமமாகும். தாளக பஸ்மம்: (3) சுத்தி செய்த தாளகத்தை ஓர் மண் வாணயில் வைத்து அடுப்பேற்றி வெங்காயச்சார் அரைப்படி சுருக்கு கொடுத்துப் பிறகு அந்த தாளகத்தை வெங்காயச்சார் விட்டு அரைத்து பில்லை கட்டி காய வைத்து அந்த பில்லைக்கு மேல் 7-8 வரிசை துணி சுற்றி முழ உயரம் உமி கொட்டி உமியின் நடுவில் அதை வைத்து நெருப்பிட தாளகம் உருகி உமியின் மேல் குருணைபோல் படியும். அதை எடுத்துச் சாம்பல் நீக்கி கல்வத்திலிட்டும் பொடி செய்து அரிசியிடை தேன் முதலிய அனுபானங்களில் ஆறு வேளை கொள்ள காசம் நீங்கும். அவசியமானால் சில நாள் விட்டு மறுபடியும் ஆறு வேளை உபயோகிக்கலாம். இது சற்று கடுமையான குணமுள்ளது. தாளக பஸ்மம்:— (4) ஒரு பலம் சுத்தி செய்த தாளகத்தைச் சோற்றுக்கற்றாழை ரஸத்தால்

அரைத்து உலர்த்தி ஓர் சட்டியிலிட்டு மேல் சட்டி மூடி 12 யாமம் எரிக்க பஸ்மமாகும். தாளக பஸ்மம் :— (5) தாளகத்தை அரசம்பட்டை கஷாயத்தில் இருபது பாவனை செய்து பிறகு பில்லை செய்து காய வைத்து ஓர் சட்டியில் பாதி வரை அரசம்பட்டை சுட்ட சாம்பல் போட்டு அதன் நடுவில் பில்லையை வைத்து ஷெ சாம்பலால் சட்டியை நிரப்பி வாய் மூடி சீலை செய்து காயவைத்துக் கஜபுடமிட பஸ்மமாகும். (6) தாளகம் ஓர் இடை, ஒட்டடை இரு இடை எடுத்து ஓர் சட்டியில் பாதியளவு அரசம்பட்டைச் சாம்பல் போட்டு அதன் மேல் ஒட்டடைப் பொடியில் பாதி பரப்பி அதில் தாளகத்தை வைத்து அதன் மேல் மீதி பாதி ஒட்டடைப் பொடியைப் போட்டு அதன் மேல் சாம்பலைச் சட்டி நிறையக் கொட்டி மேல் மூடி நான்கு யாமம் எரித்து ஆற விட்டு எடுக்கப் பஸ்மமாகும் தாளக பஸ்மம் :— (7) தாளகத்தைத் தும்பைச்சாற்றில் ஏழு நாள் அரைத்து உலர்த்தி ஓர் சட்டியில் போட்டு வாய்க்கு மூடி சீலைமண் செய்து காயவைத்து அடுப்பேற்றி எட்டு யாமம் எரித்து அதை எடுத்து அதே சாற்றால் மூன்று நாள் அரைத்து மறுபடியும் முன்போல எரிக்கவும். இவ்விதம் ஏழு தடவை எரிக்கத் தாளகம் மேல் பதங்கிப்பது நின்று சட்டியின் அடியில் தங்கி விடும். பிறகு எருக்கம் பாலால் ஒரு நாள் அரைத்து முன்போல எரிக்கவும். இது கலக்குஷ்டம், வீக்கம், வாதரக்தம், முதலியவைகளைப் போக்கும், பிரங்கம் என்ற Syphilis நோயில் மிகுந்த நன்மை செய்யும். தாளக பஸ்மம் :— (8) தாளகத்தை வெள்ளைச்சாரணத்தி கஷாயத்தில் ஒரு நாள் அரைத்து அதை ஓரே உருண்டை அல்லது பில்லையாகச் செய்து வெய்யிலில் நன்றாகக் காய வைத்து ஓர் சட்டியில் பாதியளவு ஷெ சாரணத்திச் சாம்பலைப் போட்டு அமுக்கி அதன் நடுவில் அந்தத் தாளகப்பில்லையை வைத்து அதன் மேல் சட்டி நிறைய ஷெ சாம்பலைக்கொட்டி வாய் மூடி சீலைமண் செய்து உலர்த்தி காடாக்னியாக ஐந்து நாள் கைவிடாமல் எரிக்கவும். ஆறவிட்டு எடுக்கப் பஸ்மமாகும். இது பாவப்பிரகாசம் என்ற நூலில் சொல்லப்பட்ட முறை. இதைப் பல தடவைகளில் நாம் செய்து அனுபவித்திருக்கிறோம் விஸர்ப்பம் மண்டலம் குஷ்டம், பிரங்கநோய் (இதைத் தமிழில் பரங்கி நோய் என்பார்) முதலிய நோய்கள் நீங்கும். இந்த ஒரு மருந்தைச் சரியாக முடித்துத் தகுந்த அனுபானத்துடன் உபயோகிக்கப் பல நோய்கள் விலகும். இது உத்தமமான முறை. க்ஷயம், காசம், முதலிய சகல ரோகங்களையும் விலக்கும். குறிப்பு :— தாளக பஸ்மம் எந்த முறைப்படி செய்த போதிலும் வேளைக்கு இரண்டு அரிசியிடைக்கு மேல் உபயோகிக்கக் கூடாது. சில சரீரக்கூறுகளை யொட்டி அதிக அளவிலும் உபயோகிக்கலாம். சிலர் தாளக பஸ்மம் செய்வதாகச் சொல்லி ஏமாற்றுவதுண்டு. அதாவது தாளகத்தையும் சீனிக்காரம் (இதுவே படிக்காரம் எனப்படும்) என்ற கடைச்சரக்கையும் சேர்த்து ஏதாவது ஓர் ரஸம் விட்டு

அரைத்துக் காய வைத்து அகலில் வைத்து மூடி சீலைமண் செய்து கஜபுடம் இட தாளகம் நெருப்பில் போய் சீனிக்காரம் மாத்திரம் பஸ்மமாகும் அது மிகவும் வெளுப்பு நிறத்துடன் புரைபுரை யாகக் காணும். இதைத் தாளக பஸ்மமெனச் சொல்லிக்கொடுப் பதுண்டு. உண்மையில் இந்த பஸ்மமும் சில நோய்களை அரிசி யிடை அளவில் உட்கொண்டால் விலக்குகின்றது. இது மோரே சுவரர் என்ற ஒரு வைத்தியர் நூலில் காணுகின்றது. தாளக பஸ்மம் :— (9) புரசம்பட்டையைச் சுட்டுச் சாம்பலாக்கி அச்சாம் பலை ஓர் சட்டியில் பாதி வைத்து அதன் நடுவில் தாளகத்தை வைத்து மேல் சாம்பல் கொட்டி வாய் மூடி ஒரு நாள் எரிக்கப் பஸ்மமாகும். குறிப்பு :— தாளகத்தை இவ்விதம் எரிப்பு முறை களில் பஸ்மம் செய்வதுதான் உத்தமம் புடமிடுவதால் பஸ்ம மாகிய போதிலும் குணமற்று விடுகின்றது. தாளக பஸ்மம் :— (10) தாளகத்தைச் சுண்ணாம்பு நீரால் அரைத்துக் காயவைத்துப் பிறகு நாயுருவி சமூலம் சுட்டுச் சாம்பல் செய்து அதில் ஜலத்தை விட்டுத் தெளிவு இறுத்து அந்தத் தெளிவு நீரால் அரைத்துப் பில்லை தட்டிக் காய வைத்துப் பிறகு ஓர் சட்டியில் பூசணிக் கொடியை உலர்த்திச் சுட்டுச் சாம்பலாக்கி அந்த சாம்பலை பாதி யளவு கொட்டி அதன் நடுவில் யவக்ஷாரத்தையும் பொடி செய்து பரப்பி அதில் ஷை பில்லையை வைத்து மேலும் யவக்ஷாரத்தால் பில்லைக்குப் பரப்பி அதன் மேல் ஷை சாம்பலைச் சட்டி நிறையக் கொட்டி வாய் மூடி 12 மணி அடுப்பேற்றி காடாக்னியாக எரித்து ஆற விட்டு எடுத்து முன் போல உபயோகிக்கக் குஷ்டம் முதலி யவை நீங்கும். குறிப்பு :— நூல்களில் சட்டியின் அடியில் யவ க்ஷாரம் பரப்பி அதன் மேல் சட்டி நிறையச் சாம்பலைக் கொட்டி எரிக்கும்படி காணப்படுகின்றது. இம்முறையில் சில அசௌ கரியமிருப்பதுபற்றி மேல் சொன்ன விதமாகச் செய்வது வழக்கம். இதுவும் உத்தமமான முறை. தாளக பஸ்மம் :— (11) பூசணி ரஸத்தில் தாளகப் பொடியைப் பாவனை செய்து பிறகு காடி அல் லது எலுமிச்சம்பழ ரசத்தில் பாவனை செய்து பிறகு சுத்த நீரில் கழுவி உலர்த்தி ஓர் மண் சட்டியின் நடுவில் அத்தாளகத்தை வைத்து மேல் சட்டி மூடி இலந்தைத் தழையை அரைத்து அந்த விழுதால் சந்து வாய் மூடி அடுப்பேற்றி அடிச்சட்டி சிவக்கும் வரையில் எரித்து ஆற விட்டு எடுத்துப் பார்க்க மாணிக்கம் போல சிவந்த நிறமான சிந்தூரம் காணும் வாதரக்தம், பகந்திரம், புரையோடும் புண்கள், குஷ்ட நோய்கள் முதலியன விலகும். இதற்கு ரஸமாணிக்யமெனப் பெயர். இதுவும் உத்தமமான முறை.

6. மனோசிலை :— இது கடைகளில் எங்கும் கிடைக்கும் சரக்கு. இச்சரக்கு சிகப்பாக விருக்கும். மிகவும் சிகப்பாக விருப் பதாகப் பார்த்து எடுத்துக்கொள்ள வேண்டும். இது தனித்தும்

கூட்டு மருந்துகளுடனும் உள்ளுக்கு உபயோகமாகின்றது. தமிழ் நூல்களில் இதன் உபயோகம் அதிகமாகக் கூறப்படவில்லை. வடமொழி நூல்களில் பல கூட்டு மருந்துகளில் இது சேருகின்றது. இது காஸம், க்ஷயம், காய்ச்சல், இவைகளில் விசேஷித்து குணம் கொடுக்கின்றது. தாளகத்திற்கு அடுத்தபடியாக இதைச் சொல்லலாம். மனோசிலை சுத்தி—இதைப் பொடி செய்து அகத்தி ரஸத்தால் ஏழு பாவனை செய்து உலர்த்தவும். சுத்தியாகும். மனோசிலை சுத்தி—இஞ்சி ரஸத்தால் முன்போல பாவனை செய்யச் சுத்தியாகும். தாளகத்தைப் போலவே இதையும் எரித்துப் பஸ்மம் செய்து கொள்ளலாம் தாளகத்தின் அளவு போலவே இதையும் உள்ளுக்கு உபயோகிக்கவும். தேன் அனுபானம் அல்லது கருந்த அனுபானத்தில் கொடுக்கலாம். இரண்டு அல்லது மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக உபயோகித்தாலும் துர்குணம் இருப்பதில்லை. கூட்டு மருந்துகளில் பஸ்மம் செய்து சேர்ப்பதில் நல்ல குணம் காணுகின்றது.

7. அஞ்சனக்கல்:— இது பூமியில் கிடைக்கும் பிறவிச் சரக்கு சாதாரணமாகக் கடைகளில் கிடைக்கும் இதை ஹிந்தியில் ஸுர்மா என்றும், ஆங்கிலத்தில் Antimony என்றும் சொல்லுகின்றனர். இது ஆங்கிலத்தில் ஔஷத முறைகளில் சேருகின்றது Kalaazar என்ற ஓர் நோயில் இதை இன்ஜக்ஷன் செய்வதில் மிகுந்த பலன் காணுவதாகச் சொல்லப்படுகின்றது தமிழிலும் அஞ்சனக்கல் என்றே அழைக்கின்றனர். நமது நூல்களில் இதன் உபயோகம் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. நூல்களில் இந்த அஞ்சனக்கல் ஐந்து விதமாகக் கூறப்படுகின்றது. சௌவீராஞ்சனம், ரஸவீராஞ்சனம், ஸ்ரோதாஞ்ஜனம், புஷ்பாஞ்ஜனம், நீலாஞ்ஜனம், எனப்பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் ரஸாஞ்ஜனம் என்பது நமது நூல்களில் பல முறைகளில் சேர்ந்து உள்ளுக்கும் வெளிக்கும் உபயோகப்படுகின்றது பிறவிச்சரக்கு மஞ்சள் நிறமாக விருக்குமென நூல்களில் சொல்லப்படுகின்றது ஆனால் விலைவுச் சரக்கான ரஸாஞ்ஜனம் நமக்குத் தற்காலம் கிடைப்பதில்லை. ஆகவே அதற்குப் பதிலாக ரஸாஞ்ஜனத்தை செயற்கை முறையில் தயாரித்து வடதேசக் கடைகளில் விற்கின்றனர். ரஸாஞ்ஜனம் செயற்கை முறை — மரமஞ்சளை இடித்துக் காஷாயம் செய்ய வேண்டும். அதாவது இருபது தோலா மரமஞ்சளை இடித்துச் சின்னப்படி இரண்டரைப்படி சுத்த ஜலம் விட்டு அடுப்பேற்றி நான்கில் ஒன்றாக வற்றவைத்து வடிகட்டி இரும்பு பாத்திரத்தில் அக்கஷாயத்தை அரைக்காபடி ஆட்டுப்பாலுடன் சேர்த்து அடுப்பேற்றி மெழுகாக ஆகும் வரை எரித்து எடுத்து பத்திரப்படுத்தவும். இதுவே ரஸாஞ்ஜனம் சேரும் முறைகளில் உபயோகிக்கப் படுகின்றது. அஞ்சனக்கல் முழுவதுமே கண் நோய்களில்

மேலுக்கு உபயோகப்படுகின்றது. அதிலும் விசேஷித்து ரஸாஞ்ஜனம் உபயோகப்படுகின்றது. மேலும் இந்த ரஸாஞ்ஜனம் அதிசார நோய்கள், ரக்தப் பெருக்கு இவைகளில் பல கூட்டு மருந்துகளுடன் சேருகின்றது. தற்காலம் கடைகளில் கருப்பு, வெளுப்பான அஞ்சனக்கல் கிடைக்கின்றது. இவற்றிற்கு முறையே நீலாஞ்ஜனம் என்றும் ஸௌவீராஞ்ஜனம் என்றும் பெயர். மற்றவைகள் கிடைப்பதில்லை யாகையால் அவைகளை லக்ஷணங்களுடன் நாம் எழுதவில்லை. நீலாஞ்ஜன ஸொவீராஞ்ஜனங்களின் சுத்தி—நீலாஞ்ஜனத்தைப் பொடிசெய்து எலுமிச்சம் பழ ரஸத்தில் ஓர் பாவனை செய்து கடும் வெய்யிலில் ஒரு நாள் காயவைக்கச் சுத்தியாகும். கரிப்பான் ரஸத்தில் பாவனை செய்ய இருவித அஞ்சனமும் சுத்தியாகும். குறிப்பு—வனகுலித்தாஞ்ஜனம் என்ற ஓர் வித அஞ்சனக்கல் வடதேசங்களில் "சாகஸூ" என்றும் "சிமிட" என்றும் இரு பெயர்களுடன் கடைகளில் கிடைக்கின்றது. அதை நன்றாகப் பொடி செய்து வஸ்திரகாயம் செய்து கண்களிலிட குழந்தைகளின் கண்நோய் சௌக்கியமாகும். இதைப் பஸ்மம் செய்யும்படி நூல்கள் கூறவில்லை.

8. கங்குஷ்டம்-கங்குஷ்டம் என்பது ஓர் விதக்கல் போன்ற கட்டியான வஸ்து உத்தர தேசங்களில் கிடைக்கின்றது. இதற்கு தமிழில் பெயர் கிடையாது. இது பேதியாகும் குணமுள்ளது. மஞ்சள் நிறமானது. ஹிமயமலையின் சுற்று மலைகளில் உண்டாவதாக நூல்கள் கூறுகின்றன. இதன் சுத்தி—சுக்கு கஷாயத்தில் மூன்று பாவனை செய்யச் சுத்தியாகும். குறிப்பு—இது சில மருந்துகளில் கூட்டுமருந்தாகச் சேருகின்றது. பிரசித்தமான நாராயண சூர்ணத்தில் இது ஓர் சரக்காகச் சேருகின்றது. இதைத் தனித்துக் கொடுப்பதில்லை. இவ்விதம் உபரஸங்கள் எட்டும் சொல்லி முடிந்தது. இனி சாதாரண ரஸங்கள் ஒன்பதெனமுன் சொன்னோம். அவையாவன—கம்பில்லம், பாஷாணம், நவாச்சாரம், சோகி, அக்னிஜாரம், கிரிசிந்தூரம், லிங்கம், மிருதார்சிங்கு ராஜாவர்த்தம், ஆகிய இவைகளே. இவைகளின் லக்ஷணங்களை இனிச் சொல்லுவோம்.

1. கம்பில்லம்—கம்பில்லமென்பது ஓர் பிறவிச் சரக்கு. இது செங்கல்பொடி போன்ற நிறத்துடனும் பொடியாகவும் இருக்கும். இது வாய்விளங்கத்தின் புஷ்பப் பொடியென சொல்லப்படுகின்றது. அது சரியல்ல. ஏனெனில் 'ஸௌராஷ்ட்ரதேசே சோத்பன்ன:" என்று இவ்வஸ்து ஸௌராஷ்டிர தேசத்தில் விளைவதாக நூல்களில் கூறப்பட்டிருக்கின்றது. வாய்விளங்க மரம் இந்தியா முழுவதும் காடுகளில் இருப்பதால் சௌராஷ்ட்ர தேசத்தில் விளைவதாகச் சொல்லுவது பொருந்த மாட்டாது. இது பேதிச் சரக்கு. தனியாகக் கொடுப்பதில்லை.

பல மருந்துகளில் கூட்டுச் சரக்காகச் சேருகின்றது. இதற்கு சுத்தி சொல்லப்படவில்லை யாதலால் அப்படியே மருந்துகளில் சேர்த்துக் கொள்ளவேண்டும் நாராயண சூர்ணத்தின் சரக்கு களில் இதுவும் சேருகின்றது.

2. பாஷாணம்—இது விளைவுச் சரக்கு. தற்காலம் நமது கடைகளில் வைப்புச் சரக்குதான் ஏராளமாகக் கிடைக்கின்றது. சில சமயங்களில் பிறவிச்சரக்கும் கிடைக்கின்றது. பிறவிச்சரக்கு இந்துப்பு நிறமாகச் சற்றேறக்குறைய இருக்கும். இதில் பல பேதங்களுண்டு. அவற்றுள் வெள்ளைப் பாஷாணமும், கௌரி பாஷாணமும் முக்கியமாகும். சங்கு பாஷாணம் என்ற ஓர் வகையும் நமது கடைகளில் கிடைக்கின்றது. வெள்ளைப் பாஷாணத்திற்கும் சங்கு பாஷாணத்திற்கும் நிறத்தில் சற்று பேதமுண்டு. வெள்ளைப் பாஷாணம் பல மருந்துகளில் கூட்டுச் சரக்காகச் சேருகின்றது. இதைத் தனித்தும் கொடுக்கலாம். கௌரிபாஷாணமும் இவ்விதமே. இது மஞ்சள் நிறமாக இருக்கும். பாஷாணங்கள் தமிழ் நூல்களிலும் விரிவாக வைப்பு முறையுடன் சொல்லப்பட்டிருக்கின்றன. வெள்ளைப்பாஷாணம் ஆங்கில வைத்தியத்தில் மிகவும் உபயோகமாகின்றது. சிகப்பு பாஷாணம், கருப்புப்பாஷாணம் என்ற இருவகை வடதேசங் களில் கடைகளில் விற்கப்படுகின்றன. அவற்றைப்பற்றிய விவரம் நூல்களில் காணப்படவில்லை ஆனால் அவை வழக்கத்தில் உபயோகப்பட்டு வருகின்றன. பாஷாணம் முக்கியமாகக் காய்ச்சல்களில் உபயோகமாகின்றது. முறைக் காய்ச்சல்களில் குனைனுக்கு அடுத்தபடியாகக் குணம் கொடுக்கின்றது. குனைனை ஒத்துக்கொள்ளாத சரீரங்களில் வெள்ளைப்பாஷாணம் பயன்படுகின்றது. பாஷாணங்களின் சுத்திமுறை—இப்பாஷாணங் களைச் சுண்ணாம்பு நீரில் தோலா யந்திரமாகக்கட்டி ஒரு யாமம் எரிக்கச் சுத்தியாகும். பாஷாணங்களில் வெள்ளைப்பாஷாணம் மாத்திரம் பஸ்மம் செய்ய சாத்தியமாகின்றது. மற்றவைகளைப் பஸ்மம் செய்யும் முறை தெரியவில்லை. வெள்ளைப்பாஷாணம் பஸ்மம் செய்யும் முறையை ஔஷதசாரத்தில் பார்க்கவும் நூல்களில் கௌரீபாஷாணம் என்று பொதுப்பெயர் கொடுக்கப் பட்டு அதன் பேதங்களாக பளிங்கு பாஷாணம், சங்குப் பாஷாணம், மஞ்சள் பாஷாணமென்றும் மூன்று பாஷாணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் வியவஹாரத்தில் மஞ்சள் பாஷாணத்தைக் கௌரீபாஷாணமென்றும் மற்றவைகளை அதன் பெயர் கொண்டும் அழைக்கின்றனர். மஞ்சள் பாஷாணத்தைவிட சங்கு பாஷாணம் உயர்ந்ததென்றும் அதைவிட பளிங்கு பாஷாணம் உயர்ந்ததென்றும் நூல்களில் கூறப்படுகின்றது.

3. நவாச்சாரம்—இது சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய ஓர் உப்பாகும். இதை ஆங்கிலத்தில் அமோனியம் என்ற பெயருடன்

பலவித உப்புகளாகவும் ஜயநீராகவும் செய்து உள்ளுக்கு உபயோகிக்கின்றனர். நமது நூல்களில் இதற்கு விசேஷித்து உபயோகம் காணப்படவில்லை. ரஸபஸ்மம் எரிப்புகளிலும் தேன் மருந்துகளிலும் இது சேருகின்றது. மற்றப்படி உள்ளுக்கு உபயோகப்படும் மருந்துகளில் இது கூட்டு மருந்தாகவோ அல்லது தனித்தோ சேருவதாகக் காணப்படவில்லை. ஸ்வர்ண வங்கம் போன்ற ரஸபஸ்மம் எரிப்புகளில் இது கூட்டு மருந்தாகச் சேரும்பொழுது தங்கநிறமும் ஓர் பளபளப்பும் ரஸத்திற்குக் கொடுக்கின்றது

4. சோகி—இதைப் பலகரை என்றும் சொல்லுவார்கள். சுமார் அரைத்தோலா இடையுள்ள சோகி உத்தமமாகும். அதோடு நடுமுதுகில் மஞ்சள் நிறமாக இருப்பது உத்தமம். இது பல மருந்துகளில் கூட்டுச்சரக்காகச் சேருகின்றது. தனித்தும் உபயோகமாகின்றது. ஆயுர்வேத நூல்களில் இதற்கு மெத்த உபயோகம் காணுகின்றது தமிழ் நூல்களில் இதன் மதிப்பு அதிகம் காணவில்லை. "ஹரிதே குஷ்டம் ரக்தபித்தம் அந்யான் ரோகான் விநாசயேத்" குஷ்டம், ரக்தபித்தம், என்ற இரு நோய்கள் நீங்கலாக மற்ற நோய்கள் அனைத்திலும் இது குணம் கொடுக்கும் என்பது இவ்வசனத்தின் பொருள். அதிசாரம், கிரஹணீ, காசம், க்ஷயம், ஆகிய இந்நோய்களிலும் விசேஷித்து சூலம் பரிணாமசூலம் ஆகிய நோய்களிலும் இது மிகுந்த நன்மை செய்கின்றது. இந்நோய்களில் இச்சரக்கு சேராத கூட்டு மருந்தே கிடையாதெனக்கூடச் சொல்லலாம். இதன் சுத்தி—எலுமிச்சம்பழ ரசத்தில் ஒரு நாள் ஊரப்போட்டு எடுக்கச் சுத்தியாகும். குறிப்பு—இதைப் பஸ்மம் செய்யும்படி நூல்களில் கூறவிட்டாலும் கூட நமது அனுபவத்தில் இப்பஸ்மம் நல்ல குணம் கொடுக்கின்றது. பஸ்மம் செய்யும் முறை—எலுமிச்சம்பழ ரசத்திலே அரைத்து பில்லைசெய்து காயவைத்து ஓர் அகலில் வைத்து மேல் அகல் மூடி வாய்க்குச் சீலைமண் செய்து வாராஹ புடமிட பஸ்மமாகும். சில சமயங்களில் எலுமிச்சம்பழ ரசத்தால் அரைப்பும் சுத்தியும் குறைந்திருந்தால் நல்ல பஸ்மம் ஆகாமல் கொஞ்சம் சுன்னம் அம்சம் கலந்திருக்கும். அதை உள்ளுக்கு உபயோகிப்பதில் குற்றமில்லை. எலுமிச்சம்பழ ரஸத்தால் நன்றாக பாவனை செய்த பிறகு அதாவது சோகிகளை நன்றாகப் பொடி செய்து ஷை ரஸத்தால் 3—4 நாட்கள் பாவனையும் செய்து பிறகு பில்லை தட்டிக் காயவைக்க வேண்டும். இவ்விதம் செய்தால் சரியான பஸ்மமாகும். இதை உசிதமான அளவில் குழந்தை முதல் பெரியோர்கள் வரை தேன் முதலிய அனுபானங்களில் கொடுக்கலாம்.

5. அக்னிஜாரம்—இது கஸ்தூரி போன்று ஓர் ஜந்துவினிடத்தில் உண்டாகும் வஸ்துவாகும். அக்னிநக்ரம் என்ற ஜல

ஜந்துவின் ஜாராயுவில் உண்டாகும். ஓர் உப்பென நூல்கள் கூறுகின்றன. இதுவே தமிழிலும் ஹிந்தியிலும் அம்பர் எனப் புகழப்படும் வஸ்துவாகும். தமிழ் நூல்களில் இதைப்பற்றிய பிரஸ்தாபம் இல்லை. ஆயுர்வேதத்திலும் இது மருந்துகளில் கூட்டுமருந்தாகச் சேரவில்லை. கஸ்தூரிபோல் இது விலைபெற்ற சரக்காகையால் பலர் இதைக் கையாளுவதில்லை. யூனானி வைத்தியத்தில் இது மிகவும் உபயோகமாகின்றது. இது பிறவியிலேயே சுத்தமானதால் இதற்குச் சுத்தி தேவையில்லை கஸ்தூரி போலவே இதைத் தனித்துக் கொடுக்கலாம். தனுர்வாதம் முதலியவைகளில் நன்மை செய்யும். பிராணன் ஒடுங்கும் காலங்களில் ஹிருதய பலத்தை அதிகப்படுத்த இது உதவுகின்றது. ஜன்னி முதலியவைகளில் இது நன்மையளிக்கின்றது அம்பர் என்பது யூனானிச் சரக்கென்றும் ஆயுர்வேதத்தில் இது கிடையாதென்றும் பலருடைய எண்ணம். இது சுத்தப் பிசகு. அக்னிஜாரம் என்பது அம்பர் எனத்தெரிந்துகொள்ளாதது நமது குறையாகும்.

6. கிரிசிந்தூரம்—மலைகளில் பெரிய பாறைகளின் அடியில் ரஸம் தங்கி அது சூரியவெப்பம் முதலியவைகளால் நீத்து பிறவியில் சிந்தூரமாகும். இதை கிரிஸிந்தூரமென நூல்கள் கூறுகின்றன. இந்த வஸ்து தத்காலம் எங்கும் கிடைப்பதில்லை ஆகவே இதைப்பற்றி நாம் அதிகம் தெரிந்துகொள்ள முடியவில்லை. ரஸ சிந்தூரத்தின் குணமே இதற்குமுண்டு. இது கூட்டு மருந்துகளில் சேரக்காணவில்லை. கடைகளில் கிடைக்கும் ஈயசிந்தூரம் என்பது வேறு வஸ்துவாகும்.

7. லிங்கம்—இது சாதாரணமாக எல்லாருக்கும் தெரிந்த வஸ்து கடைகளில் கிடைக்கும். இதிலிருந்து வாலைரஸம் எடுக்கலாம். இதன்சுத்தி—இஞ்சிரஸம், எலுமிச்சம்பழ ரஸம், இவைகளில் ஏதாவது ஒன்றால் ஏழு தடவை பாவனை செய்து உலர்த்திக்கொள்ளச் சுத்தியாகும். சுத்த லிங்கத்தைத் தேவையானவளவு எடுத்து அதில் பாதியிடை அரத்தூள் சேர்த்து நன்றாகக் கலந்து பொடிசெய்து ஓர் சட்டியில் போட்டு மேலுக்கு ஓர் சட்டி மூடி சந்துவாய்க்குச் சீலைமண் செய்து காயவைத்து அடுப்பேற்றி 12-மணி எரித்து ஆறவிட்டு எடுத்துப் பார்த்து மேல் சட்டியில் பதங்கித்திருக்கும் ரஸத்தை வழித்து எடுத்துக் கொள்ளவும். இந்த ரஸம் சுத்தமானது. ஆகவே கடை ரஸத்திற்குச் செய்யவேண்டிய சுத்தி இதற்குத் தேவையில்லை. சட்டியில் போடும் லிங்கத்தின் இடையில் முக்கால் இடை ரசம் காணும். ஆனால் சில லிங்கங்களில் சத்து குறைவாயிருந்தால் இந்த இடை காணாது. பாதியிடை காணும். குறிப்பு—அயம் முதலியவைகளைச் சிந்தூரம் அல்லது பஸ்மம் செய்ய வேண்டியிருந்தால் கீழே சொன்னபடி லிங்கத்துடன் சேர்த்துச் சட்டியில் போட்டு மேல்

சட்டி மூடி முன்போல சீலைமண் செய்து முன்போல எரித்து ஆறவிட்டு எடுத்து மறுபடியும் புதிய லிங்கம் சேர்த்து முன்போல எரிக்கவும். இவ்விதம் மொத்தம் ஏழு தட்வை செய்ய உயர்ந்த பஸ்மமாகும். இவ்விதம் செய்வதில் நமக்கு வாலைரஸமும் கிடைத்து விடுகிறது. வேண்டிய உலோகமும் பஸ்மமாகிவிடு கின்றது. லிங்கத்தைப் பலவிதமாகப் பஸ்மம் செய்கின்றனர். ஆயுர்வேத நூல்களில் எரிப்பு முறையில் ஓர் பஸ்மமுறை சொல்லப் பட்டிருக்கின்றது. சில வைத்தியர்கள் லிங்கவெள்ளை என்ற பெயருடன் லிங்கத்தை ஓர் வழியாக வெளுப்பாகச் செய்கின்ற னர். ஜயநீரைக் கொண்டு அரைத்து லகுபுடமிடுவதில் இவ்விதம் வெளுப்பு நிறமுண்டாகின்றது. பல மெழுகுகளில் லிங்கம் கூட்டு மருந்தாகச் சேருகின்றது. பொதுவில் தமிழ் நூல்களில் இதன் உபயோகம் சற்று அதிகமாகக் காணுகின்றது. பல வைத்தியர்கள் லிங்க சிந்தூரத்தைத் தனியாகச் செய்து காய்ச்சலில் விசேஷித் தும் மற்றும் வாத நோய்களிலும் உபயோகிக்கின்றனர். உண்மை யில் லிங்கசிந்தூரம் சாதாரணக் காய்ச்சல்களில் நன்மை செய் கின்றதேயன்றி பலமான காய்ச்சல்களில் சற்றும் பயன்படுவ தில்லை. ஆனால் கூட்டு மருந்தாகச் சேர்ந்து பல காய்ச்சல்களில் விசேஷ குணம் கொடுக்கின்றது. உதாஹரணமாக வெள்ளைப் பாஷாணம் அல்லது கௌரீபாஷாணம், வத்ஸநாபிக்கிழங்கு, வீரம், பூரம் இவைகளுடன் சேர்ந்து ஜன்னிக் காய்ச்சல்களில் விசேஷ குணம் கொடுக்கின்றது. இதைத் தனித்து ஷை வியாதி களில் கொடுப்பதில் குணம் கிடைப்பதில்லை. லிங்கசிந்தூரம் செய்யும் முறை—ஓர் மண் சட்டியில் பாதியளவு சேங்கொட்டை களை இரண்டாக நறுக்கிப் போட்டு அதன் நடுவில் லிங்கத்தை ஒரே கட்டியாக வைத்து அதன்மேல் சட்டி நிறைய சேங் கொட்டைகளை நறுக்கிப்போட்டு வாய்மூடாமல் அடுப்பேற்றி எரிக்க சில மணிகளில் தீப்பற்றி எரிந்து விடும். பிறகு ஆறவிட்டு லிங்கக் கட்டியை எடுத்துக் கல்வத்தில் நன்றாகப் பொடிசெய்து வைத்துக்கொள்ளவும். இரண்டு முதல் நான்கு கிரெயின்சு வரையில் தேன் முதலிய அனுபானங்களில் கொடுக்கலாம். இம் முறையில் லிங்கம் புகைந்து போவதில்லை. லிங்கக்கட்டியின்மேல் படிந்திருக்கும் சேங்கொட்டை அம்சங்களை ஓர் கத்திகொண்டு மெதுவாகச் சீவிவிட்டு எடுத்துக்கொண்டால் சிந்தூரம் நல்ல சிகப்பாக இருக்கும். அப்படியே எடுத்துக்கொண்டால் சற்று நிறம் குறைவாக இருக்கும். சேங்கொட்டை என்பதை சோராங் கொட்டை என்பர். இரண்டாவது முறை—அம்மான் பச்சரிசியை சமூலமாக அரைத்து லிங்கக்கட்டிக்கு கவசம் கட்டிக் காயவைத்து ஓர் அகலில் வைத்து மேல் அகல் மூடி முழுவதும் சீலைமண்செய்து காயவைத்து குக்குட புடமிட்டு ஆறவிட்டு எடுக்கச் சிந்தூரமாகும். குறிப்பு—புடம் ஜாஸ்தியாகில் லிங்கம் புகைந்துவிடும். ஆகவே புடத்தைச் சிறியதாகப் போடுவதுடன் பக்கத்திலிருந்துகவனித்து

லிங்கம் புகையும் ஜாடை கண்டால் புடத்தைக் கலைத்து அகலை அப்புறப்படுத்தி விடவேண்டும் பிறகு ஆறவிட்டு உடுத்துக் கொள்ளவேண்டும். லிங்கத்தைப் புடம் போடும் எந்த முறையிலும் இந்த ஜாக்கிரதை அவசியமாகும். கஜபுடமிட்டு ஆறவிட்டு எடுத்துப் பஸ்மமாவது என்பது லிங்கத்தில் யாருக்கும் சாத்தியமில்லை.

8. மிருதார்சிங்கு—வடமொழியில் மிருத்தாரசிருங்கம் என்ற சொல் தமிழில் மிருதார்சிங்கு என மாறியிருக்கின்றது. இது சாதாரணமாகக் கடைகளில் கிடைக்கும் சரக்கு. இது உள்ளுக்கு உபயோகமாவதில்லை. புண்களுக்குக் களிம்பாக வெளிப் பிரயோகத்தில் ஏராளமாகச் சேருகின்றது. தமிழ் நூல்களிலும் அவ்விதமே காணப்படுகின்றது தமிழ் நூல்களில் இரண்டொரு மருந்துகளில் கூட்டு மருந்தாக இது சேர்ந்து உள்ளுக்கும் உபயோகமாகின்றது. ஆயுர்வேத நூல்களில் இதன் உபயோகம் விசேஷித்துக் காணவில்லை. வழக்கத்திலும் பிளாஸ்திரி, களிம்பு இவைகளில்தான் வைத்தியர்கள் கையாளுகின்றனர். இதற்குச் சுத்தி தேவையில்லை.

9 ராஜாவர்த்தம்—இப்பெயருடன் இது வடதேசங்களில் கிடைக்கின்றது. இது ஓர்விதக் கல். இதற்குத் தமிழில் பெயர் கிடையாது. தமிழ் நூல்களில் இதைப்பற்றிய பிரஸ்தாபம் கிடையாது பூனாவில் இது காணப்படுகின்றது. இது தனித்தும் கூட்டு மருந்துகளிலும் சேருகின்றது. எலுமிச்சம்பழ ரஸத்தில் இரண்டு மூன்று பாவனை செய்ய இது சுத்தியாகும். இதன் பஸ்ம முறை—கொம்மட்டி மாதளை ரஸத்தில் அரைத்து பில்லைதட்டிக் காயவைத்து கஜபுடமிடவும். இவ்விதம் ஏழு புடமிட சற்று சிவந்து சிந்தூரமாகும். இரண்டு அல்லது மூன்று கிரெய்ன்சு அளவுக்கு தேன் முதலிய அனுபானங்களில் பிரமேஹம் முதலிய நோய் விலகும். குறிப்பு— இவைத் தனித்துக் கொடுப்பதில் குணம் காணவில்லை கூட்டு மருந்துகளில் சேருவதில் குணம் காணுகின்றது. இவ்விதம் சாதாரண ரஸங்கள் ஒன்பதும் பூர்த்தியாயிற்று ஆயுர்வேத நூல்களில் காணப்படாமலும் தமிழ் நூல்களில் மாத்திரம் மிகுந்து காணப்படும் மூன்று சரக்குகளை இனிச் சொல்லுகிறோம். அவையாவன: (1) வீரம், (2) பூரம் (3) கல்நார் ஆகிய இவைகளே. முதல் இரண்டும் வைப்புச் சரக்குகளாகும். ரஸத்துடன் சிறு வஸ்துக்களைச் சேர்த்து எரிப்பு முறையில் தயாரிக்கப்படும் இவ் வஸ்துக்கள் சற்றேறக்குறைய ரஸபஸ்மத்தின் குணங்களைக் கொடுப்பதோடு புதிய சில குணங்களையும் கொடுக்கின்றன. அவற்றுள் வீரம் என்பது கொடிய சரக்கு. உசிதமறிந்து உபயோகித்தால் மிகுந்த நன்மை செய்யும். அறியாமல் உபயோகித்தால் பல கெடுதிகள்

விளைந்து பிராணஹானி உண்டாகும். ஆகவே வைத்தியனுக்கு இது ஓர் உயர்ந்த ஆயுதமாகும். ஜன்னிகளில் இந்த ஒரு வஸ்து ஒப்புயர்வற்றது. இக்கொடிய நோயைக் கண்டிப்பதில் இது தலை சிறந்து விளங்குகின்றது. இதைத் தனித்தும் கூட்டு மருந்துகளுடனும் கொடுக்கலாம். இந்த வஸ்து சேர்ந்த பல மெழுகுகள், எரிப்பு முறையில் தயாரிக்கப்பட்ட சிந்தூரங்கள், தமிழ் நூல்களில் காணப்படுகின்றன. இதற்கு அடுத்தபடியாகப் பூரத்தைச் சொல்லலாம். பூரமென்பதே ரஸகர்ப்பூரமாகும். வீரம் போலவே பூரமும் தனித்தும் பல கூட்டு மருந்துகளிலும் சேருகின்றது. இவ்விரண்டு வஸ்துவும் கஜபுடமிட்டுப் பஸ்மம் செய்தால் அதில் குணம் சற்றும் காணாமல் போகின்றது. ஆகவே சுத்திசெய்து உபயோகிப்பதிலும் எரிப்பு முறைகளிலும் இதன் குணத்தைப் பூர்ணமாகக் காணலாம். பூரத்தை ஒரே கட்டியாக எடுத்து ஓர் சதுரக்கள்ளி மரத்தின் அடிபாகத்தைக் குடைந்து அதில் வைத்து அந்த சந்தை க்ஷ மரத்தின் துணுக்கால் மூடி ஒரு மண்டலம் கழித்து அந்தப் பூரக்கட்டியை எடுத்துக்கொண்டு தனித்தும் கூட்டு மருந்துகளிலும் சேர்க்கலாம். இதன் கூட்டு மருந்துகளைப் பலவகை என்ற நூலில் காணலாம்.

3. கல்நார்—இது ஓர் வகைக் கல்லாகும். இதைப்பற்றிய விவரம் ஆயுர்வேத நூல்களில் கிடையாது. தமிழ் நூல்களில் காணப்படுகின்றது. இது இருவகையாகும். எருமைக்கொம்பு கல்நார் என்றும் சாதாரணக் கல்நார் என்றும் அவைகள் அழைக்கப்படுகின்றன. இவற்றுள் எருமைக்கொம்பு கல்நார் எனபது சிறந்ததாகும். இது சாதாரணமாகப பற்பொடிகளில் சேர்ந்து பற்களுக்கு உறுதியைக் கொடுக்கின்றது. வாய்ப்புண் முதலிய ரோகங்களில் உள்ளுக்கு இதன் பஸ்மத்தைக் கொடுக்கலாம். பஸ்மமுறை—எருமைக்கொம்பு போலுள்ள நீல நிறமான கல்நாரைக் கல் உரலில் இடித்து சிறுசெருப்படிச்சாரில் நான்கு யாமம் அரைத்து உலர்த்தி அகலில் வைத்து மேல் அகல் மூடி சீலைமண் செய்து முப்பது எருவில் புடமிடவும். இவ்விதம் பத்து புடமிடவும். நீர் எரிச்சல், காங்கை, நாபிப்புண் ஆகிய உஷ்ண ரோகங்கள் தீரும். நீடித்து 4 முதல் 6 மாதம் சாப்பிட ஸ்தனங்கள், மர்மஸ்தானங்கள் இவைகளின் தளர்ச்சி நீங்கி இருக்கும். தீராத வாய்ப்புண் தீரும். இது சோழவந்தான் G. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அவர்கள் அனுபவித்த முறை. சில நூல்களில் (1) வெங்காரம் (2) படிகம் (3) சங்கு (4) பலப்பக்கல் (5) பணல் (6) போளம் (7) கோபிசந்தனம் (8) கடல்நுரை (9) சிறுசங்கு (10) முத்துச்சிப்பி (11) ஈயசிந்தூரம் ஆக இந்த 11 சரக்குகளும் உபரஸங்கள் எனப்படுகின்றன.

1. வெங்காரம்—இது ஓர் உப்பு. கடைகளில் சாதாணமாக கிடைக்கும். இது பல கூட்டு மருந்துகளில் சேருகின்றது.

அக்னிதீபனம் உண்டுபண்ணும் ஓர் மண் வாணாயில் தேவையான வெங்காரத்தைப்போட்டு அடுப்பேற்றி நீர் சுண்டி மலரும் வரையில் எரித்து எடுக்கச் சுத்தியாகும். எண்ணை வெங்காரம் என்ற வகை மருந்துகளுக்கு உயர்ந்தது.

2. ஸ்படிகம்-பலகரைக்குச்சொன்ன முறையில் சுத்தியைச் செய்து அதே விதமாகப் புடமிடவும். பஸ்மமாகும். பலகரையின் குணங்களே இதற்குமுண்டு. இது ஆயுர்வேத நூல்களில் சில வியாதிகளில் உபயோகிக்கப்பட்டுள்ளது நேத்ர ரோகங்களில் மேலுக்கு உபயோகிக்கும் வர்த்திகளில் சேருகின்றது.

3 சங்கு—இது சாதாரணமாக எல்லாரும் அறிந்ததே. பலகரைக்குச் சொன்ன முறையில் சுத்திசெய்து அவ்விதமே புடமிட பஸ்மமாகும் பலகரையின் குணங்களே இதற்குமுண்டு இது ஆயுர்வேத நூல்களில் பல மருந்துகளில் கூட்டு மருந்தாகச் சேருகின்றது தனித்தும் கொடுக்கலாம்.

4. பலப்பக்கல்—இது மாக்கல் போன்ற வஸ்து ஓர் வகைக் கல். முன்னாளில் இதைப் பலகையில் எழுதும் கருவியாக உபயோகித்து வந்தனர். இது ரஸபஸ்மம் எரிப்பு முறையில் உதவுகின்றது. மற்றபடி உள்ளுக்கும் வெளியிலும் இதன் உபயோகம் நூல்களில் கூறப்படவில்லை.

5 மணல்—இது அனைவருக்கும் தெரிந்த வஸ்து, எரிப்பு முறைகளில் வாலுகாயந்திரத்தில் மாத்திரம் இதன உபயோகம் கூறப்பட்டுள்ளது.

6. போளம்—கற்றாழை ரஸங்களில் இருந்து தயாரிக்கப்படும் இவ்வஸ்து கடைகளில் சாதாரணமாகக் கிடைக்கின்றது. இதில சிகப்பு, கருப்பு என்ற பேதங்கள் காணப்படுகின்றது. சிவந்த மஞ்சளாயும் பளபளப்புடையதான வகை எல்லாவற்றிலும் சிறந்தது கறுத்த மஞ்சளான வகை நடுத்தரமானது. கறுத்தும் துர்கந்தமுமான வகை எல்லாவற்றிலும் தாழ்ந்ததாகும். இதைக் கொத்தமல்லிச் சாற்றிலரைத்து மேலுக்குப் பூச குழந்தைகளுக்கு வரும் அக்கி முதலிய சிறிய கொப்பளங்கள் தீரும் நெல்லிக்காய் ரசத்தில் அரைத்துப் பூச மயிர் கறுத்து வளரும். காடியில் அரைத்துப் பூச, உரோமங்கள் உதிர்ந்து போவது நீங்கும் இவ்வஸ்து ஆங்கில வைத்தியத்திலுபயோகமாகின்றது. ஆயுர்வேத நூல்களில் இது அபூர்வமாகச் சில கூட்டுமருந்துகளில் சேருகின்றது. தமிழ் நூல்களில் இதன் உபயோகம் அதிகம் காணவில்லை.

7. கோபிசந்தனம்—ரஸபஸ்மம், எரிப்பு முறைகளில் இது சேருகின்றது ஓர் வித மண் இனத்தைச் சேர்ந்தது. (8) கடல்

நுரை—இது கடைகளில் கிடைக்கும் சரக்கு. இதன் உபயோகம் விசேஷித்துக் கானப்படவில்லை. கடல் நுரையை எண்ணெயில் போட்டுக் காய்ச்சி காது நோய்களுக்கு விடுவது சாதாரண வழக்கம்.

9. சிறுசங்கு-(10) முத்துச்சிப்பி—இந்த இரண்டு வஸ்துக்களும் அனேகமாக எல்லாரும் அறிந்ததே. சோகிகளுக்குச் சொன்ன சுத்தியும் பஸ்மமுறையும் இவைகளுக்கும் பொருந்தும். குணமும் அவ்விதமே (11) ஈயசிந்தூரம்—இது கடைச்சரக்கு கலும்பு முறைகளில் சேருகின்றது உள்ளுக்கு உபயோகம் ஆவதில்லை. ரஸம் 1, மகாரஸம் 8, உபரஸங்கள் 8, சாதாரண ரஸங்கள் 9, வெங்காரம் முதலிய உபரஸங்கள் 11, ஆக இவ்வித மாக மொத்தம் 37 சரக்குகள் இங்கு விவரிக்கப்பட்டன. அதோடு தமிழ் நூல்களில் அதிகப்படியாகக் காணப்படும் கல்நார், வீரம், பூரம், மூன்று சரக்குகளும் சேர்ந்து மொத்தம் 40 சரக்குகள் ரஸ நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த 40 சரக்கு களில் தத்காலம் நமக்குக் கிடைக்கக்கூடாதவை சபலம், கிரி சிந்தூரம் ஆக இரண்டு வஸ்துக்களே. இனி லோகங்களைச் சொல்லுவோம் லோகங்கள் ஒன்பதென முன்பு சொன்னோம்.

1 இரும்பு—இது அனைவரும் அறிந்ததே உருக்கு, இரும்பு என்று ஸ்தூலமாக இதை இருவகையாகக் கொள்ளலாம். உலோகம் ஒன்பதில் அயமே மிகச் சிலாக்கியமெனக் கூறப்படு கின்றது. நூல்களில் இதன் பேதங்கள் வர்ணிக்கப்பட்டிருந்த போதிலும் தத்காலம் கிடைப்பவை முன்சொன்ன இருவகை யாகும். உலோகங்களைச் சுத்தி செய்வது முக்கியமாகும். சுத்தி யில்லாத உலோகம் மிக தர்குணம் செய்யும். ஆங்கிலத்திலும் பலவித உப்புகளாக அயம் தயாரிக்கப்பட்டு உள்ளுக்கு உபயோகப் படுத்தப்படுகின்றது. இரும்பைத் தகடாகத்தட்டித் திரிபலை கஷாயத்தில் ஏழு தடவை பழுக்கக் காய்ச்சி தோய்ப்பது முக்கிய சுத்தியாகும். 1. அயச்செந்தூரம்—நன்றாக சுத்தித்த அயத்தூள் பலம் 2 எடுத்து காடி தெளித்து இடித்து எடுத்த உதியம்பட்டை சாறினால் அதை 4 யாமம் நன்றாக அரைத்து பில்லை தட்டிக்காய வைத்து கஜபுடம் போடவும். இப்படி புடம் 8ம் ஷை தனியான சாரால் புடம் 3ம் ஆக புடம் 11. (அகத்தியர் பரிபூரணம் 400ல் 261 - பாட்டுப்படி) 2. அயச்செந்தூரம்—(மதுரையில் தமிழ்ச் சங்கத்தில் பதிப்பித்த சார சங்கிரகம் முறை) நல்ல தேனிரும்புத் தூள், சுத்தித்துப் பிறகு நல்ல காட்டாமணக்கும் பாலில் சாமம் 4 அரைத்துப் பில்லை தட்டிக் காயவைத்துச் சீலை செய்து கஜபுடம் (எரு 100ல்) போடவும் இவ்விதம் புடம் 11 போடவும். பின் மருதம்பட்டை, நவ்வல்பட்டை, குமரி சமூலமும் சமமாக 3ம் சேர்த்து இடித்துச் சார் வாங்கியதில் முன் புடமான வில்லைகளை

ஊரப்போட்டு 25 நாளைக்குப் பின் எடுத்து அரைத்துப் புடம் முன் மாதிரியே போடவும் மருதம்பட்டை, நவ்வல்குமரி சம எடையில் அரைத்துப் புடம் 64 போடவும். பிறகு பொற்றிலை, கரிப்பான், சீந்தில் தண்டு (மேல் தோல் நீக்கியது) சமம் இடித்தச் சாரில் அரைத்துப் புடம் 25 போடவும். ஆக மொத்தம் 100 புடம் போடவும். சகல வியாதிக்கும் சரீரம் கெட்டிப்பட்டு நல்ல ரத்த விருத்திக்கும் தேன் நெய் சகல அனுபானத்திலும் கொடுக்க குணம். 3. உருக்குச்சிந்தூரம்—(தஞ்சை பிராண ரக்ஷாமிர்த சிந்து மஹாதேவ பண்டிதாள் முறை) வெள்ளாட்டு மூத்திரம் பிடித்து வடிகட்டி எட்டியிலையில் விட்டு இடித்தச் சாரில் உருக்கு உளியை பழுக்கக் காய்ச்சி காய்ச்சி 21 தடவை துவைக்கத் தகடு கள் இதள் உதிரும். வெட்டையாகும். பிறகு (சூர்ணித்து) காந்தத்தினால் எஃகுவை மாத்திரம் எடுத்துக் கல், மண், தூசி நீக்கி எடுத்து ஷை சாரில் 10 நாள் ஊரவைக்கப் பின் மெழுகு போலாகும். இதை ஷை சாரிலேயே அரைத்து அரைத்து 20 தடவை முழப்புடம் போடச் செந்தூரமாகும். குன்றி அரை வீதம் தேகபலம் அறிந்து அனுபானங்களில் கொடுக்கத் தேகம் பலக்கும். இச்சாபத்தியம். (4) (சட்டமுனி அயக்கல்பம்) நன்றாகச் சுத்தித்த தேன் இரும்புத் தூள் பலம் 8, சுத்தித்த நல்ல காந்தம் பலம் 8 கடுக்காத்தோல் பலம் 8, தானிக்காத் தோல் பலம் 8, நெல்லிவற்றல் பலம் 8, சீந்தில் (மேல் பாணி நீக்கி) தூள் பலம் 8, வெண் நாவல்பட்டைச் சார் படி 1, எலுமிச்சம்பழம் சார் படி 1, எல்லாவற்றையும் நன்றாகப் பழகிய பானையில் போட்டுக் கலக்கி மூடி அசையாமல் வைத்துவிடவும். உலர உலர அடிக்கடி கிண்டி கிண்டி விடவேணும். உலர்த்திக் காயவைத்து 3-ஸ்ரீ ஆன பிறகு நன்றாகத் துலக்கிய இரும்புச் சட்டியிலே போட்டு நன்றாக எரிய விடவும். நல்ல காடாக்னியாக 3 மணி ஆக ஆகச் சட்டியிலுள்ள மருந்து செந்தணலாக ஆகும். மாதளம்பூ வர்ணமானதும் பசுநெய் படி ½ விடவும். தூர நின்று வெட்ட வெளியில் தான் மருந்தைச் செய்யவேணும். நல்ல காடாக்னியாக 3 அடி உயரம் மருந்து பற்றி எரியும். பின் தணியும். மறுபடியும் 2 மணி எரித்து ஆறவிட்டு எடுத்து மறுபடி எலுமிச் சம்பழச்சாரில் அரைத்துக் காயவைத்துக் கஜபுடம் 3-ம் பொற்றிலை கரிப்பானில் புடம் 3 போதும். நல்ல ரத்தவிருத்தி யனுபவம். (5) மழை அயம்—சுத்தியான நல்ல அயத்தூளை மழை ஜலத்தி னால் அரைத்துப் புடம் 8 போட்டுப் பின் முன்போல் நவ்வல்பழச் சார், கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய்த்தோல், சீந்தில்கொடி சூர்ணம் சமம் போட்டு நாகப்பட்டைச் சாரும் விட்டு 3 மாதம் வரை வைத்து உலர்த்தி முன்போல் பசுநெய் விட்டு எரிக்கவும். ஆறின பிறகு அரைத்து எடுத்துக் கொடுக்கவும். நல்ல குணம். கீழ் சொன்ன ஐந்து வித அயச்சிந்தூரங்களும் சோழவந்தான் G. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் அனுபவித்த முறை. (6) அயச்

சிந்தூரம்—சுத்தி செய்த இரும்புப் பொடியின் இடைக்குப் பதினுறில் ஒரு பங்கு சுத்திசெய்த லிங்கம் சேர்த்து குமரிச் சாரால் இரண்டு யாமம் அரைத்துக் கஜபுடமிடவும். இவ்விதம் ஏழு புடமிட அயச்சிந்தூரமாகும். (7) அயச்சிந்தூரம்—திரிபலைக் கஷாயம், குமரீச்சார் இவைகளால் முறையே வகைக்குப் பத்துப் புடமிட சிந்தூரமாகும். குறிப்பு—அயத்திற்கு நூறு புடம் போடுவது மிகவும் உத்தமம். புடமும் அரைப்பும் குறைவதால் குணம் குறைந்து விடுகின்றது. ஆகவே பூர்ண குணம் விரும்பு பவர்கள் அதமபக்ஷமாக இரண்டு யாமத்திற்குக் குறையாமல் அரைக்கவேண்டும். மனேசிலை, கந்தகம் இவற்றுள் ஏதாவது ஒன்றை அயத்தூளுக்குப் பாதியளவு சேர்த்துக் குமரிசாரால் அரைத்து இவ்விதம் 12 கஜபுடமிட நல்ல சிந்தூரமாகும். அயச் சிந்தூரம் செய்யும் மற்றொரு முறையை ஸஹஸ்ரயோகம் 686வது ஸர்வரோகஹரம் என்ற பிரயோகத்தில் காணலாம். நூறு புட மிட்ட அயச்சிந்தூரம் என்று சிலர் சுவல்ப விலைக்கு வட தேசங் களில் விற்கின்றனர், அது அசம்பாவிதம். காந்தம்—இதுவும் அயத்தின் வகையைச் சேர்ந்ததே. அதைப்போலவே இதையும் புடம் போட்டுச் சிந்தூரம் செய்யவேண்டும் காந்தம் நமது கடை களில் கல்காந்தம், ஓட்டுக் காந்தமென இருவிதமாகக் கிடைக் கின்றது. இவற்றுள் கல்காந்தம் உபயோகமற்றது. சில ஊசி கள் பிடிக்கக்கூடியதாகப் பார்த்து காந்தத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

2. சுவர்ண பஸ்மம்—(1) தங்கரேக்கு ஒரு எடை, ரஸம் ஒரு எடை. இவைகளைக் கல்வத்தில் போட்டு எலுமிச்சம்பழ ரஸம் விட்டு அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து அதற்குச் சம எடை கந்தகம் எடுத்து இரண்டு பாகமாக்கி ஓர் பாகத்தை அகலில் பரப்பி அதன்மேல் ஷை வில்லையை வைத்து வில்லையின் மேல் மீதி கந்தகத்தைப் போட்டு அகல் வாயை மற்றொரு அகலால் மூடி வாய்க்குச் சீலைமண் செய்து 30 எருவில் புட மிடவும். இவ்விதம் 14 தடவை புடமிட பஸ்மமாகும். (2) தங்க பஸ்மம்—தங்கத்தகட்டிற்கு சம எடை நாகபஸ்மத்தை எடுத்து எலுமிச்சம்பழ ரஸத்தாலரைத்து அந்த விழுதைத் தங்கத் தகட்டிற்குக் கீழும்மேலும் தடவி உலர்த்தி அகலில் வைத்து வாய்மூடி சீலைமண் செய்து காயவைத்துக் கஜபுடம் இடவும். இவ்விதம் மூன்று புடம்போட பஸ்மமாகும். (3) தங்கத் திற்குச் சமயிடை ரஸம், கந்தகம், எடுத்து கலப்பைக்கிழங்கு ரஸத்தால் அரைத்து அந்த விழுதால் தங்கத் தகட்டின் மேலும் கீழும் தடவிப்பிறகு கலப்பைக்கிழங்கை அரைத்து உருண்டை செய்து அதற்குள் ஷை தகட்டை புதைத்து வைத்துப் பிறகு காயவைத்து ஓர் அகலில் வைத்து மேல் அகல் மூடி வாய்க்குச் சீலைமண் செய்து காயவைத்து கஜபுடமிடவும். இவ்விதம் மூன்று

புடமிட பஸ்மமாகும். (4) தங்கத்திற்கு இருமடங்கு ரஸம் எடுத்து எலுமிச்சம்பழ ரஸத்தால் அரைத்து விழுதைத் தங்கத் தகட்டிற்குத் தடவி காயவைத்து அதற்குச் சமயிடை கந்தகம் பொடி செய்து பாதிப்பொடியை ஓர் அகலில் போட்டுப் பரப்பி அதில் தகட்டை வைத்து அதன் மேல் மீதிப்பொடியைப்போட்டு வாய்மூடி சீலைசெய்து காயவைத்து முப்பது எருவில் புடமிடவும். இவ்விதம் 14 புடமிட பஸ்மமாகும் (5) தங்கத்தை குகையில் இட்டு உருக்கி அதன் எடையில் 16-ல் ஒரு பங்கு கருவங்கத்தைக் கொடுக்க வெட்டையாகும். அதைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழ ரஸத்தால் அரைத்துப் பில்லை தட்டிக்காயவைத்து அந்த எடை கந்தகம் எடுத்துப் பொடிசெய்து பாதிப்பொடியை ஓர் அகலில் போட்டு அதில் பில்லையை வைத்து மேல் மீதிப்பொடியை போட்டு வாய்மூடி சீலைமண் செய்து காயவைத்து முப்பது எருவில் புடமிடவும். ஆறவிட்டு எடுத்து எலுமிச்சம்பழ ரஸத்தால் அரைத்துப் பில்லைதட்டிக் காயவைத்து முன்போல கந்தகம் சேர்த்து முன்போல புடமிடவும். இவ்விதம் ஏழு புடமிட மஸ்மமாகும். (6) சுவர்ணமாக்ஷிகம், கருவங்கப்பொடி, தங்கத் தகடு இவைகளைச் சமயிடையாக எடுத்துத் தங்கம் நீங்கலாக மற்ற இரண்டையும் எருக்கம் தழை ரசத்தில் அரைத்து அந்த விழுதை தங்கத்தகட்டிற்குப்பூசி அகலில் வைத்து வாய்மூடி சீலைமண் செய்து காயவைத்துக் கஜபுடமிட பஸ்மமாகும்.

3 வெள்ளி பஸ்மம்-வெள்ளியைத் தகடு தட்டித் தணலில் காய்ச்சி அகத்தி ரசத்தில் தோய்க்கவும் இவ்விதம் மூன்று தடவை செய்யச் சுத்தியாகும். பஸ்மம் செய்யும் விதம்—(1) சுவர்ண மாக்ஷிகம், கந்தகம், வெள்ளித்தகடு, இவைகளைச் சமயிடை எடுத்து வெள்ளித்தகடு நீங்கலாக மற்றவைகளை எருக்கம் பால் விட்டு அரைத்து அந்த விழுதைத் தகட்டின் மேலும் கீழும் தடவி காயவைத்துப் பிறகு அகலில் வைத்து வாய்மூடி சீலைமண் செய்து காயவைத்துக் கஜபுடமிட பஸ்மமாகும். (2) வெள்ளித் தகட்டை இலேசாகக் கத்தரித்து அதன் எடைக்கு இருமடங்கு இலிங்கம் சேர்த்துப் பொடித்து இவைகளை ஓர் மண் சட்டியில் போட்டு மேல்சட்டி கவிழ்த்து மூடி சட்டிவாய்க்குச் சீலைமண் செய்து காயவைத்து அடுப்பேற்றி 12 மணி எரித்து ஆறவிட்டு ஜாக்கிரதையாக மேல்சட்டியை எடுத்து அதிலுள்ள ரஸத்தை பத்திரப்படுத்தவும். சட்டியின் அடியில் வெள்ளி பஸ்மமாகும். (3) தாளகம், கந்தகம், வெள்ளித்தகடு இவைகளைச் சமமாக எடுத்து எலுமிச்சம்பழ ரஸத்தால் அரைத்து பில்லை தட்டிக் காய வைத்து ஓட்டிலிட்டு ஓடுமூடி வாய்க்குச் சீலைமண்செய்து காய வைத்துக் கஜபுடமிடவும். இவ்விதம் மூன்று புடமிட பஸ்ம மாகும். (4) வெள்ளித்தகடு நான்கு பாகம், சுத்திசெய்த தாளகம் ஒருபாகம், எடுத்துத் தாளகத்தை எலுமிச்சம்பழ ரஸத்

தால் அரைத்து அந்த விழுதைத் தகட்டில் தடவி காயவைத்து ஓட்டிலிட்டு ஓடுமூடி சீலைமண் செய்து காயவைத்துக் கஜபுடமிடவும் இவ்விதம் மூன்று புடமிட மஸ்மமாகும் (5) சுவர்ண மாக்ஷிகத்தைக் கள்ளிப்பால் விட்டு அரைத்து விழுதை வெள்ளித் தகட்டில் பூசி காயவைத்து ஓட்டிலிட்டுப் புடமிடவும். இவ்விதம் 14 தடவை புடமிட பஸ்மமாகும். (6) ரஸம், கந்தகம், வெள்ளித் தகடு இவைகளைச் சமயிடை எடுத்து வெள்ளித்தகடு நீங்கலாக மற்றவைகளைக் கற்றாழை ரஸத்தால் அரைத்து விழுதைத் தகட்டிற்குப் பூசி காயவைத்து ஓட்டிலிட்டு ஓடுமூடி சீலைமண்செய்து முப்பது எருவில் புடமிடவும். இவ்விதம் இரு புடமிட பஸ்மமாகும். குறிப்பு—தனியாகத் தங்க பஸ்மமும் வெள்ளி பஸ்மமும் உபயோகிப்பதில் மிகுந்த நன்மை கிடைப்பதில்லை. கூட்டு மருந்துகளுடன் இவை சேரும்பொழுது மிகுந்த நன்மை கொடுக்கின்றது. லேகியம் முதலிய அனுபானங்களிலும் குணம் காணப்படுகின்றது.

4. தாமிரம்—உலோகங்களுக்குள் தாமிரம் மிகவும் புகழப்படுகின்றது. இது தனியாக உபயோகிக்கப்பட்டுச் சில வியாதிகளில் பூர்ண குணம் காணப்படுகின்றது. நம் நாட்டில் தாமிரத்தைப்பற்றி பல கதைகள் சொல்லப்படுவதுண்டு. அவைகளில் நம்பிக்கை கொள்ள வழியில்லை. இரண்டொருவேளை மருந்திலேயே குஷ்டம் முதலிய நோய் விலகிவிட்டதாக சிலர் சொல்லுவதுண்டு. இது சுத்த அசம்பாவிதம். குஷ்டம் போன்ற மகா நோய்கள் சில வேளை மருந்தில் நிவர்த்தியாகிவிடுகிறதென்பது பொருத்தமல்ல. இது பல கூட்டு மருந்துகளில் சேருகின்றது. தனித்தும் உபயோகமாகின்றது. இதில் களிம்பு இருப்பதால் வாந்தியும் பேதியும் காணுகின்றது ஆகவே நன்றாகச் சுத்தி செய்து பிறகு பஸ்மம் செய்யவேண்டும். இதன் களிம்பை அகற்றுவதில் காட்டுக்கருணைக் கிழங்கு ஒப்புயர்வற்றது என நூல்கள் கூறுகின்றன. நமது அனுபவத்தில் குருக்கத்திச்செடி (இது பிரம்மதண்டு போன்றது) மிகவும் நன்மை செய்வதைப் பார்த்திருக்கிறோம். குருக்கத்திச்செடியில் இருவகையுண்டு. ஒன்றின் புஷ்பம் வெளுப்பாக இருக்கும். இது சற்று துர்லபம். மற்றொன்று மஞ்சள் புஷ்பமுள்ளது. இவ்வகை எங்கும் சாதாரணமாகக் கிடைக்கும். இதைச் சமூலமாகக்கொண்டு வந்து இடித்து ரஸத்தை எடுக்கவேண்டும். இந்தச்செடி முழுவதும் முள்ளாக இருப்பதால் கிட்டிகொண்டு ரஸத்தைப் பிழிந்து எடுக்கவேண்டும். தாமிரத்தைத் தகடுதட்டிப் பிறகு தணலில் பழுக்கக் காய்ச்சி ஷை ரஸத்தில் தோய்க்கவேண்டும். இவ்விதம் இருபது தடவை செய்ய தாமிரம் களிம்பு அற்றுப்போகும். நூல்களில் சொல்லப்பட்ட சுத்தியையும் முதலில் செய்து கொள்ளலாம். அந்தச் சுத்திக்குப்பிறகு மேலே நாம் சொன்ன

சுத்தியையும் செய்துகொள்ளலாம். தாமிர சுத்தி—இந்துப்பை எருக்கம்பாலால் அரைத்து விழுதைத் தாமிரத்தகட்டில் பூசி தணலில் பழுக்கக் காய்ச்சி நொச்சி ரஸத்தில் தோய்க்கவும். இவ்விதம் ஏழுதடவை செய்ய சுத்தியாகும். தாமிர பஸ்மம்—(1) ரஸம், கந்தகம், தாமிரத்தகடு இவைகளைச் சமயிடை எடுத்து தகடு நீங்கலாக மற்றவைகளை எலுமிச்சம்பழ ரஸம் விட்டு அரைத்து அந்த விழுதைத் தாமிரத் தகட்டில் தடவி ஓட்டில் வைத்து ஓடு மூடி சீலைமண்செய்து கஜபுடமிடவும். இவ்விதம் மூன்று புடமிட பஸ்மமாகும். குறிப்பு—இவ்விதம் தயாரான பஸ்மத்தை குருக்கத்தி ரஸம் விட்டரைத்து ஏழு புடமிட வாந்தி முதலிய துர்குணமின்றி யிருக்கும். (2) கந்தகம் இரண்டுபாகம் தாமிரப்பொடி ஒரு பாகம் இவைகளை நன்றாக அரைத்து ஓட்டி லிட்டு கஜபுடமிட்டுப் பிறகு அதை எடுத்து அதற்குச் சமன் உப்பு சேர்த்து அரைத்துப் புடமிடவும். தாமிர எடை மாத்திரம் இருந்தால் முன்போல் உப்பு சேர்த்துப் புடமிடவும். இவ்விதம் 64 புடமிடவும் ஒவ்வொரு புடத்திலும் தாமிரப்பொடியை அன்னபேதி ஜலத்தால் பாவனை செய்யவும். காட்டுக்கரணைக் கிழங்கு ரஸத்தில் அரைத்து மூன்று புடமிடவும். பஸ்மமாகும். குறிப்பு—தாமிரத்தைப் பலர் பலவிதமாகப் பஸ்மம் செய் கின்றனர். நேர்வாளமுத்தை ஜலம் விடாமல் அரைத்துத் தகட்டிற்கு அதைப்பூசி புடமிட்டால் அது பஸ்மமாகின்றது. இவ்விதமான பஸ்ம முறைகள் பல காணப்படுகின்றன. விசேஷ பலன்கள் காணப்படவில்லையாதலால் அம்முறைகளை எழுதவில்லை.

5. வெள்வங்கம்—வங்கத்தில் இருவகையுண்டு. வெள் வங்கம் அல்லது வெள்ளீயம், கருவங்கம் அல்லது காரீயமென அவைகள் அழைக்கப்படுகின்றன. வங்கம் இருவகை வங்கத்தை யும் நன்றாகச் சுத்திசெய்து உபயோகித்தால் அது அமிருதமாகும். இவைகள் தனித்தும் பல கூட்டு மருந்துகளில் சேர்த்தும் உபயோகிக்கப்படுகின்றன. மேகநோய்களிலும் நீரிழிவுநோய் களிலும் தனித்தும் அப்பிரகச் சிந்தூரம் முதலியவைகளுடன் சேர்ந்தும் இது மிகுந்த நன்மையளிக்கின்றது. சூதக நோய்களில் இது ஒப்புயர்வற்றது. இதன் சுத்தி-இதைத் தணலில் உருக்கி எருக்கம்பாலில் சாய்க்கவும். இவ்விதம் மூன்று தடவை செய்யச் சுத்தியாகும். கருவங்கத்திற்கும் இதுவே சுத்தி. வெள் வங்கத் திற்குச் சொல்லப்படும் சுத்திமுறைகளும், பஸ்மமுறைகளும் பெரும்பாலும் கருவங்கத்திற்கும் பொருத்தமானதே. பஸ்மம்—(1) ஓர் மண் வாணலியை அடுப்பில் வைத்து அதில் தேவையான சுத்தித்த வெள்வங்கத்தைப் போட்டு அது உருகினபிறகு வெள் வங்கத்தின் எடையில் நான்கில் ஒரு பங்கு புளியம்பட்டை, அரசம்பட்டை இவைகளின் பொடியைப் போட்டு இரும்புக் கரண்டியால் இரண்டு யாமம் கிளரிக்கொடுக்கப் பொடியாகும்.

அந்தப் பொடியைக் கல்வத்திலிட்டு அதற்குச் சமயிடை சுத்தித்த தாளகம் சேர்த்து எலுமிச்சம்பழ ரஸத்தால் அரைத்து பில்லை தட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டு கஜபுடமிடவும். ஆறவிட்டு எடுத்து வங்கத்தின் எடைக்குப் பத்தில் ஒரு பங்கு தாளகம் சேர்த்து முன்போல ஒரு யாமம் அரைத்து முன்போல புடமிடவும் இவ்விதம் பத்து புடமிட பஸ்மமாகும் குறிப்பு :— புளியம்பட்டை, அரசம்பட்டை இரண்டும் சேர்ந்து வங்கத்தின் எடைக்கு நான்கில் ஒரு பங்கு இருக்கவேண்டும். அதாவது வங்கம் எட்டு தோலா எடுத்துக்கொண்டால் அரசம்பட்டை, புளியம்பட்டை, இவை வகைக்கு ஓர் தோலா எடுத்துக்கொள்ள வேண்டும். வங்கம் உருகின பிறகு பட்டைகளின் பொடியைக் கொஞ்சங் கொஞ்சமாக அதில் போட்டு இரும்புச் கரண்டியால் கிளரிக் கொடுக்கவேண்டும். இரண்டு யாமம் வரையில் பொடி காணும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். பொடியை விட்டு விட்டுப் போட வேண்டும். அதாவது கால் மணிக்கு ஒரு தடவை பொடி போட்டால் போதும். இரண்டு யாமம் என்பது 12 மணியாகும் வங்கம் பொடியாகும். அதை முன் சொன்ன தாளகம் சேர்த்து 6 மணி அரைக்க வேண்டும். ஒரு காசு அளவு பில்லை தட்ட வேண்டும் பில்லையைப் பருமனாகத் தட்டினால் புடத்தில் சேரும். அதாவது அந்தப்பொடி வங்கக் கட்டியாகிவிடும் அவ்விதம் கட்டியானால் அதை நீக்கி மற்றவைகளைப் புடமிடவும். (2) வங்கத்தைக் கூடிய மட்டில் இலேசாகத் தகடு தட்டி அதைச் சிறு துண்டுகளாகக் கத்தரித்து அந்தத் தகடுகளில் சமயிடை தாளகத்தை எருக்கம்பாலால் அரைத்து அந்த விழுதை ஷை தகடுகளில் தடவிக் காயவைத்துப் பிறகு கஜபுடத்திற்குத் தேவையான எருவில் பாதி அடுக்கி அதில் அரசம்பட்டைகளைப் பரப்பி அந்த அரசம்பட்டையின்மேல் ஷை தகடுகளை வைத்துத் தகடுகளின் மேல் அரசம்பட்டையைப் பரப்பி அதன் மேல் மீதி எருவை அடுக்கிப் புடமிடத் தகடுகள் பொரிந்து நிற்கும். அதை எடுத்து எலுமிச்சம்பழ ரஸத்தால் அரைத்து முன்போல பில்லை தட்டிக் காய வைத்து ஓட்டிலிட்டு ஓடுமூடி சீலைமண் செய்து காயவைத்து கஜபுடமிடவும், இவ்விதம் இரண்டு புடமிட பஸ்மமாகும். (3) அவ்விதமே புளியம்பட்டையிலிட பஸ்மமாகும். (4) வங்கத்தை ஓர் மண் பாண்டத்திலிட்டு அடுப்பேற்றி எரிக்க உருகும் அப்பொழுது வங்கத்தின் எடையில் நான்கில் ஒரு பங்கு நாயுருவியைப் பொடி செய்து அந்தப் பொடியைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தூவிக் கிளரிக்கொடுக்கப் பஸ்மமாகும். அதை முன்போல தாளகத்துடன் சேர்த்து முன்போல புடமிட பஸ்மமாகும்.

6. கருவங்கம் :— வெள்வங்கத்தின் குணம் சற்றேறக் குறைய இதற்குமுண்டு அதைப்போலவே இதையும் உபயோகிக்க

வேண்டும். சிந்தூர முறை— (1) வெற்றிலை ரஸத்தால் மனோ சிலையை அரைத்து அந்த விழுதைக் கருவங்கத் தகட்டிற் குத் தடவி கஜபுடமிடவும். இவ்விதம் 32 புடமிடச் சிந்தூர மாகும். குறிப்பு :— நூல்களில் இவ்விதம் கூறியிருந்த போதி லும் அது அனுஷ்டானத்திற்குச் சரி வராது ஆகவே அடியில் கண்ட மாதிரி கருவங்கத்தை வருத்துப் பொடி செய்து கொண்டு பிறகு அந்தப் பொடிக்குச் சமயிடை மனோசிலையைச் சேர்த்து வெற்றிலை ரஸத்தால் அரைத்துக் காசளவு பில்லைகளாகத் தட்டி காய வைத்து ஓட்டிலிட்டுப் புடமிடவும். புடத்தில் சீறினால் அதை விலக்கி மற்றவை புடமிடவும் (2) கருவங்கத்தை ஓர் மண் சட்டியிலிட்டு அடுப்பேற்றி அது உருகும்போது கருவங்கத் தின் எடைக்கு நான்கில் ஒரு பங்கு புளியம்பட்டை அரசம் பட்டை இவைகளின் பொடியைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தூவி இரும்புக் கரண்டியால் கிளரிக்கொடுக்கவும். ஒரு யாமத்தில் சிந்தூரமாகும். பிறகு அதை சமயிடை மனோசிலையைச் சேர்த்துக் காடிவிட்டு அரைத்து பில்லை தட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டுக் கஜபுடமிடவும். இவ்விதம் அறுபது புடமிடச் சிந்தூரமாகும். (3) நல்ல திரமான சுத்தியான கருவங்கத்தை ஓட்டில் இருப்பு சட்டியில் சுத்தித்த மனோசிலைப் பொடிதூவிக் கிண்டிக்கொடுக்க (சிறிது சிறிது நேரமாக கிராஸம் கொடுக்க) வங்கம் வெட்டை வெளிறின சிகப்பு ஆகும். பின் ஆடாதோடை குச்சியினால் 2 சாமம் வறுக்கவும், பிறகு எடுத்து மருந்து எடைக்குச் சமம் சுத்தித்த மனோசிலை சேர்த்து ஆடாதோடை ரஸத்தினால் 4 சாமம் எரித்து வில்லைதட்டி உலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி சீலை 7 செய்து உலர்த்தி புடம் எரு 100 இடவும். இப்படி மருந்தில் 4-ல் ஒரு பங்கு சுத்தித்த மனோசிலை சேர்த்தே முன் சாரினால் அரவை செய்யவும் இப்படியாகப் புடம் 30 போடச் சிந்தூரமாகும். (7) பித்தளை (8) வெங்கலம்:— இவைகளின் சுத்தியும் பஸ்மமுறையும் தாமிரத்திற்குச் சொல்லியபடி செய்ய வும். (9) துத்தநாகம்:— இதற்கு வடமொழியில் ஜஸதம் எனப் பெயர். இது தனித்தோ அல்லது கூட்டு மருந்துகளிலோ சேர்ந்து காணப்படவில்லை குறிப்பு — பித்தளை, வெங்கலம், நீங்கலாக மற்ற ஏழு லோகங்களும் சுத்தமானவை பித்தளையும், வெங்கலமும் தனி லோஹங்கள் அல்ல தாமிரமும் வங்கமும் கலந்து மிஸ்ர லோஹங்கள் உண்டாகின்றன, ஆகவே அவ்வி ரண்டும் மிசிர லோஹங்களாகும். கீழ்ச் சொன்ன லோஹங்கள் எல்லா வைத்தியர்களாலும் தினசரி சிகித்சையில் உபயோகப் படுகின்றன பெரும்பாண்மையான வியாதிகளில் இவைகளே முக்கிய மருந்துகளாகவும் இருக்கின்றன நூல்களில் காணப் படாத பல கைமுறைகள் நமது நாட்டில் காணப்படுகின்றன. அவற்றில் சில முறைகள் மிக உயர்ந்தவைகளாக இருக்கின்றன. சத்ருமித்ரங்களைச் சேர்த்துச் செய்யப்படும் சில முறைகள்

பார்வைக்கு மிக அழகாக விருந்தபோதிலும் குணம் சற்றும் இல்லாமல் இருக்கின்றன. ஆகவே குணபாகத்தைக் கொண்டு தான் உயர்வு தாழ்வை நாம் நிர்ணயிக்கவேண்டும். சித்தர் முறை இதோடு முடிந்து விடுகின்றது. இருந்த போதிலும் சில அருமையான முறைகளை பலவகை என்ற பாகத்தில் அப்போதைக்கப்போது வெளியிட்டு வருவதை வாசகர்கள் கவனிக்க விரும்புகிறோம்.